

T12171
R003K03
T. 12171

...நரி அத்திப்பாளையம்

# ...செம்பூத்த குல வரலாறு

# விதரி
# அத்திப்பாளையம்
# செம்பூத்தகுல வரலாறு

ஆசிரியர்
புலவர் செ.இராசு, பி.எச்.டி.,
தலைவர், கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

வெளியீடு
திருப்பணிக் குழுவினர்
அருள்மிகு பொன்னாச்சியம்மன் கோயில்
அத்திப்பாளையம்
க.பரமத்தி (வழி) 639 111
கரூர் மாவட்டம்

வெளியீடு : குடமுழுக்கு விழா நாள் 1.2.1998

ஆசிரியர் : புலவர் செ.இராசு



நூல் கிடைக்குமிடம்

1. திருப்பணிக் குழுவினர்
அருள்மிகு பொன்னாச்சியம்மன் கோயில்
அத்திப்பாளையம்
க.பரமத்தி (வழி) 639 111
கரூர் மாவட்டம்

அச்சிட்டோர் :

திரு. எஸ்.ஆர். பொன்னுசாமி,
அன்னபூர்ணா நகர்
– இரண்டாவது வீதி விரிவு
காந்தி நகர் (அ.நி.)
திருப்பூர் 641 603
(தொலைபேசி : 473093)

– திருப்பணிக்குழுவுக்காக –

பதிப்பகம்
**SCROLL EDP**, CBE - 2

விலை : ரூ. 25.00

பேரூர்
**22–1–98**

சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

பேரூராதீனம் கயிலை மாமுனிவர்
திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேரூர், கோவை – **641 010**

# வாழ்த்துப்பா

விதரி அத்திப்பாளையத்தில் விளங்கும் பொன்னாச்சியம்மை இரு
பதங்கள் போற்றும் செம்பூத்த குலத்தார் கொங்கு வேளாளர்
உதவும் பொருளால் திருக்கோயில் மணிமண்டபங்கள் கோபுரம்சேர்
குதலை மொழிசேர் மக்கள் மனை கும்பிபட்டேத்திப் பணி செய்தார்.

கொங்கில் உழவுத்தொழிலாலே குலத்தின்பெருமைதனைவளர்த்து
தெங்கும் மாவும் செழிப்பான பயிர் பலவும் சிறந்திடவே
தங்கள் உழைப்பால் வளஞ்சேர்க்கும் தக்கோர் தங்கள் குலதெய்வம்
மங்காப் புகழ் சேர்ந்திடப் போற்றி வந்தோர்க்குதவும் பண்பாளர்.

அன்னையாகும் பொன்னாச்சி அம்மன்கோயில் வழிபாட்டால்
முன்னோர் வழியில் செம்பூத்த மக்கள் முதன்மை பெற்றுயர்க
அன்பால் பழகி செந்தமிழால் அருச்சித் தேத்தி வழிபாட்டால்
இன்புற்றினிது வாழ்ந்திடுக இறைவியருளால் பல்லாண்டு.

செப்பமாகச் செம்பூத்தர் வரலாற்றுடனே நாட்டுயர்வு
செப்பும் கல்வெட்டாராய்ச்சி செப்பேடுயர்வாம் பாடல்கள்
முப்பால் உணரும் புலமை மிகு இராசு முயன்று நூலாக்கி
இப்பாரிடையே உலவியிட அளித்தார் இவர்தம் புகழ் வாழி.

(சாந்தலிங்க ராமசாமி அடிகள்)

கவிஞர் புதுமதியன்,
தமிழ்க் குடில்
வடக்கு நெடுஞ்சாலை,
சின்னதாராபுரம்–639 202.
கரூர் (வட்டம்), திருச்சி மாவட்டம்.

சின்னதாராபுரம்
20.1.98

அன்புடையீர்,

வணக்கம். நிகழும் 1.2.98 இல் குடமுழுக்கு நீராட்டு விழா நிகழ்வினையும், குடமுழுக்கு மலர் வெளியீட்டினையும் கண்ணுற்றேன். புகழ்பெற்ற கொங்கு நாட்டினுள் அரையநாட்டுள் அமைந்த விதரி அத்திப் பாளையத்தில் அமைந்த, செம்பூத்தான் குலதெய்வமாகச் சின்னப் பொன்னாட்சி அம்மன் விளங்கி அருள்பாலிப்பது அறிந்தேன். மேற்கண்ட கோயில் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு நிகழும் வேளையில் இக்கோயிலின் பூர்வ வரலாற்றை எனது அருமை நண்பர் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் முனைவர் திரு. செ. இராசு அவர்கள் தெளிவாகவும், விரிவாகவும் எழுதி வெளியிட்டிருப்பது வரலாற்றின் விளக்கமாக அமைந்து மகிழ்விக்கிறது.

இக்கோயிலின் காணியாளர்களான செம்பூத்தான் குலத்தவர்களைப் பற்றிய செய்திகளைத் தெளிவாகக் கூறியுள்ளமை வரலாறு தெரியாதவர்கட்கும் விளக்கமாக விளங்குகிறது.

இக்கோயில் திருப்பணியிலும் மலர்வெளியீட்டிலும் குன்றாத ஆர்வத்துடன் செயல்பட்டுள்ள என்னரும் நண்பர் திரு. கவிஞர். அ.பொ.கந்தசாமி அவர்களும், இப்பணியில் பெரிதும் ஈடுபாட்டோடு செயல்பட்ட முப்பாட்டுக்காரர் திரு.P.பொன்னப்பக்கவுண்டர், தர்மகர்த்தா சி. பொன்னப்பக்கவுண்டர், வாய்க்காலூர் திரு. வி.பி. பொன்னுச்சாமிக்கவுண்டர் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள்.

இக்குடமுழுக்குத் திருப்பணியைச் சீரும் சிறப்புமுற மலர்வெளியிட்டுச் சிறப்பித்த திருப்பூர். திரு.செ.ரா. பொன்னுசாமி அவர்களும் பெரிதும் பாராட்டுக்குரியவராவார். இம்மலர் அமைத்தோரையும், பெற்றுச் சிறப்பித்தவர்களையும் சின்னப் பொன்னாட்சி அம்மன் அருள் வழங்கிச்சிறக்கச் செய்வாள். வாழ்க அன்னையின் புகழ் !

அன்புள்ள
**புதுமதியன்**

(புலவர்.பு.சி. கந்தசாமி எம் ஏ., பி.எட்)
தமிழ்க்குடில், சின்னதாராபுரம் 639202.

# நன்றி மடல்

அன்புமிக்க சான்றோர்களே! கொங்கில் சிறந்த அரையநாட்டில் விதரி அத்திப்பாளையத்தில் ஆட்சிபுரியும் அன்னையர்கள் அருள்மிகு பெரிய பொன்னாச்சித் தாயாருக்கு 6.5.1938–ல் வெகுதான்ய வருடம் வைகாசி மாதம் 24–ம் தேதி திங்கட்கிழமை கும்பாபிசேகம் நடந்துள்ளது. அடுத்து 19–5–1976ல் நள வருடம் வைகாசி மாதம் 6–ம் தேதி அருள்மிகு சின்னப் பொன்னாச்சித் தாயாருக்கு கும்பாபிசேகம் நடந்தது. அடுத்து 27–3–85–ல் ரத்தாட்சி வருடம் பங்குனி மாதம் 14–ம் நாள் புதன்கிழமை அருள்மிகு பெரிய பொன்னாச்சித் தாயாருக்கு கும்பாபிசேகம் நடந்தது – அடுத்து ஈஸ்வர ஆண்டு தை மாதம் 19ம் நாள் 1.2.98 ஞாயிற்றுக்கிழமை அருள் மிகு சின்னப் பொன்னாச்சித் தாயார், கருமலை, கருப்பணன், மதுரை வீரன் ஆகிய ஆலயங்கள் புதியதாய் அமைத்து கும்பாபிசேகம் நடைபெறுகிறது.

இதற்காக இரவு பகல் பாராது உழைத்த தருமகர்த்தா, திரு. C.பொன்னப்பகவுண்டர் அவர்களுக்கும் அருமை அண்ணார் முப்பாட்டுக்காரர், திரு. P. பொன்னப்பகவுண்டர் – மகன் கந்தசாமி அவர்களுக்கும் வாய்க்காலூரிலிருந்து சிரமத்தைப்பாராது வந்து உழைத்துப் பணியாற்றிய அன்பு அண்ணார் திரு.V.P. பொன்னுச்சாமி அவர்களுக்கும் அன்னை சின்னப் பொன்னாச்சித்தாயின் கருவறை அமைக்க நிதியும் வழங்கி, மார்பிள்ஸ்கல் கொண்டுவந்து பதித்துக் கொடுத்த அருமைத் தம்பி கோவை பொன்மார்பிள்ஸ் உரிமையாளர் திரு.P. தண்டபாணி – தம்பி மனைவி திருமதி T. அகிலா தண்டபாணி ஆகியோருக்கும்,

தாயின் கோயிலுக்கு மின்சார ஒயரிங் செய்து கொடுத்த எனது அன்பு மாப்பிள்ளை கரூர் வடிவேல் நகர், எம்.என். பெரியசாமி அவர்களுக்கும் திருப்பணிக்கு தூண்டுகோலாகப் பணியாற்றிய கரூர் கணபதி டெக்ஸ் P. கந்தசாமி அரிசி மண்டி கண்ணன் சென்னிமலை – வ. சுப்பிரமணி, கோபால், அ–புதூர் காவடி பொன்னப்ப கவுண்டனர் ஆகியோருக்கும் ஆலயப்பணி நிர்மாணம் செய்த சிற்பி – புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடிராயவரம் P.குப்புச்சாமி மற்றும் இணைந்து பணியாற்றிய அனைத்து சகோதர சகோதரிகளுக்கும்,

கோபுரரப்பணி துவங்க ஆலோசனை வழங்கிய கோவை சிரவணம்பட்டி கௌமாரமடம் அமரர் தெய்வத்திரு சுந்தரசுவாமிகள் திருவடிக்கும் கூனம்ட்டி ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ இராஜலிங்க மாணிக்க சுவாமிகளுக்கும் பொன்னாச்யிம்மன் செம்பூத்தான் குலவரலாற்றை எழுத சிரமத்தைப்பாராது வருகை தந்து பார்வையிட்டு நூல் எழுதிக்கொடுத்த தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழக கல்வெட்டுப் பேராசிரியர் ஐயா புலவர் முனைவர் திரு.செ. இராசு

அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய மேலைச்சிதம்பரம் என்று புகழ்பெற்ற கோவை பேரூர் மடம் கயிலைச் சித்தர் திருமிகு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பொற்பாதங்களுக்கும்,

அணிந்துரை அளித்த மணல்நாட்டுக் கவிஞர் திரு. புதுமதியான் (பு. சி.க) அவர்களின் திருமுகத்துக்கும் ஆலயத்திருப்பணிக்கு அள்ளி வழங்கிய அன்புள்ளம் கொண்ட கொடை வள்ளல்களாக நான் ஏற்று போற்றி மதிக்கின்ற, மாமன் மைத்துனர், அத்தைமார், அக்கா தங்கைகள், பங்காளிகள், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சின்னம்மா, அண்ணன், அண்ணியர், தம்பிகள், கொளுந்திகள், மக்கள், மருமக்கள், பேரன் பேத்திகள் அனைவருக்கும் இம்மலர் வெளிவரத்தூண்டுகோலாகவும் துணையாகவும் இணையாக இருந்தவர், எனது தாத்தா அமரர் கண்டியார்கருப்பணகவுண்டருக்கும் எனது அப்பா அமரர் கண்டியார் பொன்னப்பகவுண்டருடன் நெருங்கிய தொடர்புடைய எனது பாசத்திற்கும் மரியாதைக்கும் உரியவரும் நெஞ்சின் நினைவலைகளிலே நிழலாடிக் கொண்டிருக்கும் எனதருமை பெரியப்பா செங்காட்டூர் திரு அமரர் எஸ்.பி. இராஜாக்கவுண்டர் அவர்களின் தலைமகன் திருப்பூர் எனது அகம்குளிர் அன்பினிய அண்ணார் திரு. செ.ரா. பொன்னுசாமி அவர்களுக்கும் அச்சிட்டு உதவிய கோவை அச்சக உரிமையாளர் திரு. நந்தகுமார் Scroll EDP, அவர்களுக்கும், இக்கோயிலைச் சார்ந்த காணியாளர்கள் அனைவருக்கும் அத்துணை உற்றம் சுற்றம் அனைவருக்கும், 1.2.98 குடமுழுக்கு நீராட்டு விழா சின்னப்பொன்னாச்சி அம்மன் திருக்கோயில் திருமண்ணிலே பாதம் பதித்த அத்துணை பொற்பாதங்களுக்கும் அருள்மிகு சின்னப் பொன்னாச்சி அம்மன், கருமலை, கருப்பண்ணன், மதுரை வீரன் ஆகிய தெய்வங்கள் சார்பாகவும் எங்கள் செம்பூத்தான் குலத்தின் சார்பிலும், எனது நெஞ்சம் நிறைந்த இதயம் கனிந்த நன்றியை, சிரம் தாழ்த்தி கரம் குவித்து பணிந்து படைக்கிறேன்! ஏற்பீர்களாக!

நன்றி! வணக்கம்!

அன்புள்ள

**அ.பொ. கந்தசாமி**

அத்திப்பாளையம் (அஞ்) 639 111
அரவக்குரிச்சி வட்டம்
கரூர் மாவட்டம்.

செ.ரா. பொன்னுசாமி

அன்னபூர்ணா நகர் II வீதி விரிவு
காந்தி நகர் அஞ்சல்
திருப்பூர் – 641 603

27.01.98

அன்புடையீர்,

வணக்கம்,

செம்பூத்த குல வரலாற்றை ஒரு புத்தக வடிவில் கொண்டு வர வேண்டுமென்பது எனது நீண்ட நாளைய அவா.

சின்னப் பொன்னாச்சி அம்மன் கோவில் திருப்பணி வேலைகள் குறித்து, சகோதரர் அத்திப்பாளையம் திரு. அ.பொ. கந்தசாமி அவர்களை 1997ம் ஆண்டு மத்தியில் சந்தித்த போது, எனது இந்த ஆவலை அவரிடம் தெரிவித்து, அதற்கான உரிய முயற்சி எடுக்க வேண்டினேன்.

திரு. அ.பொ. கந்தசாமி அவர்கள் தஞ்சை தமிழ் பல்கலைக் கழக கல்வெட்டியல் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. செ. இராசு அவர்களைக் கொண்டு இந்த வரலாற்று நூலை சிறப்பாக நமக்கு வழங்கியுள்ளார்கள்.

இவ்வரிய நூலை வழங்கிய பேராசிரியர் செ. இராசு அவர்களுக்கும் இதற்கான அரும் முயற்சியை மேற்கொண்ட சகோதரர் திரு. அ.பொ. கந்தசாமி அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த நூலுக்கு அணிந்துரை அளித்துச் சிறப்பித்திருக்கும் கவிஞர் புதுமதியன் அவர்களுக்கும், நல்லாசியுடன் வாழ்த்துப்பா அளித்துப் பெருமை சேர்த்திருக்கும் பேரூர் ஆதீனம் கயிலை மாமுனிவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கும் எனது பணிவான நன்றி கலந்த வணக்கங்கள்.

இந்நூலை, குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு உதவிய **SCROLL EDP**, CBE - 2 அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலை கொங்கு வேளாளர் சமுதாயத்திற்கு, குறிப்பாக செம்பூத்தர் கூட்டத்தாருக்கு, எனது தந்தையார் செங்காட்டூர் அமரர் S.P. ராஜாக்கவுண்டர் அவர்கள் நினைவாகச் சமர்ப்பிப்பதில் மிகவும் பெருமையடைகிறேன்.

நன்றி – வணக்கம்.

அன்புள்ள,

செ.ரா. பொன்னுசாமி.

## பொருளடக்கம்

1. வேளாளர் தோற்றமும் குடியேற்றமும் ........................ 1

2. கொங்குநாடு ........................ 5

3. அரையநாடு ........................ 9

4. காஞ்சிமாநதி ........................ 15

5. விதரி அத்திப்பாளையம் ........................ 21

6. பொன்னாச்சியம்மன் ........................ 25

7. பொன்னாச்சியம்மன் கோயிலும் விழாவும் ........................ 29

8. செம்பூத்த குலம் ........................ 35

9. செம்பூத்தகுலக் காணியூர்கள் ........................ 40

10. கொங்கு ஆவணங்களில் செம்பூத்த குலம் ........................ 43

11. செம்பூத்தகுலக் கல்வெட்டுக்கள் ........................ 47

12. செம்பூத்தகுல மாணிக்கி ........................ 50

13. குலகுருக்கள் ........................ 52

14. புகழ்பாடிய புலவர்கள் ........................ 56

15. பொன்னாச்சி அம்மன் ஊஞ்சல் பாட்டு ........................ 59

16. குடிப்பாட்டு மக்கள் வாழும் ஊர்கள் ........................ 64

16. அம்மன் போற்றிப் பதிகம் ........................ 67

# 1. வேளாளர் தோற்றமும் குடியேற்றமும்

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'
'மேழிச் செல்வம் கோழைபடாது'
'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'

என்றெல்லாம் புலவர் நாவால் போற்றியுரைக்கப்படும் இனம் வேளாளர் இனம். புகழ்மிக்க தொழில் உழவுத் தொழில். வான்புகழ் வள்ளுவன் வகுத்துரைத்த ஒரே தொழில் உழவேயாகும். உலகம் இயங்க, உலகினர் வாழ இன்றியமையாது வேண்டப்படும் தொழில் உழவுத் தொழில். அதை வாழ்விலும் தாழ்விலும் விடாமல் செய்து உலகை உபசரிக்கும் சான்றோர் உழவர்கள்–வேளாளர்கள்.

## புராணம்

சிறப்புமிக்க வேளாளர் புராணத்தை அழகிய கவிதை வடிவில் ஆக்கித் தந்தவர் வீராட்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர் அவர்கள். பெருங்காவியம் என்று போற்றப்படக்கூடியது. அந்நூலில் வேளாளர் தோற்றம் பற்றிப் புராண ஐதீகங்களுடன் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

வேளாளர் புராணத்தை அழகிய உரைநடை வடிவில் கோவை விளாங்குறிச்சி நா.மருதாசலக் கவுண்டர் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். இரண்டு நூல்களுமே அச்சிடப் பெற்றுள்ளன. அந்நூலில் வேளாளர் தோற்றம் கீழ்வருமாறு கூறப்படுகிறது.

கைலாசத்தில் சிவபெருமான் பார்வதி தேவியாருடன் வீற்றிருக்கும்போது நான்முகனாகிய பிரம்மா அங்கு வந்து சிவபெருமானால் உலகில் படைக்கப்பட்ட இயற்கை வசதிகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்று முறையிட்டார். சிவபெருமான் நான்முகனிடம் திருமாலைச் சென்று பார்க்குமாறு பணித்தார்.

திருமாலிடம் சென்று நான்முகன் மேற்கண்டவாறு முறையிடும்போது போதாயன முனிவர் அங்கு வந்தார். போதாயன முனிவரைத் திருமால் நான்முகனுக்கு அறிமுகம் செய்து வைத்து அவரையே வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

உழவு செய்யத் தெரியாமல், உணவைப் படைக்கத் தெரியாமல், உண்ணத் தெரியாமல் இருந்த இவ்வுலகுக்குக் கங்கைத் தாயின் அருகேயுள்ள திருவேணி சங்கமத்திலிருந்து மரபாளன் ஒருவனை உற்பத்தி செய்து அவனுக்குச் சகல வாழ்வியல் செய்திகளையும் கற்பிக்குமாறு போதாயனருக்குத் திருமால் ஆணையிட்டார்.

கங்கா தேவியின் சன்னிதானத்தில் வணங்கி மரபாளனைப் பெற்றுத் தன்னோடு இந்திரலோகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று போதாயன முனிவர் வேண்டினார்.

தான் பெற்ற மரபாளனை இரு கைகளாலும் பரிந்தெடுத்து உச்சிமோந்து ஆனந்த முத்தங்கள் தந்து 'பொன்னலகு சென்று சிறப்பெல்லாம் பெற்றுப் போதாயனருடன் மண்ணுலகு செல்க மகனே' என்று தாய் கங்காதேவி அனுப்பி வைத்தாள்.

இந்திரன் எல்லா இன்பங்களையும் குறைவறப் பெற்றிடுக என மரபாளனை வாழ்த்தினான். இந்திரன் மரபாளனைச் சரியாசனத்தில் இருக்கச் செய்து 'பார் முழுதும் ஏர்முனையைத்தான் நம்பியுள்ளது. 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்கிறார்கள். சகல பிணிகளிலும் தலைசிறந்த பசிப்பிணையைத் தீர்க்க உழவு வைத்தியத்தைத் தவிர வேறு ஏதேனும் உலகில் உண்டோ? உழவுத்தொழில் இல்லாமல் உலகில் என்னதான் நடக்கும். இதற்கு இணையான தொழில் எதுமில்லை' என்றான்.

இந்திரன், குபேரன் இவர்களின் பெண்மக்களை மணந்த மரபாளன் (வேளாளன்) பூமிக்கு வந்து பயிர்த்தொழில் செய்ய முற்பட்டான். கங்கையின் அருளால் தோன்றிய காரணத்தால் வேளாளர் கங்கா குலத்தினர், கங்கை மைந்தர் என்று அழைக்கப்பட்டனர்.

டாக்டர் எம்.ஆரோக்கியசாமி அவர்கள் வேளாளர்கள் கங்கா குலத்தினர் என்று கூறப்படுவதை வைத்துக் கங்கைச் சமவெளியில் வேளாளர் தோன்றினர் என்பார்.

## பட்டயம்

அவ்வாறு தோன்றிய வேளாளர்கள் தொண்டை நாட்டிலிருந்து சோழநாடு வழியாகக் கொங்கு நாட்டில் குடியேறினர் என்பதைக் கொங்கு நாட்டுப் பட்டயங்கள் பல கூறுகின்றன. பெரிய குலத்துத் தலைவர்களான வேணாடுடையார் பட்டயம் கீழ்வருமாறு கூறுகிறது.

*'ரிஷபகிரிச் சோழன் மகனை சேரமான் பெருமான்*
*பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டபடியினாலே*
*சோழ ராசாவின் மகள் தனக்குச் சீதனம் தன்*
*தோப்பானாரைக் கேட்டது யென்னவென்றால்*
*யெனக்குச் சிறிது வேளாளர் குடி வேணுமென்று*
*கேட்க நாற்பத்தெண்ணாயிரம் குடி சீதனம்*

*குடுத்தபடியினாலே சேரமான் பெருமான் கொங்கு மண்டலத்துக்கு கொங்கு வேளாளர் என்று பேரும் குடுத்து கொங்கு மண்டலத்துக்கு அழைத்து வந்ததன் பேரில் யிருந்த யெண்ணாயிரம் குடியும் கொங்கு மண்டலம் இருளுறைந்த காண்டாவனம் எல்லாம் வெட்டிக் கிராமம் உண்டு பண்ணி....'*

என்பது பட்டயப் பகுதியாகும். இவ்வாறே காங்கேயம் பல்லவராயர், ஊத்துக்குளி காலிங்கராயர், காடையூர்க் காங்கேய மன்றாடியார், சமத்தூர் வானவராயர் வமிசாவளிகள் எல்லாம் கூறுகின்றன. ஆனால் பயிரகுலத் தலைவர் பழைய கோட்டைப் பட்டக்காரர் வமிசாவளியில் மட்டும் சோழராசா பெண் கேட்க, பெண் கொடுக்க மறுத்துக் கொங்குநாடு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

*'சோழராசா தொரைத்தனத்தில் ஆதொண்டைச் செக்கிறவர்த்தி நாளையில் தன்னுடைய தேசத்திலே யிருக்கப்பட்ட வேளாள சாதியில் கல்யாணம் பண்ண வேணுமென்ங்குரதாக யெத்தினம் பண்ணுமிடத்தில் சம்மதிச்சு ராசாவே வரச்சொல்லி சகல சன்னாகத்தோடே ராசா வந்த இடத்தில் பெண் நாயை அலங்கரிச்சு பந்தக்காலில் பிடிச்சுக் கட்டிப்போட்டு 48000 கோத்திரத்து வேளாளர் சோழ ராசாவுக்கும் விரோதமாயி புறப்பட்டுச் சேர தேசாதிபதியிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.*

*சேரனுக்குக் கொங்கனென்னும் பேர் வரப்பட்டுயிருக் குரபடியினாலே கொங்கு வேளாளரென்று பேர் வரப்பட்டு...'*

என்பது பழையகோட்டைப் பட்டக்காரர் வமிசாவளிப் பகுதி. இதில் காரணம் வேறுபட்டாலும் தொண்டை நாட்டு, சோழநாட்டுத் தொடர்பு மறுக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலக்கியம்

ஒதாளர் அலகுமலைக் குறவஞ்சி என்பது ஒரு கொங்கு நாட்டுச் சிற்றிலக்கியம். சேரகுலச் சின்னத்தம்பி நாவலர் என்னும் புலவர் பாடியது. இதனைக் கருந்தும்பிப் புலவர் மகன் திருப்பூர் க. பழனிசாமிப் புலவர் பதிப்பித்துள்ளார். அந்நூலிலும் சோழன் மகன் சேரனை மணந்தவன் சீதனமாக வேளாளரை அனுப்புமாறு கேட்டதாகவும், சோழன் அவ் வேளாளர்களை நன்முறையில் நடத்த வாக்குறுதி அளித்தால் கொங்கு நாட்டுக்கு

அனுப்புவதாகக் கூறச் சேரமானும் வாக்குறுதி கொடுத்து வேளாளர்களை அழைத்துவந்தது கூறப்படுகிறது. அப்பாடல் பகுதி,

*'திக்கெலாம் மதிக்கும் சேரமான் பெருமாள்*
*குருத்தணி சோழன் குறைவிலா தீன்ற*
*உருத்திர மணியின் உடனக மகிழ்ந்து*
*மணம்புரிந் துலகில் வாழ்ந்திடும் நாளில்*
*குணமுடன் மகட்குக் குருத்தணி சோழன்*
*சீதன வரிசை சிலபொருள் உதவும்*
*போதினில் மகளும் பொருந்தியுள் மகிழ்ந்து*
*தந்தைதன் னுடனே சாற்றிய வசனம்*
*நந்தலில் லாத நாற்பத்தெண் ணாயிரம்*
*நற்குலத் தாரில் நாலிரு ஆயிரம்*
*நிற்கிரி கடனே னீடூழிக் காலம்*
*மதியுடன் எங்கள் மன்சபைச் சுமுகராய்*
*இதமுடன் இருக்க ஈகுவீர் என்னக்*
*கூறவும் மகிழ்ந்து குருத்தணி சோழன்*
*சேரமா னுடனே செப்புவர் சிறப்பாய்*
*மகளுரை தவறா வாய்மையால் யானும்*
*வகையுடன் வேளாண் மரபுளோர் அனுப்பில்*
*உங்களோ டொப்ப உயர்ச்சியாய்ப் பார்க்கில்*
*அங்குயான் அனுப்ப அகம்சம் மதிப்பேன்*
*என்றவர் சொல்லவே சேர மானும்*
*நன்றவர் நமது நாடதி பதியாய்*
*வரிசைமெய்ப் புகழுடன் வழங்குவேன் எனவும்*
*சரிசரி யெனவே தரணிபா லகரில்*
*கண்ணன் ஆனங்கூர்க் காணிமுத் தையனை*
*மன்னவர் சபையில் வரவழைத் தேதான்*
*எண்ணா யிரங்கோத் திரத்துளோர்க்கு அரசன்*
*நண்ணாகக் கொங்கு நாடதை விளக்கம்*
*செய்துதான் இருப்பீர் சென்மென அனுப்ப*
*உய்யவே சேரன் உலகுக்கு வந்தார்'*

என்பதாகும்.

இங்கு மாதிரிக்கு ஓரிரு பட்டயங்களும் ஓர் இலக்கியமும் எடுத்துக்காட்டாகக் காட்டப் பெற்றுள்ளன. நமக்குக் கிடைக்கும் எல்லாப் பட்டயங்களும் இலக்கியங்களும் கொங்கு வேளாளரின் மேற்கண்ட குடியேற்றத்தை வற்புறுத்திக் கூறுகின்றன. மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் மூவேந்தர் இருக்கும்போது அவர்கள் ஆதரவு பெற்றுக் காவிரி, அமராவதி, நொய்யல், பவானி ஆற்றங்கரை வழியாகக் கொங்கு நாடெங்கணும்

உள்பகுதிக்குச் சென்று காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிக் கொங்கு நாட்டை வாழ்வும் வளமும் உடையதாகச் செய்து வேளாளர் கொங்கு வேளாளர் ஆயினர்.

## குடியேற்றத்தின் காலம்

கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறிய காலம் சங்க காலமாகும். முன்பெல்லாம் இக்காலம் சற்றுப் பிற்காலம் ஆக இருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால் ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டுகள், அறச்சலூர்க் கல்வெட்டு, கொடுமணல் அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளில் பொறிக்கப்பட்ட கொங்கு வேளாளர் குலம் பற்றிய எழுத்துக்கள் இவைகள்மூலம் வேளாளர் குடியேற்றக் காலம் சற்று முன்னுக்குப் போகிறது. மேற்கண்ட இடங்களில் ஆந்தை, அந்துவன். ஒதாளன், சாத்தந்தை, ஆதன், பண்ணன், மணியன், வண்ணக்கன் போன்ற கொங்கு வேளாளர் குலங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பழந்தமிழ் எழுத்துக்களைக் காணுகின்றோம். இப் பொறிப்புக்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவையாகும்.

# 2. கொங்கு நாடு

நம் செந்தமிழ் நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டை நாடு, கொங்கு நாடு என்ற இரண்டு தணிப்பிரிவு நாடுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது.

கொங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இதனைப் பழங்கால இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. நீலகிரி, கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மாவட்டங்களின் பகுதிகளும், திண்டுக்கல் மாவட்டம் பழனிப் பகுதியும், கரூர் மாவட்டக் கரூர், குளித்தலைப் பகுதிகளுமே பழைய கொங்கு நாடாகும்.

*'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு*
*குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று-கிடக்கும்*
*களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு*
*குளித்தண் டலையளவு கொங்கு*

என்பது ஒரு தணிப்பாடல். இதன்மூலம் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை என்பதும், தெற்கு எல்லை பழனிமலை என்பதும், மேற்கு எல்லை வெள்ளியங்கிரிமலை என்பதும், கிழக்கு எல்லை குளித்தலை என்பதும்

பெறப்படுகிறது. வடக்கு எல்லை தலைமலை என்றும், தெற்கு எல்லை பன்றிமலை என்றும், மேற்கு எல்லை வாளையாறு என்றும் சில ஆவணங்கள் கூறுகின்றன.

தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது. தண்டியலங்காரம் என்னும் தமிழ் அணியிலக்கண நூலின் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று 'வியன் தமிழ்நாடு ஐந்து' என்று கூறுகிறது.

*'நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா*
*மறவேந்தன் வஞ்சியான் அல்லன்-துறையின்*
*விலங்காமை நின்ற வியன்தமிழ்நாடு ஐந்தின்*
*குலங்காவல் கொண்டொழுகும் கோ!*

என்பது அப் பாடலாகும்.

சைவ சமய நூல்களில் மிகவும் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம் 'தமிழ் மண்டிலம் ஐந்து'என்று கூறுகிறது. எனவே கொங்குநாடு தனிப்பிரிவு என்பது ஐயமின்றி உறுதிப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்குநாடு' தனி நாடாகவே குறிக்கப்பெறுகிறது.

'கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே' (புறநானூறு 373) எனச் சோழன் அழைக்கப் பெறுகின்றான். அவன் படையெடுத்துக் கொங்கு நாட்டை வென்று அடிப்படுத்திய செய்தி இதன்மூலம் பெறப்படுகிறது.

*'கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்*
*வெண்கோட்டு யானை போஒர் கிழவன்*
*பழையன்' (நற்றிணை 10)*
*'ஒளிறுவான் கொங்கர்' (குறுந்தொகை 383)*
*'ஆகெழு கொங்கர் நாடு' (பதிற்றுப்பத்து 22)*
*'கொங்கர் ஆபரந்தன்ன' (பதிற்றுப்பத்து 77)*
*'கொங்கர் படுமணி ஆயம்*
*நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா' (அகநானூறு 79)*
*'வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி' (அகநானூறு 253)*
*'கொங்கர் மணி அரை யாத்து*
*மறுகின் ஆடும் உள்ளி விழவு' (அகநானூறு 358)*

போன்ற பாடல்கள் மூலம் கொங்குக் குறுநில மன்னர்கள், கால்நடைச் செல்வம், கொங்கர் போர்த்திறன், அவர்கள் விழா ஆகியவை சங்க இலக்கியங்களில் தனிச்சிறப்புடன் குறிக்கப்பெறுகின்றன.

கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்த சிற்றரசர்கள் சங்க இலக்கியத்தில் அத்தி, அதியமான், ஆய், ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன், ஏற்றை, ஓரி, கங்கன், கட்டி, கடியநெடுவேட்டுவன், குமணன், கொடுமுடி, கொண்கானங்கிழான், தாமான் தோன்றிக்கோன், நன்னன், பழையன், புன்றுறை, பேகன், விச்சிக்கோ ஆகியோர் சுட்டிக் கூறப்பட்டுள்ளனர். கொங்கு நாட்டு நவ மணிகளும், வண்ணக் கல் மணிகளும், பாசிகளும், வேலைப்பாடு மிக்க பிற அணிகலன்களும் பலபடப் புகழ்ந்து பாராட்டப்படுகின்றன.

சேரன் செங்குட்டுவன் தனக்குச் சமமான அரசனாகக் கொங்கு நாட்டு இளங்கோசரைத் தமிழ்நாட்டு மூவேந்தருக்கு ஒப்ப மதித்துப் போற்றியிருக்கின்றான். நூற்றுவர் கன்னர், கடல்சூழ் இலங்கைக் கயவாகு, மாளுவ வேந்தர், சோழன் பெருங்கிள்ளி ஆகியோர் போலக் கொங்கு நாட்டு மன்னனையும் நட்பாகக் கொண்டிருக்கிறான். இதனைச் சிலப்பதிகாரம் மூலம் நாம் அறிகின்றோம்.

பேரூரை மேற்குக் கொங்கு என்று பாண்டியர் பழஞ் செப்பேடுகளும், இலக்கியங்களும் கூறுகின்றன.

*'குடகொங்கத்து அடல்மன்னனைக்*
*கொல்களிற் றொடும் கொண்டுபோந்து*
*கொடியணிமணி நெடுமாடக்*
*கடல்மதில் அகத்துவைத்தும்'*

என்று பாண்டியரின் சீவரமங்கலச் செப்பேட்டிலும், 'மீகொங்கில் அணிகாஞ்சிவாப் பேரூர்' என்று சுந்தரர் தேவாரத்திலும் குறிப்புக்கள் வருகின்றன. இதனால் கொங்கு நாடு தனிநாடு என்று பெறப்படுகிறது.

கொங்கு நாட்டிலிருந்து சமய அடியார்கள் மேற்கே சேரநாடு நோக்கிச் சென்றதை,

*'கொங்கு நாடு கடந்து போய்க்*
*குலவு மலைநாட்டு எல்லையுற'*
*'மலைநாடு கடந்தருளி... திருமுருகன்*
*பூண்டிவழிச் செல்கின்றார்'*

என்று பெரியபுராணம் குறிப்பிடும். சிலப்பதிகாரத்திலும் கொங்குநாட்டின் மேற்பகுதி அரசர் 'குடகக்கொங்கர்' என்று குறிக்கப் பெறுகிறார். கண்ணகியே 'கொங்கச் செல்வி' என்று சிலம்பில் குறிக்கப் பெறுகிறார்.

நூற்றாண்டுகள்தோறும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கொங்குநாடு தனிநாடு என்று கூறுகின்றன. சிலர் தொண்டை நாட்டைச் சோழநாட்டுடனும், கொங்கு நாட்டைச் சேர நாட்டுடனும் அடக்குவர்; அது பொருந்தாது.

கோவைகிழார் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் தம் 'கொங்குநாட்டு வரலாறு' என்னும் நூலில் கீழ்வருமாறு குறிக்கின்றார்.

*'சோழர்கள், ஒயிசளர், விசயநகரத்தார், மைசூர் மன்னர்கள் ஆகிய வம்சத்தாரிடம் கொங்குநாடு சென்றது. இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராச்சியங்களுடன் கொங்குநாடு இணைக்கப்பட்ட போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையைக் கொங்குநாடு இழக்கவில்லை. இந்நாட்டின் அமைப்பு மாத்திரம் அன்றி இந்நாட்டுக் குடிமக்களின் பழக்கவழக்கங்களும் பண்டைக் காலம்தொட்டுத் தனித்தன்மையாக ஒரேவிதமாக இருந்து வந்தன. சமூக வழக்கங்களில் இவர்களுடைய வழக்கங்கள் ஏனைய நாட்டார்களிடமிருந்து என்றும் சிறிது வேறுபட்டே யிருக்கும். இவ்விதக் காரணங்களினால் கொங்கு நாட்டைத் தனிநாடு என்று நிச்சயிக்கக்கூடும்.*

*சேரநாடு என்னும் இன்றைய கேரளத்தில் வழங்கிவரும் பழக்க வழக்கங்களைக் கொங்கு நாட்டாரில் பழக்கவழக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், எக்காலத்திலும் இவ்விரு நாடுகளும் ஒன்றாக இருந்திருக்க முடியாது என்று சொல்ல வேண்டும். கொங்குநாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்திருந்தால் சேரநாட்டு வழக்கம் கொஞ்சமேனும் கொங்கு நாட்டில் பரவியிருக்கும். இவையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் ஆதிகாலம் தொடங்கி இவ்விரு நாடுகளும் தனித்தனியகவே வேறுவேறு நாடுகளாகவே இருந்திருக்க வேண்டும் என்றும், கொங்குநாடு ஒரு தனிநாடாகவே இயற்கையில் அமைந்து வந்ததென்றும் திண்ணமாகக் கூறலாம்' என்பது கோவைகிழார் கூற்றாகும்.*

வராகமிகிரர் தன் நூலில் கொங்குநாடு தனிநாடு என்று குறிக்கின்றார். அசோகன் கல்வெட்டிலும் தனி அரசராகக் குறிக்கப்பெறும் சத்யபுத்திரர் கொங்கு நாட்டு மன்னன் அதியமானே என்பது அண்மைக் கண்டுபிடிப்பான ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

'ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி'

என்பது ஜம்பைக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு 2000 ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

'கொங்கு நாடு' என்னும் வரலாற்று நூலில் புலவர் குழந்தை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

> 'தொன்றுதொட்டே கொங்குநாடு சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு உட்படாத தனியாட்சி நாடாகவே இருந்துவந்தது. வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய வேளாண்குடிச் செல்வராகிய கொங்குநாட்டுத் தனி அரசர்கள் தமக்குள் பகையின்றி ஆண்டுவந்தனர். அவர்கள் முடியுடை மூவேந்தரிடத்தும் அன்பொடு நண்பும் அமைவும் உடையவராக இருந்து வந்தனர். முடியுடை மூவேந்தர்க்கு மைத்துனரும், மாமனாருமாகிய அவர்கள் பின்னர் எவ்வாறு இருந்திருப்பர். கேரளோற்பத்தி, கேரள மான்மியம் போன்ற நூல்களும், திருவாங்கூர்ச் சரித்திர ஆசிரியர் சங்குண்ணி மேனன் அவர்களும், டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் கொங்கு தனியாட்சி நாடு என்பதைத் தக்க எடுத்துக்காட்டுகள் காட்டி நிறுவியுள்ளனர்.'

தொல்பொருட் சிறப்புக் கல்வெட்டுப் பரப்பும் சிற்பச் செல்வமும் வரலாற்றுப் பெருமையும், வாழ்வியல் வளமும், வற்றாச் சீரும் உடையது நமது கொங்கு நாடு.

## 3. அரையநாடு

கொங்கு 24 நாடுகளில் அரையநாடு மிகவும் இன்றியமையாச் சிறப்பு மிக்கது; தொன்மையானது. சங்ககாலத்தில் ஆமூர்க் கவுதமன் சாதேவனார் என்ற புலவரால் கொடுமுடி என்ற மன்னன் பாராட்டிப் பாடப்பட்டுள்ளான். அகநானூறு 159–ஆம் பாடலில் அக்கொடுமுடி என்ற மாவீரன் குறிக்கப்படுகின்றான். கொடுமுடி என்ற அம்மன்னன் பெயராலேயே அரையநாட்டுக் கொடுமுடிக்கும் பெயர் ஏற்பட்டது.

புறநானூற்றில் 202 ஆம் பாடலில் கபிலர், சிற்றரையம், பேரரையம் என்ற இரு பெயரால் இரண்டாகப் பகுக்கப்பட்ட பண்டைய ஊரொன்றைக் குறித்துப் பாடியுள்ளார்.

*'இருபாற் பெயரிய உருகெழு மூதூர்க்*
*கோடிபல அடுக்கிய பொருள்நுமக்கு உதவிய*
*நீடுநிரை அரையம்'*

என்பது அவர் பாடிய பாடல் பகுதி. அச் சங்க இலக்கியம் குறிக்கும் 'அரையம்' என்ற பெயராலேயே அரையநாடு பெயர்பெற்றது என்ற கருத்து ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.

திருவரங்கம் கோயிலில் அரையர்சேவை என்ற வழிபாட்டுமுறை ஒன்றுண்டு. அரசர் என்ற பெயர் அரைசர் எனமாறி அரையர் என்று ஆவதும் உண்டு. 'அரையர்கோவை' என்ற இலக்கியமும் ஒன்றுண்டு. கொடுமுடி என்னும் அரசன், இளவரச நல்லூர், சேர அரசன் ஆட்டன் அத்தி ஆகியோர் தொடர்பாலும்கூட அரைய நாடு என்று பெயர் பெற்றிருக்கலாம். பல்லவராயர், கச்சிராயர், காடவராயர் போன்ற பட்டப் பெயர்கள் பல்லவரையர், கச்சியரையர், காடவரையர் என்றும் குறிக்கப்படும் அப்பெயர்களாலும் அரையநாடு எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

மேற்கண்ட தலைவன் பெயரால் அமைந்த கொடுமுடியைத் தேவாரம் பாடிய மூவரும் பாடியுள்ளனர்.

*'பரந்திழி காவிரிப் பாங்கர்ப் பாண்டிக் கொடுமுடி'*

என்று திருஞானசம்பந்தரும்,

*'திருப்பாண்டிக் கொடுமுடி'*

என்று திருநாவுக்கரசரும்,

*'சீர் கறையூரில் பாண்டிக் கொடுமுடி'*

என்று சுந்தரரும் பாடியுள்ளனர்.

மாணிக்கவாசகர்,

*'பாண்டி வெள்ளமே'*

என்பார். எனவே சமய குரவர் நால்வரும் பாடிய கொங்குத்தலம் கொடுமுடி ஒன்றேயாகும்.

'மாக்கறைசை' என்று தனிப்பாடல் ஒன்று கொடுமுடியைப் புகழும். சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறையில் உள்ள திரு இரட்டை மணிமாலையில்,

*'நறுந்தேன்*
*படுமுடியாய பாய்நீர் பரந்தொழுகு*
*பாண்டிக்கொடுமுடி'*

என்றும், சேக்கிழாரின் பெரியபுராணம் என்னும் சைவப் பன்னிரண்டாம் திருமுறையில்,

*'குரவயர் சோலை அணிதிருப்பாண்டிக் கொடுமுடி'*
*'கொங்கினில் பொன்னித் தென்கரைக் கறையூர்க் கொடுமுடி'*
*'செப்பரும் சீர்க் கொடுமுடி'*
*'பருவமறாப் பொன்னிப் பாண்டிக் கொடுமுடி'*

என்றும் கொடுமுடி பலபட புகழப்பட்டுள்ளது. சைவச் சிறப்புமிக்க இக்கொடுமுடியோடு நெருங்கிய தொடர்புடையது விதரி அத்திப்பாளையம்.

அரையநாடு மிகப் பரந்துபட்டுள்ளதால் காவிரிக்கும் கிழக்கேயுள்ள பகுதி கீழ்க்கரை அரையநாடு என்றும், காவிரிக்கு மேற்கேயுள்ள பகுதி மேல்கரை அரையநாடு என்றும் அழைக்கப்பட்டது.

கீழ்க்கரை அரையநாட்டில் 32 ஊர்கள் உள்ளன. மேல்கரை அரைய நாட்டில் தலையநல்லூர், வெங்கம்பூர், அஞ்சூர், மொஞ்சனூர், கொல்லங்கோயில், கொந்தளம், கொடுமுடி, விதரி, எழுநூற்றுமங்கலம், இளவரசநல்லூர், வல்லிபுரம், கார்வழி, துக்காச்சி, வடிவுடையமங்கலம், ஊஞ்சலூர், திருக்காடுதுறை ஆகிய 16 ஊர்கள் விளங்குகின்றன.

இவைகளைத் தொகுத்து ஊர்த்தொகைப் பாடல் கூறுகிறது.

*என்னில மெனுந்தலைசை வெங்கநகர் அஞ்சூரும்*
*இம்பர்மகிழ் மொஞ்சனூரும்*
*இன்பாக வளர்கொல்லங் கோயில்மிகு கொந்தளம்*
*எழிலாக வருகறைசையும்*
*மன்னவர் உறும்விதரி எழுநூற்று மங்கலம்*
*வண்மையிள வரசநல்லூர்*
*வல்லிபுரம் கார்வழியி னோடுதுக் காச்சியும்*
*வடிவுடைய நகரூஞ்சலூர்*

*முன்னிலைமை யாகத் திருக்காடு துறையுடன்*
*முத்தமிழர் கொண்டாடவே*
*முற்றுமே இந்திரன் பதிபோல் விளங்கியே*
*மொய்ம்பேற வேதழைத்து*

*அன்னவயல் சூழ்கதலி தென்னைமா துளைபுன்னை*
*அரசுநிலை பூகமாதி*
*அரியதரு நீடுபூஞ் சோலைசூழ்ந் தோங்குமேல்*
*அரையநன் னாடுதானே*

என்பது அப்பாடலாகும்.

இப்பதினாறு ஊர்களையும் நாடு எட்டுத் தானம் எட்டு என்று பிரிப்பர். அரையநாட்டுச் சபைக்குரிய ஊர்கள் எட்டு. கொடுமுடிக் கோயில்களின் தேவஸ்தானத்திற்குக் கொடையாக (மானியமாக) விடப்பட்ட ஊர்கள் எட்டாகும்.

தலையநல்லூர், வெங்கம்பூர், அஞ்சூர், மொஞ்சனூர், கொல்லங்கோயில், கொந்தளம், துக்காச்சி, கார்வழி ஆகிய எட்டு ஊர்கள் அரைநாட்டுச் சபைக்கு உரியவை. ஏனைய கொடுமுடி, விதரி, எழுநூற்றுமங்கலம், இளவரசநல்லூர், வல்லிபுரம், வடிவுள்ளமங்கை, ஊஞ்சலூர், திருக்காடுதுறை ஆகிய எட்டு ஊர்கள் தானக் கிராமமாகும்.

*உலகுபுகழ் தலையநல்லூர் வெங்கம் பூருடன்*
*உயர்ச்சிபெறும் அஞ்சூரதும்*
*உசிதமிகு புகழ்குலவு மொஞ்சனூர் கொலங்கோயில்*
*உண்மையுள நயகொந்தளம்*

*நலமிகும் துக்காச்சி கார்வழிக் கிராமம்இரு*
*நான்குமேல் கரையரையநன்*
*நாடதற் குரியவாம் தானக் கிராமம்இரு*
*நான்குமகு டேசலிங்கர்*

*தலமெனும் கறைசெயம் பதிவிதரி மிகுநலம்*
*சார்ந்தஎழு நூற்றிமங்கை*
*தங்கும்இள வரசநல்லூர் வல்லி புரம்எழில்*
*தான்கொள்வடி வுள்ளமங்கை*

*நிலைமைபெறும் ஊஞ்சலூர் திருக்காடு துறையென*
*நிகழ்த்துபதி பொன்னி காஞ்சி*
*நீண்டஅனு மாநதி துலங்குநன் வீதிகள்*
*நிறைந்ததுவளர் அரையநாடே*

என்ற பாடல் மூலம் நாட்டு ஊர்கள் எட்டையும், கொடுமுடி மகுடீசுவரர் தான ஊர்கள் எட்டையும் அறிகிறோம்.

இச்செய்தி கொடுமுடி வீரநாராயணப் பெருமாள் கோயில் கல்வெட்டொன்றாலும் உறுதிப்படுகிறது.

1) ஸ்வஸ்தஸ்ரீமனுமகா ம

2) ண்டலேசுரன்

3) நிம்ப மாலிகாபரணன் மக

4) ர வம்சம் ரகுவம்ச மதிகுலாதிப திறிபு

5) வன சக்கறவற்த்திகளா

6) கிய கோ வீரசுந்தரபாண்

7) டியகேசரி

8) பன்மரான தேவர்க்கு யாண்டு இர

9) ண்டாவது மாசி மாதம் 14 தேதி

10) ஆதித்த வாரமும் மகா நட்செ

11) த்திரமும் சித்திநாமயோகமும் பா

12) ல வாகரணமும் கூடிய யின்னாளி

13) ல் சோலருமன்சமலி திரிபுவன

14) மகாதேவ தேவோத்தமன் செம்பு

15) த் தீவில் திராவிட தேசத்தில்

16) அதிராசராச மண்டலத்தில்

17) தெட்சண கயிலாச துல்லியமா

18) கிய மேல்கரையரைய நாட்டி

19) ல் நற்காவிரிசூளுந் திருப்பா

20) ண்டிக் கொடுமுடியாளுடைய ந

21) ன்னாயநாற் சூடி பெரிய திருவடி

22) நாயனாற்கும் இறையிலி

23) தேவஸ்தானமாக உதகம் பண்ணிக்கு

24) டுத்த ஊராவது கறையூர், விதரித் திருச்சிற்ற

25) ம்பலநல்லூர், நன்னாயனார் திருவிடையா

26) ட்டத் தெழுநூற்றுச் சருப்பேதி மங்கலம்,

27) திரு ஊஞ்சலூர், வல்லிபுரம்,

28) வடிவுடையமங்கலம், ஐயந்தரு

29) திருக்காடுதுறையும் நாயனார் திரு

30) ப்பாண்டிக் கொடுமுடி யாளுடை

31) யாற்கும் பெரிய திருவடியா

32) நன்னாயனாற்கும் மாசிமகத் திருவிளா

33) எழுந்தருளவும் தபனமாடியருளவும்

34) சற்கால நிபந்தங்களுக்கும் பெருந்

35) திருவமுது செய்தருளவும் சா

36) த்துப்படி திருவாராதனமும் திரு

37) ப்பணிகளுக்குங் குறைவற நடத்திப்

38) போந்தருளவும் இதுக்கடலாயெப்

39) பேர்ப்பட்ட ப்ராப்திகளுக்கும் நீசுந்

40) தரத்திருப்பாண்டிக் கொடுமுடி

41) டி மஹாதேவர்க்குப் பெரிய திரு

42) வடி னாயணாருக்கும் இவ்வூர்க

43) ளுதகம் பண்ணிக் குடுத்தோ

44) யிவ்வூர்க ளெல்லை அனைத்தி

45) ற்கும் திரிசூல தாபனம்ச

46) க்கரதாபனம் கல்லிலுஞ்

47) செம்பிலும் வெட்டிக்கொள்

48) வதாகவும் உ

என்பது கொடுமுடிக் கல்வெட்டு. இதில் விதரிக்குத் திருச்சிற்றம்பல நல்லூர் என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருப்பது இதன் சமயப் பெருமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

ஊஞ்சலூர் நாகீசுவரர் கோயில் கல்வெட்டிலும் அவ்வூர் கொடுமுடி லிங்கருக்கும் வீரநாராயணப் பெருமாளுக்கும் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ள விபரம் கூறப்பட்டுள்ளது.

விதரியைக் கொடுமுடிக் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்டுள்ள விபரம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டதுடன் செப்பேட்டிலும் எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் செப்பேடு எதுவும் கிடைக்கவில்லை. விதரியான திருச்சிற்றம்பலநல்லூரில் நான்கு எல்லைகளிலும் திரிசூலம் பொறிக்கப்பட்ட கற்கள் நடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

நல்லூர், மங்கலம் என்பவை தொன்மை வாய்ந்த சமயச் சிறப்புடைய ஊர்களாகும். விதரி–திருச்சிற்றம்பல நல்லூர் என்று பெயர் பெற்றிருப்பதும் தானக் கிராமங்கள் இரண்டூர்கள் எழுநூற்றுச் சருப்பேதிமங்கலம், வடிவுடையமங்கலம் எனப் பெயர் பெற்றிருப்பதும் சிறப்புக்குரியதாகும்.

அரையநாட்டுப் பாடல்கள் இரண்டிலும் அரைய நாட்டின் வளம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் காவிரி, நொய்யல், அனுமநதி முதலிய மூன்று ஆறுகள் இங்கு பாயும் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. காலிங்கராயன் கால்வாயும் வளத்துக்கொரு காரணம். அதனால்தான்,

*"தழைத்து*
*அன்னவயல் சூழ்கதலி தென்னைமா துளைபுன்னை*
*அரசுநிலை பூகமாதி*
*அரியதரு நீடுபூஞ் சோலைசூழ்ந் தோங்குமேல்*
*அரையநன் நாடுதானே"*

என்று கூறப்பட்டுள்ளது.

கி.பி.1800 இல் இப்பகுதிக்கு வந்த ஆங்கிலப் பயணி கொடுமுடி அருகில் உள்ள வளமான பகுதியைப் போல் உலகில் எங்கும் தாம் கண்டதில்லை என்று கூறியுள்ளார்.

## 4. காஞ்சிமா நதி

பெரிய பொன்னாச்சியம்மன், சின்னப் பொன்னாச்சி அம்மன் கோயிலின் அருகிலும், பழம்பெரும் வரலாற்றுச் சிறப்புடைய விதரியின் வடக்கு எல்லையாகவும் திகழுவது நொய்யல் ஆறு. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது பழமொழி. அத்திப்பாளையம் பகுதிக்கு அழகூட்டுவதும் வளம் தருவதும் நொய்யல் ஆறு ஆகும்.

கொங்கு நாட்டில் தோன்றிக் கொங்கு நாட்டில் பாய்ந்து கொங்கு நாட்டு எல்லையிலேயே காவிரியோடு கலக்கும் ஆறு காஞ்சிமாநதி என்னும் நொய்யல் ஆறு ஆகும்.

### தோற்றம்

கொங்கு நாட்டின் மேற்கு எல்லையாகத் திகழும் வெள்ளியங்கிரி மலைப் பகுதியில் தோன்றிப் பெரும்பாலும் கிழக்கு நோக்கிச் சுமார் 170 கிலோமீட்டர் பயணம் செய்து காவிரியோடு கலக்கிறது காஞ்சிமாநதி.

கோவை கிழார் சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார் வெள்ளியங்கிரி மலையிலிருந்து புறப்படும் காஞ்சிமா நதியை ஒரு வில்லிலிருந்து புறப்படும் அம்புக்கு ஒப்பிட்டுக் கூறுவார்.

வெள்ளியங்கிரியின் பல்வேறு பகுதியிலிருந்து புறப்படும் பல சிற்றாறுகள் ஒன்றாகச் சேர்ந்து காஞ்சிமாநதி தோன்றுகிறது. முதலில் 2000 மீட்டர் உயரத்தில் உள்ள 'ஆண்டிசுனை' நீர் காஞ்சிமாநதியில் சேர்கிறது.

மையமாக வரும் நொய்யலாற்றுக்குத் தென்பகுதியில் தர்மலிங்கம் மலை, எட்டிமடை மலை, அய்யாசாமி மலை, ஒரத்திமலை, கூத்தாண்டி மலை, குச்சிமலை, ஆகியனவும், மேற்குப் பகுதியில் அத்திமலை, கரிமலை, குஞ்சரமுடி, பொறத்திமலை, வெள்ளியங்கிரி, முக்கை, தும்பிமுடி, வரடிமலை ஆகியனவும், வடபகுதியில் இடிஞ்சமலை, பெருமாள் முடி, மருதமலை ஆகியனவும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் ஆகும்.

கரிமலையில் தோன்றும் பெரியாறு, கொடுவாய்ப்பள்ளம், நந்தன்கரைப் பள்ளம் இரண்டும் கூடிய சின்னாறு, இருட்டுப்பள்ளம், வெள்ளியங்கிரியில் தோன்றும் சுவாமி முடியாறு, ஆனையாறு, பூண்டியாறு, நீலிவாய்க்கால், ஒரத்திப்பள்ளம், அய்யாசாமிமலைப் பள்ளம், ஆனைப்பள்ளம், பாம்பாட்டிப்பள்ளம், சங்கனூர்ப் பள்ளம், தடாகப்பள்ளம், திருப்பூராறு, வண்ணாற்றங்கரை, நள்ளாறு முதலிய பல ஆறுகளும், பள்ளங்களும், ஓடைகளும், அருவிகளும் காஞ்சிமாநதியோடு கலக்கிறது. முட்டம் அருகேயுள்ள ஒரு துணையாற்றுக்கு இன்றும் 'காஞ்சிமாநதி' என்றே பெயரிட்டு அழைக்கின்றனர்.

## கொங்குநாட்டு ஆறுகள்

கார்மேகக் கவிஞரின் கொங்குமண்டல சதகமும் வாலசுப்பக் கவிராயரின் கொங்குமண்டல சதகமும் கொங்குநாட்டு ஆறுகளைத் தொகுத்துக் கூறுகின்றன.

| | |
|---|---|
| திருமணிமுத்தாறு | நள்ளாறு |
| தொப்பையாறு | சண்முகநதி |
| காவிரியாறு | பாலையாறு |
| பவானியாறு | வாளையாறு |
| செய்யாறு | காரியாறு |
| காஞ்சியாறு | குடவனாறு |
| ஆண்பொருநை | சண்பகநதி |
| | சிற்றாறு |

என்பன அவ்வாறுகளாகும். இதனை,

*திருமணி தொப்பைபூங் காவேரி வானியும் செய்யநதி*
*தருமணி காஞ்சி பொருநைநள் ளாறொடு சண்முகமும்*
*குருமணி பாலை நதிவாளை காரி குடகனதி*
*வருமணி சண்பகம் சிற்றாறு சூழ்கொங்கு மண்டலமே !*

என்ற சதகப்பாடல் விளக்கும். இங்கு 15 ஆறுகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஆனால் கிராமபத்திரன் பட்டயம், தென்கரை நாட்டுப் பட்டயம் போன்றவை

| | |
|---|---|
| வானியாறு | சிற்றாறு |
| காவேரியாறு | குடகனாறு |
| காஞ்சிமாநதி | நன்காஞ்சியாறு |
| நல்லமங்கையாறு | நல்லாறு |
| ஆண்பொருநையாறு | உப்பாறு |
| மீன்கொல்லியாறு | |

ஆகிய பதினொறு ஆறுகளைத் தொகுத்துக் கூறுகின்றன.

*'மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழாவில்*
*பொழில்வரி வேனில் பேரெழில் வாழ்க்கை*
*மேவரு சுற்றமொடு கண்டினிது நுகரும்*
*தீம்புனல் ஆயம் ஆடும்*
*காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே !*

என்பது பதிற்றுப் பத்துப் பாடலாகும்.

முற்காலப் பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனின் சீவரமங்கலச் செப்பேட்டில்

*'மீ கொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத்*
*திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோயிலாக்கியும்'*

என்று கூறப்படுகிறது.

கொங்கு நாட்டுக்கு மூன்று முறை தல யாத்திரை வந்தவரும் கொடுமுடியைப் பாடி மகிழ்ந்தவருமாகிய தேவாரம் பாடிய சுந்தரர்.

*'மீ கொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்ப்*
*பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே*
*பெற்றாய் அன்றே'*

என்று பாடியுள்ளார்.

குறுப்புநாடு, காங்கய நாடு பற்றிய பாடல்களில்,

*'கொந்துலவு காஞ்சிநதி சவுந்தரமா நதிவானி*
*குலாவி விளங்குநாடு*
*கூர்ந்தசங் கத்தையும் தாதியால் வெற்றிசெயும்*
*குறுப்புநன் னாடுதானே'*

*'கனசென்னிமலை காஞ்சியான் பொருநை சூழ்கின்ற*
*காங்கய நாடுதானே'*

என்ற குறிப்பு வருகின்றன.

கல்வெட்டில் 'எழுகரைநாடு' என்ற தொடர் பயின்று வருகிறது. அருணகிரியாரும் 'எழுகரை நாட்டவர் தம்பிரானே' என்று பாடுகிறார்.

மோரூர்க் காங்கேயர் ஏடு என்னும் ஓலைப் பட்டயம்.

*'கொங்கு மண்டலத்திலே தெட்சண கைலாசமாகிய*
*அரவகிரியைச் சூழ்ந்த காவேரி, பவானி, திருமணிமுத்தாறு*
*அலகுமுரிச்சான், தொப்பை, ஆம்பிராநதி, நொய்யல் ஆக*
*சத்தநதியாகிய எழுகரைநாடு'*

என்று கூறுகிறது.

மக்கென்சியின் ஆவணம் ஒன்று ஏழு ஆறுகளுடன் ஏழு பாடல்பெற்ற சிவாலயங்கள் உள்ள காரணத்தால் எழுகரைநாடு என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

*'வாணி நொய்யல் காவேரி ஆண்பொருந்தம் ஆளியாறு*
*திருமணிமுத்தாறு*
*தொப்பையாறு ஆக நதி ஏழு சிவாலயத்துக்கு வரலாறு*
*கரூர் வெஞ்சமாங்கூடல், கொடுமுடி, திருநண்ணா,*
*திருமுருகன்பூண்டி, பேரூர்*

ஆக திருப்பாடல் பெற்ற திருப்பதி-ஏழு நதியும்-ஏழு படைவீடும்-ஏழு உண்டானபடியாலே கொங்கு மண்டலம் எழுகரை நாடாகக் சொல்லப்படுகிறது'

என்பது மக்கென்சியின் ஆவணப்பகுதியாகும். எல்லாத் தொகுப்புக் களிலும் காஞ்சிமா நதியாகிய நொய்யல் தவறாமல் இடம்பெற்றிருப்பது சிறப்புக்குரியது ஆகும்.

## காஞ்சி

நொய்யலாற்றுக்குக் காஞ்சி என்பதே பழம்பெயர். பரணர் என்னும் சங்ககாலப் புலவர் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடிய பதிற்றுப்பத்து என்னும் சங்க கால இலக்கியத்தின் ஐந்தாம் பத்தில் காஞ்சியாறு பற்றிப் பாடுகிறார்.

'வேனில் காலத்தில் கொண்டாடப்படும் நல்ல நீர்விழாவின்போது கொங்கு நாட்டு மக்கள் தங்கள் வீடுகளில் தங்காமல் சுற்றத்தார்களுடன் அழகிய சோலையில் தங்கி இன்பமாகப் பொழுதைப் போக்கி நீராடி உண்டு மகிழும்படியான காஞ்சியாற்று மணலினும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் வாழ்நாட்கள் மிகுவதாகும்' என்கிறார் பரணர்.

கொடுமணல் இலக்கியங்களில்,

*'சோலைசூழ்திரும் காஞ்சிமாநதி*
*துலங்க வந்தருள் தேவனே'*
*'காஞ்சிமாநதி தன்னிலேவளர்*
*கன்னி மாமயில் அன்னமே'*
*'சிறந்த தாம்திருக் காஞ்சி நதியில்*
*வளரும் செல்வத் துரைமகள்'*

என்று காஞ்சிமாநதி குறிக்கப்படுகிறது.

*'மண்பரவும் காஞ்சிநதி'*
*'ஆலிக்கும் திருக்காஞ்சிநதி'*
*'மணக்கும் திருக்காஞ்சி'*
*'செய்யபுகழ்க் காஞ்சி'*
*'அருள்பரவும் காஞ்சி'*

என்று பல்வேறு இலக்கியத் தொடர்கள் காஞ்சிமாநதியைப் புகழுகிறது.

பூந்துறை நாட்டின் எல்லை கூறும் புராணப் பாடலில் தெற்கு எல்லையாக

*'உன்னிய தெற்கில் காஞ்சி'*

என்ற தொடர் காணப்படுகிறது.

பேரூர் மடத்துச் செப்பேடு, பேரூர்ச் செப்பேடு, தென்கரை நாட்டுப்பட்டயம், கொங்கு காணியான பட்டயம், 24 நாட்டுப்பட்டயம் ஆகியவற்றில் காஞ்சியாறு என்ற தொடரே பயின்று வருகிறது.

விசயநகர மன்னன் இராமதேவ மகாராயர் பிரதிநிதியாக மதுரையில் முத்துவீரப்ப நாயக்கர் ஆட்சிபுரியும்போது கி.பி.1621 ஆம் ஆண்டு பழையகோட்டைப் பட்டக்காரர் விசுவநாதச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் 'காஞ்சிநதி தீர்த்தத்தில் நவபிரதிட்டையாக அணையும் வாய்க்காலும் கண்டு' பணி செய்ததாக நத்தக் காரையூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

காஞ்சிமாநதி என்ற பெயர் முட்டம் அருகே ஒரு சிற்றாறுக்குப் பெயராக வருகிறது. நன்காஞ்சி (நங்காஞ்சி) என்ற ஆறு கொங்கு நாட்டின் தென்பகுதியில் ஓடுகிறது. கொங்கு 24 நாடுகளில் ஒரு நாடு காஞ்சிக்கோயில் நாடு (இது காஞ்சிக்குறி, காஞ்சிக் கூவல்) என்று பெயர் பெற்றுள்ளது. அந்நாட்டின் பூந்துறை நாட்டை ஒட்டிய பகுதி காஞ்சித் துண்டம், காஞ்சிக் கூவத் துண்டம் எனப்படுகிறது.

இவ்வாறு காஞ்சி என்ற பெயரைப் பல இடங்களில் காணுகிறோம்.

## நொய்யல்

காஞ்சிமாநதி என்ற பெயர் மறைந்து இன்று நொய்யலாறு என்ற பெயரே வழங்கிவருகிறது.

கி.பி.13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கொங்குச் சோழன் விக்கிரம சோழன் (1283), கொங்குப் பாண்டியன் சுந்தரபாண்டியன் ஆகியோரின் சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேசுரன் கோயில் கல்வெட்டில்,

*'நள்ளாறும் நொயிலாறும் கூடும் மூலை'*

என்றும்,

*'நொய்யலாற்றில் இந்தவரி அணையும் அடைத்துக்*
*காலும் வெட்டிக் குளமும் அடைத்துப் பயிர் செய்து'*

என்றும் கூறப்படுகிறது.

வள்ளிஎறிச்சல் தொண்டைமாக்கவுண்டர் வரலாற்றுக் குறிப்பில் 'நொய்யல் ஆறு' என்ற குறிப்பு வருகிறது. கொங்கு காணியான பட்டயம், குறுப்புநாட்டுப் பட்டயம், தென்கரைநாட்டுப் பட்டயம், முத்தூர்ப் பட்டயம், மோரூர்க் காங்கேயம் ஏடு போன்றவற்றிலும் 'நொய்யல்' என்ற பெயரே பயின்று வருகிறது.

காஞ்சி என்ற பெயர் 13–ஆம் நூற்றாண்டில் நொயில், நொய்யல் என்று அழைக்கப்பட்டுள்ளது. இம்மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பது ஆய்வுக்குரியது.

நொய்–என்றால் நுண்மை, சிறுமை, மென்மை, மிருது என்று பொருள் உண்டு. உடைந்த அரிசிக் குறுணைக்கு 'நொய்க்குறுணை' என்று பெயர். கோதுமை ரவையைக் 'கோதுமை நொய்' என்பர். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சேனாவரையர் 'நொய்யும் நுறுங்கும்' நீக்கிச் சோறு சமைத்தல் பற்றிக்

குறித்துள்ளார். கசுற்களே இல்லாத மென்மையான மணலுக்கு 'நொய்மணல்' என்று பெயர்.

'நொய்' என்பதற்குச் சூடாமணி நிகண்டு இலேசு என்ற பொருளும் கூறுகிறது. 'குறுநொய்' என்ற தொடரைத் திவாகர நிகண்டு எடுத்துக்காட்டுகிறது. அது இன்று 'குறுணை' என்று மாறிவிட்டது. 'நொய்யரிசி கொதி தாங்காது' என்ற பழமொழியும் உண்டு. நொறுங்கிய அரிசித் துணுக்கை 'நொய்' என்று அபிதான சிந்தாமணி கூறும்.

நுண்மையான சிறிய மென்மையான, கல் கலக்காத மணல் காஞ்சியாற்றில் கிடைப்பதால் 'காஞ்சி' நொய்யல் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். கொங்கு நாட்டின் நொய்யல் கரைப் பகுதியில் கட்டிடம் கட்டுவோர் நொய்யலாற்று மணலைச் சல்லடையில் சலிக்காமல் அப்படியே காரைக்குப் பயன்படுத்துவதைப் பார்க்கலாம்.

கோவைகிழார் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் 'காஞ்சிமாநதி' என்னும் தம் நூலில்,

*"நொய் போலச் சிறியவள் நான். கங்கை, யமுனை,*
*சிந்து, கோதாவிரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதை*
*போன்ற பெரிய ஆறுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்*
*நானோ மிகச் சிறியவள். நொய் போன்றவள்*
*தானியத்தில் நொய்யிற்குச் சத்து மிகுதி. அதுபோல்*
*அந்தப் பேராறுகளில் ஆயிரத்தில் ஒரு பங்கும்*
*மக்களுக்குப் பயன்படுவதில்லை. நானோ நூற்றுக்கு*
*நூறு பயன் தருவேன். அதில்தான் சிறப்பு இருக்கிறது.*
*ஆகவே நொய்யல் என்ற பெயரே எனக்கு விருப்பம்"*

என்று நொய்யலாறே பேசுவதாக எழுதியுள்ளார். நொய்யல் காவிரியோடு கலக்கும் இடத்தில் ஊர்ப்பகுதிக்கும், அருகில் உள்ள இரயில் நிலையத்துக்கும் 'நொய்யல்' என்றே பெயர். நொய்யல் காவிரியோடு கலக்குமிடத்தில் கூடுதுறைச் செல்லாண்டியம்மன் கோயில் சிறப்புடன் விளங்குகிறது.

## 5. அத்திப்பாளையம்

அத்தி என்ற சொல்லுக்கு யானை, அத்திமரம் என்ற பொருள்கள் உண்டு. 'வேழம் உடைத்து மலைநாடு' என்பது பழம்பாடல். சேர நாட்டிலும், சேரநாடு சார்ந்த கொங்கு நாட்டிலும் யானைகள் மிகுதி.

ஆனைமலை என்ற மலைப்பகுதி கொங்கு நாட்டில் உண்டு. கொங்குநாட்டு வணிக் குழுக்களுக்கு 'அத்திகோசம்' என்னும் யானைப்படை பாதுகாப்பாக இருந்ததைக் கொங்குநாட்டுக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கொங்குநாட்டு இலக்கியமான கொங்கு வேளிரின் பெருங்கதை அத்திகோசம் என்னும் யானைப்படையை விளக்குகிறது. வீரசோழியம் உரை மேற்கோள் பாடலில் 'அத்திகிரி' என்றதோர் மலை குறிக்கப்படுகிறது. யாப்பருங்கல விருத்தி, தண்டியலங்காரம் மேற்கோள் பாடல்கள் காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியை அத்தியூர் என்று கூறுகின்றன. கொங்கில் காஞ்சி நதிக்கரை ஊர் அத்தி என்று பெயர் பெற்றிருப்பது பொருத்தமாக உள்ளது.

பருத்திப்பள்ளிச் செப்பேடு அத்திப்பெண் என்று ஒரு பெண்ணுக்குப் பெயர் கூறுகிறது. அத்திமலை, அத்தியண கவுண்டர், அத்தியப்ப கவுண்டர், அத்தியண்ணன் என்ற பெயர்கள் கொங்கு நாட்டுப் பட்டயங்களில் பரவலாகக் காணப்படுகிறது. தென்னிலை வேட்டுவப் பட்டக்காரர் வீட்டுச் செப்பேட்டில் மன்மத வருஷம் பங்குனி மாதம் சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் கிழங்குநாடு வராக வேட்டுவன் கண்டிய கவுண்டனுக்கு கிழங்குநாடு எல்லை கொல்லை விட்ட செப்பேட்டில்,

> *'கொடுமுடிக்குத் தென்பாதி எல்லை மஞ்சிக் காட்டிலே குளி*
> *ரண்டு அதுக்குத் தென்பாதி எல்லை மஞ்சிக்காட்டிலே*
> *குளி ரண்டு. அதுக்குத் தென்பாதி வெங்கக்கல் மேட்டிலே*
> *குளி ரண்டு. அதுக்குக் கீழ்ப்பாதி அத்திப்பாளையத்துக்குக்*
> *கீழ்ப்பாதி சூலக்கல் அடிச்சிருக்குது'*

என்று காணப்படுகிறது.

பண்டைக் காலத்தில் காடுகளே மிகுதியாக இருந்தன. அத்திமரக்காடுகள் முன்பு விளங்கிய பகுதி 'அத்தி' என வழங்கியிருக்கலாம். பின்னர் 'பாளையம்' என்ற ஒட்டுப் பெற்று அத்திப்பாளயைம் என்று ஆகியிருக்கலாம். அந்தி, பட்டில் என்ற ஊர்ப்பெயர்கள் இதுபோல் அந்தியூர், பட்டிலூர் என்னும் பெயர்களைப் பின்னர் பெற்றன.

பொதுவாகப் 'பாளையம்' என்ற ஊர்ப்பெயர்கள் விஜயநகர, நாயக்கர் அரசுக் காலத்திலேயே ஏற்பட்டன. அப்போதுதான் 72 பாளையங்களும், பாளையப்பட்டுக்களும் ஏற்பட்டன. கொங்கு நாட்டில் பாளையம் என்ற பின்னொட்டுப் பெற்ற ஊர்ப்பெயர்களே மிகுதியாக உள்ளன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சங்க காலத்தில் சேரனுடைய தளபதி ஒருவன் அத்தி என்று அழைக்கப்பட்டான். குடவாயில் கீரத்தனார் என்னும் சங்கப் புலவர் தம் அகநானூற்றுப் பாடலில் (44)

*'நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி*
*துன்னரும் கடுந்திறல் கங்கன் கட்டி*
*பொன்அணி வல்வில் புன்றுறை'*

என்று கூறுகிறார். இங்கு அத்திக்குச் சிறப்பு அடைமொழி அளிக்கப்பட்டுள்ளது.

சோழன் மகள் ஆதிமந்தி, சேரன் மகன் ஆட்டன் அத்திக்கும் ஏற்பட்ட அன்பு காதலாக மலர்ந்து, இருவருக்கும் இரு பேரரசர்கள் அனுமதியுடன் திருமணம் நடைபெற்றது. இருவரும் கழார் முன்துறையில் காவிரியாற்றில் நீராடும்போது ஆட்டன் அத்தியைக் காவிரி கொண்டு சென்றது. ஆதிமந்தி மிகவும் வருந்தினாள். அவர்கள் நீராடிய காவிரித்துறை கழார் – கொடுமுடி [பவானி கூடுதுறை என்றும் கூறுவர்] என்ற கருத்தும் உண்டு. சேரர் தொடர்பான இந்த அத்தி என்ற தலைவன் பெயரால் இவ்வூருக்கு அத்தி என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம். பின்னர் அது அத்திப்பாளையம் என மாறியிருக்கலாம்.

மேல்கரை அரையநாட்டு ஊர்களில் ஒன்று 'இளவரச நல்லூர்' என்று பெயர் பெற்றிருப்பதும் இதனை வலியுறுத்தும்.

மேல்கரை அரையநாட்டு ஊர்களில் விதரி என்ற ஊர் மிகவும் தொன்மையானது. பதரி–வதரி–விதரி என்பது இலந்தைமரத்தைக் குறிக்கும். எலந்தமரக் காடுகள் மிகுந்த இடம் விதரி என்று பெயர் பெற்றிருக்கலாம். விதரி கொடுமுடிக் கோயில்கட்குக் கொடையாக அளிக்கப்பட்ட ஊராகும். இலந்தவனம் என்றும் விதரியை அழைப்பர். சமயச் சிறப்பு வாய்ந்த விதரி திருச்சற்றம்பல நல்லூர் என்று பெயர் பெற்றிருப்பது கல்வெட்டு மூலம் அறியப்படும் செய்தியாகும். நல்லூர் என்று பெயர்பெறும் ஊர்கள் வரலாறு, சமயச் சிறப்பு வாய்ந்த ஊர்களாகும். பொன்னாச்சி அம்மன் பாடலில் அம்மன் எழுந்தருளிய இடம் இலந்த மரத்துளிர் எனக் கூறப்படுவது விதரியின் பெயர்க் காரணமாக இருக்கலாம்.

விதரி என்ற ஊர் விதரிமங்கலம் என்னும் பெயர் பெற்றது. மேல்கரை அரையநாட்டில் எழுநூற்றுமங்கலம், வடிவுடையமங்கலம் என்று இரண்டு ஊர்களுக்குச் சிறப்புப் பெயர் அமைந்துள்ளது. விதரிமங்கை என்று இவ்வூர் பெயர் பெற்றதாக கொங்கு ஆய்வாளர் கே.எஸ்.வைத்தியநாதன் கூறுகிறார். சிலர் இவ்வூரை விதரிமந்தை என்றும் அழைக்கின்றனர். மங்கலம், நல்லூர் என்பது அந்தணர் வாழும் ஊர்களாகும்.

விதரி என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பேரூரின் ஒரு பகுதியாகவே அத்திப்பாளையம் உருவாகியிருக்க வேண்டும். மேல்கரை அரையநாட்டு ஊர்த்தொகைப் பாடலில் விதரி குறிக்கப்பட்டுள்ளது. திருச்செங்கோடு அ.முத்துசாமிக்கோனார் தம் கொங்குமண்டல சதக ஊர்த்தொகைப் பாடலுக்கு உரை 1923 இல் எழுதும்போது 'விதரி–அத்திப்பாளையம்' என்றே எழுதியுள்ளமை கவனிக்கத்தக்கது.

பொன்னாச்சியம்மன் கோயில் உள்ளது அத்திப்பாளையத்தில். ஆனால் பொன்னாச்சியம்மன் ஊஞ்சல் பாடலில் அம்மன் விதரியில் எழுந்தருளியிருப்பதாகவே குறிக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது- .

*'சீதமுயர் விதரியூர் தன்னில் வாழும்*
*தேவிபொன்னாச்சியம்மன்'*
*'சுந்தரஞ்சேர் விதரியூர் தன்னில் வாழும்*
*தேவிபொன் னாச்சியம்மன்'*
*'செகம்மெச்சும் விதரியூர் தன்னில் வாழும்*
*தேவிபொன் னாச்சிச்சியம்மன்'*
*'செம்பொன்மணி மேடைசெறி விதரி யூரில்*
*செழிக்கவளர் காரணிபொன் னாச்சியம்மன்'*
*'பரிவுடனே விதரிநகர் தன்னில் வாழும்*
*அந்தரி புரந்தரியே......*
*அழகுயர்பொன் னாச்சியம்மன்'*
*'இன்னிலத்தில் புகழ் பெருகும் விதரியூரில்*
*அழகுயர்பொன்னாச்சியம்மன்'*
*'அட்டதிசை புகழ்விதரி நகரில் மேவும்*
*அழகுசுந் தரிகவுரி அருள்சிங் காரி'*

போன்ற தொடர்களைப் பொன்னாச்சியம்மன் ஊஞ்சல் பாடலில் காணுகிறோம்.

நீர் வளமும், நில வளமும் மக்கள் மனநலமும் மாண்பு நலனும் பொருந்தி அத்திப்பாளையம் திகழுகிறது. அத்திப்பாளையம் அருகில் நொய்யலில் அனை ஒன்று கட்டப்பட்டு நீர் அத்திப்பாளையம் வழியாகத் தெற்கு நோக்கிச் சென்றுள்ளது. அத்திப்பாளையத்தில் கரை எனப்படும் பள்ளம் ஒன்று ஓடுகிறது. பழங்காலத்தில் அந்தக் கரையிலும் அணை கட்டி நீர்தேக்கிப் பாசனவசதி செய்துள்ளனர். அணையும், பாசன வசதிக்குரிய சிறந்த அடையாளங்கள் இன்றும் காணக்கிடக்கின்றன. இவை அத்திப் பாளையத்தாரின் செயற்கரும் செயலைக் காட்டுகிறது. வெள்ளோடு சாத்தந்தை குலக் காலிங்கராயன் வெட்டிய கால்வாய்க் கழிவுநீர் நொய்யலைக் கடந்து விதரி வழியாகத் தெற்கு நோக்கிப் போயுள்ளது. அதன் அடையாளம் இன்றும் உள்ளது.

அத்திப்பாளையத்தோடு தொடர்புடைய விதரி ஆன திருச்சிற்றம்பல நல்லூர் 'விதரி மங்கலம் விதரி மங்கை 'விதரி மந்தை ' என்று பல்வேறு பெயர்களைப் பெற்றுள்ளது என்பதைக் கண்டோம். மேல்கரை அரைய நாட்டில் எழுநூத்திமங்கலம், வடிவுடைய மங்கலம் என்ற பழம்பதிகள் உள்ளன என்றும் முன்பு கண்டோம். அந்த ஊர்களும் எழுநூத்திமங்கை, வடிவுடைய மங்கை என்று பெயர் பெற்றுள்ளன. கொங்குநாட்டுச் சமணப் பெருந்தலமான விசயமங்கலம்-விசயமங்கை என்று பெயர் பெற்றுள்ளது நோக்கத்தக்கது.

எனவே எல்லாக் குறிப்புக்களையும் நோக்கும்போது விதரி என்ற தாய்க் கிராமத்தின் பண்டைய சேய்க் கிராமமாக அத்திப்பாளையம் விளங்குகிறது எனலாம்.

## 6. பொன்னாச்சியம்மன்

### தாய்த் தெய்வத் தொண்மை

அன்னை சக்தி வழிபாடே உலகின் தொன்மையான வழிபாடாகும். இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் அரப்பா, மொகஞ்சதாரோ போன்ற அகழ்வாராய்ச்சி நடைபெற்ற இடங்களிலும் தாய்த்தெய்வ வழிபாடும், அன்னை வழிபாடும், சக்தி வழிபாடும் மூல வழிபாடாகவும், தொன்மையான வழிபாடாகவும் விளங்குகிறது. இந்தியாவில் மட்டுமின்றி சிரியா, எகிப்து போன்ற பிற நாடுகளிலும் பெண் தெய்வ வழிபாடே மிகுதியாக இருந்துள்ளது. அன்னை வழிபாட்டு நாகரிகம் பாரசீகம், கிரேக்க நாடுகளிலும் பரவி இருந்தமைக்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டுப் பண்டைய இலக்கியங்களான சங்க இலக்கியங்களிலு-ம் கொற்றவையாகிய அன்னையைக் காடுகளின் நடுவே வாகை மரத்தின் அடியிலும், வேப்ப மரத்தின் அடியிலும் எழுந்தருளச் செய்து வணங்கினர். கொற்றி, கொற்றவை, சூலி, மலைமகள், பழையோன், துணங்கை, கானமர்செல்வி, காடுகான், வடவாயிற் செல்லி என்ற பற்பல பெயர்களில் அன்னைத் தெய்வம் அழைக்கப்பட்டது என்பதைச் சங்க இலக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

பேசும் மொழியை, வாழும் நாட்டை, தேடிய செல்வத்தை, பெற்ற கல்வியை, காட்டும் ஆண்மையை, பெறும் வெற்றியைத் தாயாகவே உருவகம் செய்து வழிபட்ட தொன்மைச் சமுதாயம் நமது தமிழ்ச் சமுதாயம்.

### கொங்கு நாட்டு அம்மன்

கொங்கு காணியான பட்டயத்தில் கொங்கு நாட்டில் மக்கள் குடியேறிய வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கொங்கு நாட்டில் குடியேறிய மக்கள் தேவாலயம், மடாலயம், பிரம்மாலயம், குருவாலயம் எடுத்த விபரமும் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலும் மக்கள் தாய்த் தெய்வத்தையே செல்லாண்டியம்மன், அங்காளம்மன், காளியம்மன், பகவதியம்மன், கொங்கால

அம்மன் என்ற பல அம்மன் பெயர்கள் உள்ள அப்பட்டயத்தில் பெரிய நாச்சியம்மன், அழகநாச்சியம்மன், பாடகநாச்சியம்மன், பச்சை நாச்சியம்மன் போன்ற பல பெயர்களும் காணப்படுகின்றன.

மேற்கண்ட பெயர்களில் பல பெண் தெய்வங்களைக் கொங்கு வேளாண் பெருமக்கள் எழுந்தருளச் செய்து வழிபட்டனர் என்பது வரலாறு.

*'இந்த தெய்வங்களுடைய கிருபையினாலே தன, கனக, வஸ்து, வாகன, சந்தான, புத்திர பாக்கியங்கள் பெற்று விளாந்தேரி நீடுழி வாழ்வார்கள்'* என்று கொங்கு காணியான பட்டயத்தில் கூறப்படுகிறது. இதற்கேற்பக் கொங்கு நாட்டில் கொங்கு வேளாளப் பெருமக்களின் குடிபாட்டுக் காணியுரிமைத் தெய்வங்கள் பலவும் பெரும்பாலும் பெண் தெய்வங்களாக இருப்பதும், கொங்கு வேளாண் பெருமக்கள் அக் குலதெய்வக் கோயில்களைக் கண்ணெனக் காத்துத் திருப்பணி செய்து விழாவெடுத்துச் சீரும் சிறப்புடன் நடத்தி வளமெலாம் பெற்று அன்னையர் அருளால் வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர்.

## சிறப்பான அடைமொழி

உலகில் மக்கள் அடைய விரும்பும் பொருள்களில் பொன் மிகவும் முக்கியமானது. ஒரு பொருளைச் சிறப்பாகக் காக்க விரும்பினால் 'பொன்னேபோல் காப்பாற்றுக' என்று கூறுவது வழக்கம். பொன்மலை, பொன்முடி, பொன்மேழி, பொன்குலுக்கிநாடு என்று பலவற்றிற்குப் பொன் தொடர்பைக் கொண்ட மக்கள் பொன்னையன், பொன்னம்மாள் என்று தமக்கும் பெயர் வைத்துக் கொண்டனர். பொன்காளியம்மன் (பொங்காளியம்மன்), பொன் குழலியம்மன் என்று அன்னைத் தாய்த்தெய்வத்திற்கும் பொன் அடைமொழி சூட்டி மகிழ்ந்தனர்.

## நாச்சியம்மன்

நாச்சி என்ற சொல்லுக்குத் தலைவி, அரசி, பெண் தெய்வம், தேவி என்று பல பொருள்கள் உண்டு. இப்பொருளில் மனம் ஈடுபட்ட கொங்கு வேளாண் பெருமக்கள் பல இடங்களில் நாச்சியம்மன், நாச்சிமார், நாச்சியாயி என்ற பெயர்களில் கோயில்கள் எடுத்தனர்.

கொடுமணல், சேரன், பாண்டியன், பனங்காடை குலத்தாருக்கும், தேவமாரில் கணக்கன் குலத்தாருக்கும் பாணியுரிமை கொண்டது பேரூர். அங்கு நொய்யலாற்றில் அணைகட்டுகின்ற முயற்சியில் அம்மக்கள் கூடி ஈடுபட்டனர்.

அணை நிற்கவில்லை. அணை அருகே நாச்சியாரைப் பிரதிட்டை செய்து வழிபட்டு அணை கட்டவே அணை நின்றது என்று கணக்கன் கூட்டத்தார் பட்டயம் என்ற ஏட்டுச்சுவடி கூறுகிறது.

வாழவந்தி நாட்டுத் தோழூர் வரலாற்றுப் புகழ்கொண்டதோர் பேரூர். அங்கு மக்கள் நாடும் மக்களும் வாழ்வாங்கு வாழ நாச்சியார் கோயில் எடுத்தனர் என்பது வரலாறு. நாச்சியம்மாள், நாச்சிமுத்து என்று பெயர்களைத் தம் மக்களுக்கு வைத்து மகிழ்ந்தனர். காங்கய நாட்டில் நாட்டாராயன் கோயிலில் நாச்சிமுத்து அய்யன் என்ற தெய்வத்தையும் எழுந்தருளச் செய்து வழிபட்டு வருகின்றனர்.

கொற்றானூரில் கொங்கு வேளாண் பெருமக்களுக்குக் காணித் தெய்வமாகப் பெரியநாயகி கோயில் உள்ளது. ஆனால் அக்கோயில் கல்வெட்டு அந்த அம்மனைப் பெரிய நாச்சியம்மன் என்றே குறிக்கிறது. கொங்கு காணியான பட்டயம், பருத்திப்பள்ளிப்பட்டயம், வரகுண்ணப் பெருங்குடியர் செப்பேடு, பாசூர்ச்செப்பேடு, பொன்னிவாடிப் பட்டயம், சென்மப்புலவன் பட்டயம், கத்தாங்ககண்ணிச் செப்பேடு போன்ற பல கொங்குநாட்டு ஆவணங்களில் நாச்சியார் தெய்வப் பெயர்கள் பல இடங்களில் பயின்று வந்துள்ளதைக் காணுகின்றோம்.

## பொன்னாச்சியம்மன்

வழக்கமான சிறப்பு அடைமொழியான பொன் என்ற அடைமொழியை நாச்சியம்மனுக்கும் அளித்துப் பொன்னாச்சியம்மன் என்ற பெயரில் அம்மனைப் பிரதிட்டைச் செய்து சிறப்புடன் வழிபட்டு வருவாராயினர்.

அத்திப்பாளையம் செம்பூத்த குலத்தார் பெரிய பொன்னாச்சியம்மன், சின்னப் பொன்னாச்சியம்மன் என்று இரண்டு திருக்கோயில்களை உருவாக்கி வழிபட்டு வருவது சிறப்புக்குரியதாகும். அனுமன்பள்ளி போன்ற பல ஊர்களில் சின்னம்மன், பெரியம்மன், சின்னாயி, பெரியாயி என்ற இரு பெயர்களில் அம்மனை எழுந்தருளச் செய்து வழிபட்டு வருகின்றனர்.

ஒரூரில் இவ்வாறு இரண்டு அம்மன்களைத் தொடர்புடைய இருபெயரில் வழிபடுவது மிகவும் சிறப்புக்குரியது என வடமொழி நூல்கள் பலவும் கூறுகின்றன.

வீராச்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர் இயற்றிய வேளாளபுராணம் அரங்கேறிய குறிச்சி என்னும் தொன்மைப் பெயருடைய இலக்குமிநாயக்கன்பட்டி தென்கரை நாட்டில் மிகவும் முக்கியமானதோர் ஊராகும். அங்கு பொன்னாச்சியம்மன் எழுந்தருளியுள்ளார்.

*குழகன் பொன்னூதிக் குமரனைப் பெற்ற*
*அழகீசர் பொன்னாச்சி யம்மன்-பழகும்*
*அருள்பரவும் பன்னிரண்டூர் ஆந்தைகுல மன்னர்*
*பரவும் குறிச்சிப் பதி*

என்பது குறிச்சிக் காணிப்பாடலாகும்.

## பொன்னாட்சியம்மன்

பொன்னாச்சியம்மனை மக்கள் சிலர் பொன்னாட்சியம்மன் என்றும் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. வேளாளபுராணம் பாயிரப் பகுதியில் குறிச்சிப் பொன்னாச்சியம்மனைக் கந்தசாமிக் கவிராயர் பொன்னாட்சியம்மன் என்றே குறிக்கப்படுவதைக் காணுகிறோம்.

*தன்னாட்சி உலகமெலாம் தழைத்தோங்கிச் சரிபாதி*
*அந்நாட்சி வனங்குதவ வருத்தஞ்சொற் போற்பிரியா*
*தென்னாட்சி தடனெனையு மென்றுகொண்ட பெருந்தேவி*
*பொன்னாட்சி அம்மையிரு பூஞ்சரணம் துதிப்பேமால்*

என்பது பொன்னாட்சியம்மன் துதிப்பாடலாகும்.

காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, விதரி பொன்னாட்சி ஆகிய நான்கு அம்மனுமே சிறப்புமிக்க ஆட்சி பெறும் அம்மன் என்பது வழக்கமாகும்.

## அலகுமலைக் குறவஞ்சியில்

பொங்கலூர் நாட்டுப் பெருமையையும் ஒதாள குலத்தார் சிறப்புக்களையும் கூற எழுந்த நூல் அலகுமலைக் குறவஞ்சி. ஒதாள கோத்திரத்தாரின் வெற்றி மேம்பாட்டுக்குத் துணைசெய்த பல கொங்கு வேளாண் குலத்தாரில் முதலாவதாக வைத்து எண்ணப்படத்தக்கவர்கள் செம்பூத்த குலத்தினர். அந்நூலில் குறவன் கூற்றாக,

*'தளிகைவா வைன்சேரி ஓதாள கோத்திரன்*
*சார்பான செம்பூதர் கண்ண குலாதிபர்*
*எழிலான பூசனும் மாடை குலத்தார்கள்*
*இவர்கள்தம் பண்ணையப் பற்றுத் தொருவிலே'*

எனவரும் பகுதியில் ஒதாளர் சார்பான செம்பூதர் எனக் குறிக்கப்படுவதைக் காணுகிறோம்.

அக் குறவஞ்சியில் பொன்னாச்சியம்மன் பெயர் சிறப்புடன் குறிக்கப்பெறுவதைக் காணுகிறோம்.

*'மண்டலம் தன்னில் கொடுவாய் நாலுகெடித்தல*
*வானவன் சேரியில் வலுப்பூர் அம்மனுக்கும்*
*அண்டத் தவர்தொழும் செல்லாண்டி அம்மனுக்கும்*
*விந்தைப் பகவதி பொன்னாச்சி அங்கம்மைக்கும்'*
*'இங்கு செல்லாண்டி பொன்னாச்சி அம்மனை*
*முனிக்குப் போதயன் வலுப்புத்தூர் அம்மை*
*தனைப்பொன் மாரியை நினைக்கும் காரியம்'*

எனவரும் பகுதியில் பொன்னாச்சியம்மன் சிறப்புடன் குறிக்கப்படுகிறார்.

## இராமாபாளையத்தில்

திருப்பூர் அருகே இராமாபாளையம் என்னும் ஊரில் பெரிய பொன்னாச்சியம்மன், சின்னப் பொன்னாச்சியம்மன் கோயிலைக் குலதெய்வமாகக் கொண்டு அப்பகுதிச் செம்பூத்தகுல மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

பொன்னாச்சியம்மன் என்னும்பெயர் கொங்கு உலகில் சிறப்புடன் வழங்கப் பெற்றதை மேற்கண்ட செய்திகள் கூறுகின்றன.

# *7. பொன்னாச்சியம்மன் திருக்கோயிலும் திருவிழாவும்*

அத்திப்பாளையம் செம்பூத்த குலத்தாரின் காணியுரிமைக் குடிபாட்டுக் குலதெய்வக் கோயிலாகப் பொன்னாச்சியம்மன் திருக்கோயில் விளங்குகிறது. பெரிய பொன்னாச்சியம்மன், சின்னப் பொன்னாச்சியம்மன் திருக்கோயில் என இருபெரும் திருப்பெயரில் அம்மன் கோயில்கள் அமைந்துள்ளன. இரண்டு அம்மனையும் அக்கா–தங்கை என அழைக்கும் பழக்கமும் உள்ளது.

பாண்டியன் குட்டைப் பொன்னாச்சி அம்மன் என்றும், சரளைப் பொன்னாச்சி அம்மன் என்றும் இரண்டு கோயில்கள் எழுநூற்றிமங்கலம் பகுதியில் உள்ளன. அத்திப்பாளையம் பண்டாரம் குடும்பத்தினரே அங்கும் பூசை செய்கின்றனர்.

அத்திப்பாளையம், அத்திப்பாளையம்புதூர், விதரிநத்தம்புதூர், குளத்துப் பாளையம், வலையபாளையம் என ஐந்து பகுதியாக இக்கிராமம் அமைந்துள்ளது.

காஞ்சிமாநதி எனப்படும் நொய்யலாற்றின் தென்கரையில் வடக்கு நோக்கிப் பெரிய பொன்னாச்சியம்மன் கோயிலும், சற்றுத் தூரத்தில் சின்னப் பொன்னாச்சியம்மன் கோயிலும் அமைந்துள்ளது.

பெரிய பொன்னாச்சியம்மன் கோயில் அமைந்துள்ள இடம் உயர்ந்த மணமேடாக உள்ளது. அதனை உப்பிலியன் திட்டு என அழைப்பர். காரை மரங்கள் வளர்ந்து கூடாரமாக இருந்த இடத்தில் இலந்தமரம் துளிர்விட்டு வளரும் இடத்தில் கோயில் அமைந்துள்ளது. இதனை சாமி அழைக்கும்போது பாடப்படும் விருதாவளியில் கூறப்படுவதைக் காணலாம். பொன்னாச்சியம்மன் எழுந்தருளியுள்ள இடம்

*ஈனா வரடி*
*இருவரடி பொன்னம்மன்*
*உப்பிலியப்பன் திட்டு*
*உயர்ந்த மணல்மேடு*
*காரைமரம் கூடாரம் இலந்தமரத் துளிர்'*

என்று பாடப்படுகிறது. இலந்த மரத்தைப் பதரி அல்லது பதரி–விதரி என்று கூறுவர். காரை மரமும் உள்ளது. தாய்க் கிராமமான விதரி–விதரிநகர் தோற்றத்தை இலந்தமரம் கூறப்படுவதால் அறியலாம்.

பெரிய பொன்னாச்சியம்மன் கோயில் இராசகோபுரம் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. திருமண மண்டபம், பொங்குமடம் (மடைப்பள்ளி) கட்டப்பட்டுள்ளது. இராசகோபுரம் 1984 இல் அமைக்கப்பட்டது. அய்யப்பன், விநாயகர், அம்மன் முதலிய சுதைச் சிற்பங்கள் இராசகோபுரத்தை அணிசெய்கின்றன. வண்ணப்பூச்சுப் பூசப்பெற்று இராசகோபுரம் அழகாக உள்ளது.

இரண்டு தூரிகள், இரண்டு பலிபீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிம்ம வாகனம் இல்லை. 1936 இல் கட்டப்பட்ட மகாமண்டபத்தில் 8 தூண்கள் உள்ளன. தூண்களில் ஆண், பெண் அடியார் சிற்பங்கள், மயில், சூலம், மீன், குதிரை முதலிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 1936 இல் குடமுழுககு விழா நடைபெற்றது. மேலும் சில திருப்பணிகள் நடைபெற்று 27.3.1985 இல் மீண்டும் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

மகாமண்டபத்தில் ஆண் பூதம், பெண் பூதம், முகப்பில் கஜலட்சுமி உருவங்கள் உள்ளன. பூதம் அருகே சிலை ஒன்றுள்ளது. 25.3.1956, 16.3.1985 ஆகிய தேதிகளில் குதிரைகள் அமைக்கப்பட்டன. 16.9.1994 இல் கொம்மாண்டம்பட்டி ப.ஆறுமுகக் கவுண்டர் ஒரு குதிரை கட்டி வைத்துள்ளார்.

மகாமண்டபம், அர்த்தமண்டபம் ஆகியவைகளைக் கடந்து கருவறையினுள் சென்றால் வேண்டியவர்கட்கு வேண்டியவைகளை வேண்டியாங்கு அருளும் கலியுகக் கண்கண்ட தெய்வம் பெரிய பொன்னாச்சியம்மன் வீற்றிருந்தருள்புரிவதைக் காணலாம். நான்கு திருக்கரங்களுடன் வலப்புறக் கைகளில் உடுக்கையும், சூலமும் தாங்கி இடப்புறக் கைகளில் செண்டும், அமிர்த பாத்திரமும் கொண்டு விளங்குவதைக் காணலாம்.

மகாமண்டபத்தில் பச்சை வேலப்பகவுண்டர் என்னும் அடியவர் வணங்கும்நிலையில் சிலை வடிவில் உள்ளார். வலப்புறம் வில்அம்பும், இடப்புறம் கத்தியும் கொண்டு அழகிய தோற்றத்தில் நிற்பவர் இவ்வட்டாரத்தில் அதிகாரம் செலுத்திய செம்பூத்தகுலத் தலைவராக இருக்கலாம்.

கொங்குப் பண்டாரங்களில் தொன்மையான குடும்பங்களைச் சேர்ந்த கோவணாண்டி வகையில் குளத்துப்பாளையம், அத்திப்பாளையம் வகையைச் சேர்ந்த முத்தாண்டி, மாரியாண்டிப் பண்டாரம் வகை பொண்ணாண்டி ஆக இரண்டிரண்டு குடும்பங்கள் ஆக நான்கு குடும்பத்தினர் முறைப்படி இருகால பூசை சிறப்புடன் செய்து வருகின்றனர். கோயிலில் எப்பொழுதும் குறையாமல் நின்று எரியும் நந்தாதீபம் எரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நித்திய, மாத, வருட முறைப்படி வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

கோயிலில் நின்ற நிலையில் விநாயகர், சூலதேவர், பெரிய பொன்னாச்சியம்மன், சின்னப் பொன்னாச்சியம்மன் ஆகியோரின் பஞ்சலோக செப்புப் படிமங்கள் உள்ளன. சப்பரம் என்னும் எடுப்புத் தேரில் இத்திருமேனிகள் உலாவாக திருவிழாவின்போது எடுத்து வரப்படுகின்றன.

அம்மனுக்குத் தங்கப்பட்டம், தங்க மாங்கல்யம், வெள்ளியில் இரண்டு ஒட்டியானம், கிரீடம், நான்கு கண்ணடக்கம், கை, கால்கள் இரண்டிரண்டு ஆகியவை உள்ளன. பூசைப் பரிகலன்களாக வெண்கலச் சேகண்டி, பூசைமணி, தூபக்கலம், விபூதித்தட்டு, ஆலாத்தி போன்றவை அரிய வேலைப்பாடுகளுடன் உள்ளன. பெரிய பொன்னாச்சி அம்மனுக்கு 18 ஏக்கர் நிலமும், சின்னப் பொன்னாச்சி அம்மனுக்கு 8 ஏக்கர் நிலமும் மானியமாக உள்ளது.

கோயிலில் குடிதண்ணீர்க் கிணறு மூலம் அடியவர்கட்கு நன்கு தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

பிரதி அமாவாசைதோறும் கொங்கேழு தலங்களில் தலைமைத் தலமான கொடுமுடிக் காவிரிக் கரையிலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து சிறப்பு வழிபாடு செய்கின்றனர். காவடிக்கரை பொன்னப்ப கவுண்டர் வகையராவினர் தலைமையில் தீர்த்தம் கொண்டுவரப்படுகிறது.

அத்திப்பாளையம் காணியாளர்கள் பெரிய பொன்னப்பன், நடுப்பொன்னப்பன், சின்னப் பொன்னப்பன், பெரிய பொன்னம்மாள், நடுப்பொன்னம்மாள், சின்னப் பொன்னம்மாள், கருமலை, கருப்பண்ணன், வேட்டையப்பன், கங்கப்பன் எனப் பலவாறு பெயர் வைக்கும் வழக்கம் காணப்படுகிறது.

கோயிலின் கிழக்குப் பக்கம் 8 கல் தூண்கள் உள்ளன. அதில் எடுப்புத் தேர் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பெறும். கோயிலின் எதிரில் பங்குனிஉத்தரத் திருவிழாவின்போது ஆண்டுதோறும் வழக்கமாக அத்திப்பாளையம், பழையபாளையம் பரம்பரைக் குயவர் பெருமக்களால் செய்யப்பெறும் குதிரை உருவாரங்களுடன் காணியாளர்கள் வேண்டுதலுக்காகச் செய்து வைக்கும் நாய், பசு, மனிதர் உருவாரங்களும் உள்ளன. அவை உள்ளூர்க் கலைஞர்களின் செய்நேர்த்தியைக் காட்டுகின்றன. குதிரை உருவாரங்கள் இருபது உள்ளன.

அருகில் ஒரு பேரூர் இருந்து அழிந்த இடம் நத்தமேடு–நத்தக்காடு என்று அழைக்கப்படுகிறது. அங்கு பண்டைக்காலச் செக்குகள், அம்மிகள், செங்கற்கள், மண்பானைகள் போன்ற பழம்பொருட்கள் கிடைக்கின்றன. நத்தமேடு உயரமாகவும் அதிக பரப்பளவு உள்ளதாகவும் காணப்படுகிறது. தென்னிலைச் செப்பேட்டில் குறிக்கப்பட்ட கொடுமுடிப் பாதையும் சூலக்கல்லும் அருகில் உள்ளது.

நத்தமேட்டில் மிகப் பழமையான விநாயகர் உருவம் உள்ளது. இப்போது வழிபாட்டில் இல்லை. சூரியர், சந்திரர் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மறவன் தாறு என்ற பகுதியில் கிழக்கே இரண்டு தொன்மையான நடுகற்கள் காணப்படுகின்றன. வட்டுடையுடனும் அழகிய தலை அலங்காரத்துடனும், வாள், கேடயம் தாங்கிய நடுகல். இவற்றைக் குறவன், மறவன் என்று கூறுகின்றனர். ஒரு நடுகல் மிகவும் சிதைந்துள்ளது. பச்சை வேப்ப கவுண்டர் போரில் இவர்களை வெட்டியதாகக் கூறுகின்றனர். பாண்டியன் குட்டைப் பகுதியில் தொல்பழங்காலக் கல்வட்டம் சிதைந்து காணப்படுகிறது.

சின்னப் பொன்னாச்சியம்மன் கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெறுகிறது. சின்னப் பொன்னாச்சியம்மனுடன் நாகர், புளியாத்தாள் கவுண்டச்சி, ஆத்திமடை ஐயர், வெள்ளை விநாயகர், மருதலைக் கவுண்டர்–கவுண்டச்சி, தலைப்பாக்கட்டிப் பொன்னைய கவுண்டர்–கவுண்டச்சி, மணிகட்டி

பொண்ணாண்டி, கோப்பனாயி, அரசாயி, கன்னிமார், கருமலையான், வேட்டைக்காரர், செம்மலை வேட்டைக்காரர், ராடகுரு தன்னாசி, பாம்பாட்டிச் சித்தர், துலுக்கர், மழுக்கர், கட்டியக்காரர் ஆகியோர் வழிபாட்டில் உள்ளனர். தெய்வலத் திருமேனிகள் பாலாலயத்தில் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது.

கருமலையானுக்கு வேங்கைக் கவை ஆயுதமாக உள்ளது. கருமலையான் பலி ஏற்காத சுவாமியாவார். **20.8.1993** அன்றும், **20.2.1993** அன்றும் இரு குதிரைகள் செய்து வைக்கப்பட்டுள்ளன. **1995** முதல் திருப்பணி தொடர்ந்து நடைபெறுகிறது. செவ்வாய்க் கிழமை குழந்தையில்லாதோர் பொன்னாச்சி அம்மனையும் கருமலையானையும் வழிபடுகின்றனர். பேய் பிடித்தவர்கள் **5** முதல் **7** வாரம் இங்கு வந்து வழிபட்டு நலம் பெறுகின்றனர்.

விழாக்களின் தொடக்கத்தில் பறையர் குலத்தாரால் பாடப்படகின்ற விருதாவளியில் திருக்கோயில் தெய்வம், அதன் சிறப்பு ஆகியவை வெளிப்படுகின்றன.

*'அண்ணன் கருமலையான்*
*அடங்காப் பெருவேங்கை*
*முட்டாள் கருமலை*
*முடிபெருந்த தன்னாசி*
*பச்சைத் துலுக்கன்*
*பாம்பாட்டிச் சித்தன்*
*மழுக்கன் துலுக்கன்*
*மாறுவேடக் காரன்*
*வந்துவிட்டேன் கருமலை*
*'அருமுகனே திருமுகனே*
*பெரிய பொன்னாச்சி,சின்னப் பொன்னாச்சி*
*திருக் கலியாணம்*
*தினை தூர்த்தித் தினைபரப்பி*
*தென்னம்பாளை விரித்துலர்த்தி*
*பாலாலே பல்விளக்கி*
*ஓலையாலே நாவழித்து*
*அள்ளியிட்ட திருநீறு*
*அலங்காரப் பாவணைகள்*
*பொன்னூர் செலுத்திப்*
*பூந்தேர் ஏறி வரவேணும் அம்மா....'*

என்பது ஒரு விருதாவளியாகும்.

கார்த்திகை தீபம், மாசி மகம், சிவராத்திரி, பங்குனி உத்தரத் திருவிழா ஆகியவை மிகச் சிறப்புடன் கொண்டாடப் பெறும். பங்குனி உத்தரத் திருவிழா பிரமோற்சவம் என அழைக்கப்படும் பெருந்திருவிழா ஆகிய பிரமோற்சவமே தேர்த்திருவிழா ஆகும்.

இத்திருவிழா ஒரு வருடம் பெரிய பொன்னாச்சியம்மன் கோயிலிலும், அடுத்த ஆண்டு சின்னப் பொன்னாச்சியம்மன் கோயிலிலும் நடைபெறும். ஒவ்வொரு திருவிழாவின் போதும் மூன்று குதிரைகள் செய்யப்படும். மாசி சிவன்ராத்திரி விழாவின்போது குதிரை செய்ய மண் கொடுக்கப்படும். அம்மன் முன் வைத்துப் பூசை செய்து மண்ணை உள்ளூர்க் குயவரிடம் கொடுப்பர். மூன்று குதிரைகளில் முதலாவது அரண்மனைக் குதிரை, இரண்டாவது முப்பாட்டுக்காரர் குதிரை, மூன்றாவது ஊர்ப்பொதுக் குதிரை ஆகும். கோயில் தர்மகர்த்தா அவர்கள் இதை முன்னின்று நடத்துவார்கள்.

திருவிழாவின்போது முப்பாட்டுக்காரர், பண்டாரம், பறையர் ஆகியோர் காப்புக்கட்டி விரதம் இருப்பர். உப்பு இல்லாத ஒருவேளைச் சாப்பாடே சாப்பிட வேண்டும். கோயிலைவிட்டு விழா முடியும்வரை எங்கும் போகக்கூடாது. கட்டிலில் படுக்கக்கூடாது. தூய்மையாக இருக்க வேண்டும். நியமங்கள் தவறாமல் பக்தியுடன் இருக்க வேண்டும். விழா முடிந்து காப்பு அவிழ்க்கும்வரை மேற்கண்டபடி தவறாமல் இருக்க வேண்டும்.

பங்குனி உத்தரத்திற்கு முன்புவரும் ஒரு செவ்வாய்க்கிழமை பூச்சாட்டப்பெறும். அடுத்த செவ்வாய் படைக்கலம் எடுத்தல் நிகழும். முந்திய திங்கட்கிழமையன்று தேருக்கு ஆயக்கால் ஊன்றுவர். படைக்கலம் எடுக்குமுன் நத்தக்காட்டு முனி, தனம்காத்த முனி ஆகியவற்றிற்குக் கிடாய் வெட்டுவர்.

முப்பாட்டுக்காரரின் சாமி வீட்டிலிருந்து செவ்வாயன்று முப்பாட்டுக்கார ஆத்தா அம்மனின் நகை, கிரீடம், மற்ற அலங்காரப் பொருள்கள் இவைகளை மாவு, விளக்கு, திணை, கருப்பட்டி ஆகியவற்றுடன் பேழையில் வைத்துக் கோயிலுக்கு எடுத்து வருவர். மாவிளக்கு முப்பாட்டுக்காரரால் எடுக்கப்படும். புறப்படும்போது குதிரை துலுக்கிய பின்பே புறப்படுவர்.

அடுத்து அம்மை அழைத்தல் காப்புக்கட்டிப் பறையர் மூலம் நடைபெறும். அப்போதும் குதிரை துலுக்குதல் வேண்டும். வலையபாளையம் செட்டுக்காரர் பொன்னப்பகவுண்டர் வகையராவினர் குதிரை பிடிப்பர். கோயிலுக்கு எழுந்தருளும்போதும் குதிரை துலுக்குதல் வேண்டும். அம்மை அழைக்கும்போது முன்பு காட்டிய விருதாவளிகள் பாடப்படும்.

மகாமண்டபத்தில் உள்ள ஊஞ்சலில் அம்மனை எழுந்தருளச் செய்து ஒரு பக்கம் முப்பாட்டுக்கார ஆத்தாவும், மறுபக்கம் காப்புக்கட்டிப் பண்டாரமும்

இருந்து ஊஞ்சலை ஆட்ட அத்திப்பாளையம் முத்துப்புலவர் வகையறாவினர் ஊஞ்சல் பாட்டைப் பாடுவர். அப்போது வாத்தியக் கருவிகள் இசைக்கப்பெறும். இங்கு பாடப்படும் ஊஞ்சல்பாட்டு இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

கோயிலில் பந்தல் போட்டு அலங்காரம் செய்யப் பெற்றிருக்கும். குதிரை துலுக்குமுன் முப்பாட்டுக்காரர் தீர்த்தம் தெளிப்பார். வாணவேடிக்கைகள் நடைபெறும். தலைவாசலில் தோரணம் கட்டி கிடாய் வெட்டுவர்.

விநாயகன், அம்மன் தேர்கள் கோயிலைச் சுற்றிவரும். புதன்கிழமை காலை தேர் ஓட்டத்துடன் முதலில் முப்பாட்டுக்காரர் பொங்கல் வைப்பார். பின் கிராமத்தார்கள் குடிபாட்டு மக்கள் பொங்கல் வைப்பர். பின் கோயிலில் பூசை நடைபெறும். பூசைக் கிடாய் வெட்டுவர். பூசை முடிந்த பின்னர் புதன் மாலை மீண்டும் படைக்கலம் முப்பாட்டுக் காரரின் சுவாமி வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படும். நகைகள் முதலியன முன்பாட்டுக்காரர் சுவாமி வீடு செல்லும்.

வியாழன் காலை காப்பு அவிழ்த்துப் பின்னர் மஞ்சள் நீராடல் நடைபெறும். பிள்ளையார் சூறைத் தேங்காய் உடைப்பர். முப்பாட்டுக்காரர், தர்மகர்த்தா, கொத்துக்காரர் சாப்பில் மூன்று தேங்காய்கள் உடைக்கப்படும்.

கோயில் வீட்டில் சுவாமி பொருள்களை வைத்துப் பூசை செய்து விரதம் முடிப்பர். முப்பாட்டுக்கார ஆத்தா நாள்தோறும் கோயில் வீட்டில் தீபம் வைப்பார். விழா சிறப்புடன் முடிவுறும். குடிபடைகட்கும், பணியாளர்கட்கும் அன்பளிப்புக்கள் வழங்குவர். எல்லா விழாக்களிலும் காணியாளர்கள் உற்றார் உறவினருடன் கலந்து கொள்வர். விழா இறுதியில் முப்பாட்டுக்காரர் வீட்டில் அன்னதானம் சிறப்புடன் நடைபெறும். முப்பாட்டுக்காரர், தர்மகர்த்தா, பண்டாரம், பறையர் ஆகியோரை அவரவர் இல்லங்களுக்கு முறைப்படி அனுப்பி வைப்பர்.

## 8. செம்பூத்த குலம்

கொங்கு வேளாளர்களில் அதிகமாகக் கானி ஊர்களைக் கொண்ட குலங்களில் ஒன்று செம்பூத்த குலம். இக்குலம் செம்பூத்தன் குலம், செம்பூதர் குலம், செம்பூதன் குலம், செம்பூத்தர் குலம், செம்போத்த குலம், செம்பூத்தை குலம் என்று பலவாறு குறிக்கப்படுகிறது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பிற்காலக் கல்செட்டுக்கள் இக்குலத்தை செம்பூற்று குலம் என்றும், இக்குலத் தலைவர்களை செம்பூற்றாதிபன் என்றும் குறிக்கிறது.

செம்பூத்த குலம், செம்பூத்த கோத்திரம், செம்பூத்த கூட்டம் என்றும் அழைக்கப்பெறும். குலம், கோத்திரம், கூட்டம் என்பன ஒரே பொருள் உணர்த்தும் சொற்களாகும்.

பண்டைக் காலத்தில் பூதன் என்ற பெயர் பெருவழக்கில் இருந்தது. தொல்காப்பிய உரையாசிரியர் பலரும் க, ச, த, ப முதன்மொழிப் பெயர்கட்குக் கண்ணன், சாத்தன், தேவன், பூதன் என்ற சொற்களையே மேற்கோள் காட்டுகின்றனர்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், ஈழத்துப் பூதன் தேவனார், பூதஞ்சேந்தனார், நப்பூதனார், மதுரைப் பூதன் இருநாகனார், கோடை பாடிய பெரும்பூதனார், மருங்கூ பாகைச் சாத்தன் பூதனார், பெரும்பூதங் கொற்றனார், காவல் முல்லைப் பூதனார் போன்ற பல பெயர்களைச் சங்க இலக்கியத்தில் காணுகிறோம். புரவலரும் புலவரும் பூதன் என்ற பெயர் பெற்றிருந்தனர். அவருள் பலர் பூதனார் என்று சிறப்பு ஆர் அடைமொழி அளித்துப் பாராட்டப் பெற்றிருப்பது அவர்களின் சிறப்பை விளக்கும். பிற் காலத்திலும் பூதத்தார். பூதத்தாழ்வார் என்ற பெயர் வழக்கைக் காணுகிறோம்.

தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர்,

*"குடுமிப் பருவத்தே கோதை புனைந்தே*
*இடுமுத்தப் பூதன் இருப்பல் - படுமுத்தம்*
*புன்னை அரும்பும் புகார்ப் புறம்பணையார்க்கு*
*என்ன முறையள் இவள்"*

என்ற பாடலை மேற்கோள் காட்டுகிறார். புள்வேளூர்ப்பூதன் என்று பிற்கால வள்ளல் ஒருவன் சிறப்புப் பெறுகிறான்.

ஆந்தை, காடை குலத்தார் அவ்வப் பறவைகளின் பெயரால் பெயர் பெற்றது போலச் செம்போத்து என்ற பறவையின் பெயரால் இக்குலம் பெயர் பெற்றது என்று ஆய்வாளர்கள் டி.எம்.காளியப்பா, கு.சேதுராமன் ஆகியோர் கூறுகின்றனர்.

செம்போத்துக்கு செங்காகம், செங்குயில், குக்கில், செண்பகம், செண்பகப் பட்சி எனப் பல பெயர்கள் உண்டு. செம்போத்தைக் காண்பது நல்ல சகுணம் என்று சகுன சாத்திர நூல் கூறுகிறது.

பூதப்பாண்டியன் போன்றோர் கரும்பூதன் என்று அழைக்கப்பட்டனர். அவர்களிலிருந்து வேறுபாடு தெரிய இவர்கள் செம்பூதர் எனப்பட்டனர் என்று க. பழனிசாமிப் புலவர் கூறகிறார்.

பெரிய குலத் தலைவரும் வேணாடர் முதல்வரும் ஆனபிடர்த்தலைப் பெரியான் கொற்றனூர் ஆதினத்துக்கு வந்த போதே அவர் தம் அமைச்சரான செம்பூத்த குலத்தாரும் உடன் வந்தவர்கள் என்பது வரலாறு.

செம்பூத்த குலத்தார் செம்போத்துப் பறவையைப் புனிதமாகக் கருதுபவர்கள். செம்பூத்த குலத்தார் **96** கீர்த்தி படைத்தவர்கள். **96** ஊர்களைக் கானியாகக் கொண்டவர்கள் என்பர். தனிப்பாடல் **88** உர்கள் செம்பூதர்கட்குக் கானியூர்கள் என்று கூறுகிறது.

***குலப்பாடல்களில் செம்பூத்த குலம்***

*அலகுமலைக் குறவஞ்சி,*

*“பொன்னர் ஓதாளர் பூசர் செம்பூதர்*
*அன்னதரு காரன் ஆவண் சாத்தந்தை*
*கோவன் குழாயர் கோவேந்தன் செம்பர்*
*மாவலர் பண்ணர் மாடை காடை*
*பூச்சந்தை ஆந்தை பொருளந்தை ஒழுக்கர்*
*பொன்னர் ஓதாளர் புகழ்சேர் குழாயர்*
*தென்னர் சாத்தந்தை செம்பர் செம்பூதர்*
*கண்ணர் பூசர் கணமாடை முதன்மையர்*
*முன்நின்று கும்பிட்டு முறை முறை வணங்க.”*

***கொடுமணல் இலக்கியங்கள்***

*“கொங்கில்வரு பண்ணை ஓதாளன் பெரியகுலன்*
*பொருளந்தை கோவன் வேந்தன்*
*குழாயன் நீலன் செங்கண்ணன் காடைவிளி புல்லன்*
*கூரப்பனை பூந்தை புன்னை*
*மங்கைமனி சாத்தந்தை பூசகுலன் அந்துவன்*
*மளுவழகர் பரதர் விரதர்*
*மாடை குன்றலி ஆடை அடகர்*
*வாணர்பூசச் சந்தை ஆடை*
*நங்குடிகள் வெண்டுவன் தளிஞ்சிசெம்பூதன் தூரை*
*காரை நீருனி பெருங்குடி*
*ஆதிகீரை கண்ணந்தை வண்ணக்கர் கோட்டார்*
*நற்கொங்கு வளநாடரே”*

*வேளாளர் கீர்த்தி 96 குலத்துப் பாடல்*

*"காருலவும் இனிதான காடைகுலர் ஆந்தைகுலர்*
*கனிவுசாத் தந்தைகுலமும்*
*கற்புயர் செம்பூத்தைகுலர் வண்ணக்கர் உண்ணக்கர்*
*கனத்தபூச் சந்தைகுலமும்."*

*மரபாளர் உற்பத்திக் கொம்மி*

*"பண்ணை பெரிய பொருள்தந்தை செங்கண்ணன்*
*பயிரன் பூசன் ஓதாளனுமே*
*கென்ய குளாயன் ஆந்தைசேரன் செம்பூத்தன்*
*பொன்னன் வெண்டுவன் பெருங்குடியன்".*

## பொங்கலூர் நாட்டில் :

பொங்கலூர் நாட்டில் காணிகொண்டு வாழும் வேளாண்குலப் பெருமக்களைத் தொகுத்து ஒரு பாடல் கூறுகிறது. அத்தொகுப்பில் செம்பூத்த குலம் குறிக்கப்பட்டுள்ளது.

*"பொன்னர் ஓதாள கோத்திரர் குழாயர்*
*பொருந்து சாத்தந்தை செம்பர் செம்பூதர்*
*கண்ணர் மாடையும் பூசனும் வெண்டுவர்*
*காடை செங்கண்ணர் பொருளந்தை பயிறர்*
*என்னை ஆந்தை கோவேந்தர் பணங்காடை*
*இப்படிச் சிறந்து ஓங்கி யிருக்கும்*
*இன்னம் நற்குடி வேளிர்கள் வாழ்வுற்று*
*இருக்கும் பொங்கலூர் நாடெங்கள் நாடே."*

என்பது அப்பாடலாகும்.

## செம்பூத்த கோத்திரக் குழந்தை வேலன்

புகழ்பூத்த செம்பூத்த குலத்தில் குழந்தைவேன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் தன்னை நாடி வந்த புலவர்களை வரவேற்று உபசரிப்பார். அன்பு பூத்த அன்னை போல அவர் புலவர்களை ஆதரித்து அன்னம் இட்டார் என்று கொங்கு மண்டல சதகம் பாடிய வாலசுந்தரக் கவிராயர் பாடுகிறார் (எண் 97).

*"கண்பூத்து இரங்கி வரும்புல வோர்தம்*
*காதல்கண்டு*
*அன்பூத்து இரங்கிய அன்னையைப் போலவும்*
*அன்னமிட்டுச்*
*செம்பூத்த கோத்திரன் குழந்தைநல் வேலன்*
*சிறந்தமுத்து*
*வண்பூத்த கண்டன் அமரர் பதிகொங்கு*
*மண்டலமே*

என்பது சதகப் பாடலாகும்.

*செம்பூத்த கோத்திரம் நல்லகுமார்*

"இரத்தினமூர்த்தி விறலிவிடு தூது" என்னும் இலக்கியத்தில் கொற்றனூர் செம்பூத்த குலத்தில் நல்ல குமாரக் கவுண்டர் என்பவர் மிகவும் புகழப்பட்டுள்ளார்.

*"தீரன் எனும்*
*செம்பூத்தன் என்ற குலதிலகன் தென்பொதிகை*
*கும்பன்எனும் நல்ல குமாரமுகில்"*

என்ற பகுதியில் அவர் பொதியமலை அகத்தியரோடு உருவகப்படுத்தப்படுகிறார். கைம்மாறு கருதாமல் கொடுப்பதில் மேகத்திற்கு நிகர் என்று கூறப்படுகிறார்.

## கொங்கு எங்கும் செம்பூத்த குலம்

முன்பு 88 ஊர்களுக்குக் காணியாளர்களாக விளங்கிய செம்பூத்த குலத்தார் கொங்கு நாடு எங்கும் பரந்து பல்சிச் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

குன்னத்தூர் அருகில் காங்கயம்பாளையம் என்னும் ஊரில் பெரியநாச்சியம்மன் கோயில் உள்ளது. அப்பகுதி மக்கள் காங்கயம் பகுதியிலிருந்து குடியேறியவர்கள் என்பது அவ்வூர் பெயராலேயே விளங்குகிறது. அங்கு வாழும் செம்பூத்த குலத்தார் வழிபடும் பெரியநாச்சியம்மன் கொற்றனூர்ப் பெரிய நாச்சியம்மன் கோயில் நினைவாகக் கட்டப்பட்ட கோயிலாகவே இருக்கலாம். இவ்வூரில் வாழும் செம்பூத்த குலத்தினர் தங்கள் கோயிலின் முக்கிய விழாக்களுக்குக் கொற்றனூர் ஆதினம் இலக்குமநாயக்கன்பட்டி காசிபகோத்திர ஜடாதர சடைய பரமேசுவர பண்டித சுவாமிகளை அழைக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவர்கள் பூர்வீகம் ஊதியூர் - முதலியாளையம் செம்பூத்த குலமாகவே இருக்கலாம்.

திருப்பூர் அருகே அலகுமலைக் கிராமத்தைச் சேர்ந்த இராமாபாளையத்தில் உள்ள பெரிய பொன்னாச்சியம்மன், சின்னப் பொன்னாச்சியம்மன் கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு செம்பூத்த குலத்தார் வழிபட்டு வருகின்றனர்.

வாழவந்தி நாட்டுக் கீரம்பூரில் உள்ள எட்டுக்கையம்மனை கரூர், நாமக்கல், திருச்செங்கோடு வட்டாரச் செம்பூத்த குலத்தினர் குலதெய்வமாகக் கொண்டு வணங்கி வருகின்றனர். இங்கு பண்ணை குலத்தார் இரண்டாம் காணியாளராக உள்ளனர். செம்பூத்தகுலத்தார் 3000 குடும்பத்தினர் இக்கோயிலுக்குக் காணியாளராக உள்ளனர்.

இராசிபுரம் வட்டம் பாளையப்பாளையத்தில் உள்ள ஆயா கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடும் செம்பூத்த குலத்தார் சேலம் மாவட்டத்தில் கருப்பூர், வலசு, அத்தனூர்புதூர், பனைப்பாளையம் ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்.

வேண்டானூர் கரிய காளியம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடும் செம்பூத்தகுலத்தார் பொங்கலூர் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

இராசிபுரம் வட்டத்தில் உள்ள பிள்ளாநல்லூர் செட்டிக்குமார சுவாமியைக் குலதெய்வமாகக் கொண்டு வாழும் செம்பூத்த குலத்தார் சேலம், ஈரோடு மாவட்டங்களில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். கூனவேலம்பட்டியில் உள்ள அழியா விலங்கையம்மன் கோயிலும் இவர்கட்குக் காணியாக உள்ளது. இக்கோயிலுக்குச் சுமார் 2000 செம்பூத்த குலக் குடும்பத்தார் காணியாளராக உள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள வைகைப் பொன்மலையின் அருகில் வடமேற்கில் உள்ள மரப்பறையில் உள்ள பொன்காளியம்மன் கோயிலைக் காணியாகக் கொண்ட செம்பூத்த குலத்தார் சுமார் 500 குடும்பத்தினர் உள்ளனர். வைகைப் பொன்மலைக்குரிய முதற்காணியாளர்களும் செம்பூத்த குலத்தினரே. லக்காபுரம் செம்பூத்த குலத்தார் திருப்பணி செய்த கல்வெட்டுக்கள் உள்ளன.

வைகைப் பொன்மலையில் செம்பூத்த குலத்தாருக்கு முதல் விபூதி மரியாதை உண்டு. செம்பூத்த குலத்தார் வந்தால் தான் ஐயர் தேங்காய் உடைப்பார். (வைகைப் பொன்மலை இன்று வைய்ப்பமலை என வழங்கப் பெறுகிறது) பரம்பரை அறங்காவலர் செம்பூத்த குலத்தாரேயாவர். 1.11.1935ல் செய்யப்பட்ட காளி உற்சவ விக்கிரகத்தில் செம்பூத்த குலத்தார் பெயர் உள்ளது.

# 9. செம்பூத்தகுலக் காணியூர்கள்

காணி என்றால் பங்கு, உரிமை, சொந்தம் என்று பொருள். காணி ஊர்கள் என்றால் ஒரு குலத்தாருக்கு உரிமையுடைய ஊர்கள் எனபது பொருள்.

கொங்கு வேளாளரில் எந்த எந்தக் குலத்தாருக்கு எந்த எந்த ஊர்கள் காணி உரிமை உடையன என்று முன்னர் வகுத்துள்ளார்கள். அவற்றைப் பாடல் வடிவிலும் உருவாக்கியுள்ளார்கள். அவை காணிப் பாடல்கள் எனப்படும்.

செம்பூத்த குலத்திற்குத் தனியாக மூன்று காணிப் பாடல்கள் கிடைத்துள்ளன. அதிகமான காணிப் பாடல்கள் கிடைத்த குலங்களில் செம்பூத்த குலம் ஒன்று. மூன்று பாடல்களிலும் விதரி சிறப்புடன் குறிக்கப்படுகிறது.

## முதற் பாடல் :

முதலாம் காணிப் பாடல் இரணபுரம், மண்டபத்தூர், அத்தனூர், வயிரூசி, குமரமங்கலம், அந்தியூர், இராமகூடல், காடனூர், கண்டகுல மாணிக்கம், கீரம்பூர், தாராபுரம், தென்சேரி, விதரி, சேமூர், மொஞ்சனூர், கூடச்சேரி, கருமானூர், புல்லூர், சிவதை, வாழவந்தி, உத்தம சோழபுரம், புத்தூர், திண்டமங்கலம், வைகுந்தம், முடுதுறை, கொற்றனூர் ஆகிய ஊர்களைச் செம்பூத்த குலத்தாருக்குக் காணி உரிமையாக்குகிறது.

*மண்டலம் தண்ணில்வளர் மாண்புடைய இரணபுரம்*
*மண்டபத்தூர் அத்தனூர்*
*வயிரூசி யும்குமர மங்கலரும் அந்தியூர்*
*வளம்பெருகு-இராமகூடல்*
*வண்டமிழ்க் காடனூர் கண்டகுல மாணிக்கம்*
*வாகைகீ ரம்பூருடன்*
*மண்ணுதா ராபுரம் தென்சேரி விதரிநகர்*
*மானசே மூர்மொஞ்சனூர்*
*எண்டிசை விளங்குகூ டத்சேரி கருமானூர்*
*இலகுபுல் லூர்சிவதையும்*
*இயல்வாழ வந்திபுகழ் உத்தமச் சோழபுரம்*
*எழிலான புத்தூ ருடன்*
*திண்டமங் கலமும்வை குந்தமும் முடுதுறை*
*தென்கொற்றை யூர் திருமலைச்*
*செல்வன் எனும் முதலிமக ராசன் பிறந்திடும்*
*செம்பூதர் குலக்காணியே"*

## இரண்டாம் பாடல்

இரண்டாம் காணிப் பாடல் கீரம்பூர், பிறசை, வேட்டம் பாடி, கொற்றனூர், விதரி, இடும்பை, காதப்பள்ளி, வேலூர், நத்தம், பிள்ளையா நத்தம், கருமநகர், வீசனம், முருங்கத்தொழு, அயோத்தி, தோகைநத்தம், தாராபுரம், நல்லூர் ஆகிய ஊர்களுக்குக் காணி உரிமை படைத்தவர் செம்பூத்த குலம் என்று கூறப்படுகிறது.

கொல்லிமலை சூழ்ந்த எண்பத்தெட்டு ஊருக்குத் தலைவர் செம்பூத்த குலத்தினர் என்றும் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகக் காணி கொண்டவர்கள் ஈஞ்ச குலத்தினர், அவ் ஈஞ்ச குலம் போலவே எண்பத்தெட்டு ஊர்கள் செம்பூத்த குலத்தாருக்கு காணியாகக் கூறப்படுவது சிறப்புக்குரியதாகும்.

*சீர்மருவு கீரம்பூர் பிரசைவேட் டம்பாடி*
*தென்கொற்றை யூர்விதரியும்*
*செய்யுபுகழ் மன்னகர் இடும்பைகா தப்பள்ளி*
*செம்மைவே லூ ருநத்தம்*
*கார்மருவு சோலைசெறி பிள்ளையா நத்தமும்*
*கருமநகர் வீசனமதும்*
*கனமிகு முருங்கைப் பெருந்தொழு அயோத்தியும்*
*கல்விசேர் தோகைநத்தம்*
*ஏர்மருவி கொங்குதா ராபுரமும் மிக்கான*
*எழில்தர்ம தானநல்லூர்*
*இனியதென் கொல்லிமலை எண்பத்தெட் டூருக்கும்*
*இறைவனே செம்பூதனே*
*வாரணியும் முலைமாதர் வேள்என மதிக்கவரு*
*மைந்தனாம் ஐந்துதருவாம்*
*வானவர்கள் புகழவரு நலகுமா ரேந்திரன்*
*மாற்றலர் மனத்தின் இடியே*

## மூன்றாம் பாடல்

மூன்றாம் காணிப்பாடல் கீரம்பூர், பிறசை, கருமாபுரம், மங்கலம், கொற்றனூர், மொஞ்சனூர், கொன்றை, வேட்டம்பாடி, விதரி , திருவாலூர், சிவதை, தோளூர், தம்மப்பட்டி, தாளப்பதி, சோலை காழனூர், பிள்ளையார் நத்தம், முருங்கைத் தொழு, அயோத்தி, தோகைநத்தம், தாராபுரம், இரணபுரம், நல்லூர், வடுகநகர், லக்கம்பாடி, கொங்கணாபுரம், வாழவந்தி, முடுதுறை, வயிருசி முதலிய ஊர்களைக் காணியாகக் குறிப்பிடுகிறது.

*மாவுற்ற கீரம்பூர் பிறசைகரு மாபுரம்*
*மங்கலம் கொற்றைமொஞ்சை*
*மாநகரு கொன்றை வேட்டம்பாடி விதரிதிரு*
*வாலூரு மலைசிவதையும்*
*காவுற்ற ஊசிநகர் தோளூரு தம்மநகர்*
*தாளபதி மின்னல்சோலை*
*காழனூர் பிள்ளையார் நத்தம் ஈசன்முருங்*
*கைப்பெரும் தொழுஅயோத்தி*
*பூவுற்ற தோகைநத்தம் கொங்கு வஞ்சிஇரண*
*புரம்நல்லூர் சினமாதினை*
*புறம்வடுக நகர்லக்கம் பாடியொரு கொங்கணா*
*புரம்சென்னெல் கன்னிநகரே*
*கூலமுற் றிடும் வாழவந்தி முடுதுறை வயிரூசி*
*கொல்லிசிற் றாறுபொருனை*
*கொற்றைநகர் உற்றசெம் பூத்தகோத் திரக்காணி*
*கொண்டனர்சுள் மிகவாழ்கவே*

## கொற்றனூர்க் காணியாளர்கள்

தென்கரை நாடு புன்னிரண்டு ஊர்களுக்கும் தனித்தனியாக யார் யார் காணியாளர்கள் எனக் கூறும் வெண்பாக்கள் உள்ளன. இவை வேறு நாடுகள் முழுமைக்கும் இல்லாத பாடல்களாகும்.

கொற்றனூருக்கு வேட்டுவரில் காவுலன், வேளாளரில் குழாயகுலம், பெரியகுலம், ஆந்தை குலம், சேரகுலம், செம்பூத்த குலம் ஆகியோரும், கொங்குச் செட்டியாரும் காணியாளர்கள். இவர்களை ஏழு முதன்மையாளர்கள் என்று கூறுவர். இவ் ஏழு முதன்மைக் காணியாளர்களைத் தொகுத்துக் கூறும் இரண்டு வெண்பாக்கள் கிடைத்துள்ளன.

*"காவல் குழாயன் கதித்த பெரியகுலன்*
*ஆவல்சேர் ஆந்தை அதிசேரன் - மேவியசீர்*
*செம்பூத்தன் செட்டியுடன் தென்கொற்றை மாநகர்க்கு*
*இன்புற்ற ஏழ்முதன்மை யே"*
*"ஞாயம் நிலைபெறுத்தும் நற்காவ லன்குழையன்*
*நேயப் பெரியகுலன் நீள் ஆந்தை - ஆயன்*
*திருவளர் கொற்றைக்குச் சேரன் செம்பூதன்*
*பெருகுசெட்டி யும்காணிப் பேர்"*

மேற்கண்ட பாடல்களில் செட்டி என்று கூறப்படுபவர்கள் கொங்குச் செட்டிகளில் ஐநூத்தார் குலத்துச் செட்டிகள் ஆவர். இக் கொங்குச் செட்டிகள்

சிலர் கவுண்டர் பட்டம் உடையவர்கள். தென்கரை நாட்டுப் பன்னிரு ஊர்களுக்கும் செட்டியார் காணியாளர்களாக உள்ளனர். கொற்றனூர்க்குரிய காணியாளச் செட்டியார்கள் தாயம்பாளையம் முதலிய பகுதிகளில் சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள்.

## ஊதியூர்க் காணியாளர்

ஊதியூர்க்குக் காவுலவ வேட்டுவர்களுடன் செம்பூத்த குலத்தார் மட்டும் காணியுரிமை படைத்தவர்கள் என்பதை ஒரு வெண்பாக் கூறுகிறது.

*காவலோர் மெச்சுகின்ற காவலன் செங்குவளைப்*
*பூவுலவு திண்புயசெம் பூத்தகுலன் - மேவலவன்*
*மோதிநகர் ஆனைமுகத் தோன்வளர் செம்பொன்*
*ஊதிநகர் ஆதியர்என் றோது*

என்பது அப்பாடலாகும். வேட்டுவர் குலத்தலைவன் வேலப்பன் இறக்கவே அவன் மனைவி விருப்பப்படி தீப்பாய உதவிய செம்பூத்த குலத் தலைவர் முதலிக் கவுண்டர் ஊதியூர்க் காணியைப் பெற்றார்.

# *10. கொங்கு ஆவணங்களில் செம்பூத்த குலம்*

கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் சிலவற்றைத் தொகுத்துத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தார் நூலாக வெளி இட்டுள்ளனர். அவற்றுள் சிலவற்றில் செம்பூத்த குலத்தார் சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளனர்.

## பருத்திப்பள்ளிச் செப்பேடு

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் பருத்திப்பள்ளியை அடுத்த கூத்தாநல்லூரில் உள்ள கருப்பநாயக்கரிடம் ஒரு செப்பேடு உள்ளது.

முதலிக் காமிண்டன் என்ற சிறப்புப் பெயரும் பட்டமும் பெற்ற சங்ககிரி உலகப்ப கவுண்டரும், கொங்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் கொங்கு வேளாளரில் செல்ல குலத்தார் பலரும்கூடி வேளாளர் கூத்தாடிகளில் கந்தபட்டன் மகள் அத்திப் பெண்ணுக்கு 24 நாட்டுக்கும் செல்ல குல மாணிக்கி என்று பட்டம் சூட்டிப் பல்வேறு சிறப்புக்களும், வரிசைகளும் அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது.

கொன்னையாத்துச் செல்லாண்டியம்மன் சன்னதியில் மேற்படி சடங்கு நடைபெற்றது. அச் செல்லகுல மாணிக்கியின் நாட்டியக் கச்சேரியும் ஊர்வலமும் (மெரமனை) நடைபெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்ச்சியைச் செப்பேட்டில் பொறிக்கும் போது சாட்சிக் கையெழுத்துக்கள் தேவைப்பட்டன. சமூகத்தில் மேல் நிலையில் உள்ளவர்களும், பிறரால் நன்கு மதிக்கப்பட்டவர்களுமே சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். பல சமூகத்தினரும் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்.

அவ்வாறு கையொப்பம் இட்ட பெருமக்களில் "பிறசையில் செம்பூத்த குலத்தில் வாழவந்திக்கவுண்டன் மகன் செட்டியாக் கவுண்டன், சீரங்கக் கவுண்டன்" ஆகியோர் குறிப்பிடப் பெறுகின்றனர். செம்பூத்த குலத்தாரின் இப் பெயர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகக் காணப்படுகிறது.

வாழவந்தி என்பது கீழ்க்கொங்கில் ஒரு நாட்டின் பெயர், செட்டியாக் கவுண்டன், சீரங்கக் கவுண்டன் என்பனவும் சிறப்புமிக்க பெயர்களே.

## கண்ணகுலப் பட்டயம்

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், கன்னிவாடி கே.எஸ்.சின்னசாமி அவர்கள் வசம் கண்ணகுலப் பட்டயம் என்னும் ஓலைச் சுவடி கிடைத்தது.

கன்னிவாடி கண்ண குலத்தின் ஆதிக் காணியூர். அவ்வூரைக் காணியாகக் கொண்ட கண்ண குலத்தாரைக் கன்னி வாடியான் கூட்டம் என்றே அழைப்பர்.

கன்னிவாடிக் கண்ணர்களுக்கும் அங்கு வாழ்ந்த பிற சமுதாயத்தா–ருக்கும் சண்டை சச்சரவு ஏற்பட்டுக் கண்ணகுலத்தார் அங்கிருந்து வெளியேறி பொன்பரப்பி, கண்ணபுரம், சோமான்கோட்டை, புங்கங்கரை, நத்தக்காரியூர், மோரூர், தகடப்பாடி வரை பல இடங்களில் குடியேறினர்.

மோரூர்க் கண்ணகுலக் காங்கேயரில் சூரிய காங்கேயன் தோன்றிக் கன்னிவாடியை மீட்டு நல்லாட்சி புரிகின்றான்.

கண்ண குலத்தாரின் காணி மீட்ட இவ் அரிய வீரச் செயலுக்குப் பல்வேறு வகையில் உதவி செய்தவர்கள் பலர். அவற்றுள் கூத்தம்பூண்டி செம்பூத்த குலத்தினர் மிகவும் சிறப்புடன் குறிக்கப்படுகின்றனர். கூத்தம்பூண்டி செம்பூத்த குலத்தினர் செய்த அரிய செயல்களுக்காகக் கண்ணிவாடியான் குலத்தினருக்குப் பாதிப் பங்காளிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

கூத்தம்பூண்டி கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் உள்ளது. செம்பூத்த குலத்தாரின் காணி ஊராகும்.

## செங்குந்தர் வெற்றிப் பட்டயம்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணல் நாச்சிமுத்துப் புலவரிடம் கிடைத்த பல ஓலைப் பட்டயங்களில் செங்குந்தர் வெற்றிப் பட்டயம் என்பது ஒன்று. அந்த அரிய சிறப்பு மிக்க ஓலைச்சுவடி ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் உள்ளது.

கொங்கு நாட்டு விசயமங்கலப் பகுதியில் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மக்கள் இடங்கை, வலங்கைப் பிரிவாக இயங்கி வந்தனர். செங்குந்த முதலியார், படையாச்சிக் கவுண்டர், ஆசாரிகள் ஆகிய பஞ்ச கம்மாளர், நகரத்தார், பள்ளர், மாதாரிகள் ஆகியோர் இடங்கைச் சாதியாகவும், கவரைச்செட்டிகள், தேவாங்கர், சாணார் ஆகியோர் வலங்கைச் சாதியாகவும் தம்மை அழைத்துக் கொண்டனர்.

விசயமங்கலம் மாரியம்மன் திருவிழாவில் இடங்கைச் சாதியாருக்குரிய சில சிறப்புக்களை வலங்கைச் சாதியார் அணிந்து கொண்டனர். இடங்கையார் ஆட்சேபனை தெரிவிக்கவே ஒரு வருடம் இந்தத் தகராறு நீடித்தது.

திப்பு சுல்தானின் அந்தியூர்த் திவான் கிரிமிரே சாயபு பாட்சா 5.2.1797ல் அவ்வழக்கை விசாரித்து இடங்கைச் சாதியார்க்குச் சார்பாகத் தீர்ப்பளித்தான்.

வலங்கையார் 2400 பொன் அபராதமும், இடங்கையார் 1500 பொன் வெற்றிக் காணிக்கையும் அளிக்குமாறு தீர்ப்பளித்தான்.

அத்தீர்ப்பு என்றும் நிலைக்கும் வண்ணம் ஓலைப் பட்டயமாக எழுதப்பட்டது. கொங்கு நாட்டுப் பெருமக்கள் பலர் அத்தீர்ப்புக்குச் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். அவர்களில் செம்பூத்த குலத்து முதலிபாளையம் முத்துக் கவுண்டர் என்பவர் ஒருவர்.

திப்பு சுல்தான் அதிகார நாளில் முதலிபாளையத்து முத்துக் கவுண்டர் மிகவும் செல்வாக்குப் பெற்றவராக இருந்திருக்கிறார்.

## பொங்கலூர் நாட்டுத் தலைவர்கள்

பொங்கலூர் நாட்டு அலகுமலை ஆண்டவரை வணங்கும் தலைவர்களை ஓதாளர் குறவஞ்சி பட்டியலிட்டுக் காட்டுகிறது. அதன் மூலம் பொங்கலூர் நாட்டுத் தலைவர்களில் செம்பூத்த குலத்தாரும் ஒருவர் என்று தெரிகிறது.

*"பொன்னர் ஓதாளர் புகழ்கேர் குழாயர்*
*தென்னர் சாத்தந்தை கெம்பர் செம்பூதர்*
*கண்ணர் பூசர் கனமாடை முதன்மையர்*
*முன்நின்று கும்பிட்டு முறைமுறை வணங்க*

என்பது அப்பகுதியாகும்.

# *11. செம்பூத்த குலக் கல்வெட்டுக்கள்*

முதலிபாளையம் செம்பூத்த குலச் சில காணியாளர்களின் கல்வெட்டுக்கள் சில ஊதியூர் உத்தண்ட வேலாயுதர் கோயில் மயில் மண்டபம், மலைக்கோயில், வானவராய நல்லூர், கரியகாளியம்மன் கோயில் ஆகிய இடங்களில் உள்ளன. அவை கல்லில் உள்ளவண்ணம் இங்கு வரிசையாக அளிக்கப்படுகிறது. அவை செம்பூத்த குலத்தாரின் பக்தித் திறத்தையும் திருப்பணிப் பெருமைகளையும் விளக்குகின்றன.

## ஊதியூர்மலை மயில் மண்டபக் கல்வெட்டு (23.4.1896)

1. கலியுக சகா
2. த்தம் 49
3. 96
4. துன்முகி
5. ஸ்ரீ சித்தி
6. ரை மாசம்
7. 13 தேதி னா
8. கரசு நல்லூ
9. ரு செம்பூற்றா
10. திபன் சிவன்
11. மலை
12. க் கவு
13. டன்
14. குமார
15. ன் றா
16. மசாமிக் கவுன்
17. டன் மயில்வா
18. கன குறடு
19. உபயம்

## ஊதியூர் உத்தண்ட வேலாயுதசாமி கோயில் முன் கொறட்டுவாசல் மண்டபக் கல்வெட்டு (1843 செப்டம்பர் _ அக்டோபர்)

1. உ கலியுக சகாற்த்தம் 49
2. 43 ன் மேல் சோபகிறிது ஸ்ரீ பிரட்
3. டாதி மீ முதலிபாளையத்திலே
4. இருக்கும் உள்ளூருக் கவுண்டய
5. கவுண்டர் திருமதிளு உபையம் உ
6. அவருடைய மகன் நல்ல கு
7. மாரக் கவுண்டர் குரட்டு வாசல்
8. செம்பூத்த கோத்திரம் உத்தன்
9. ட வேலாயுதசாமி துணை

## ஊதியூர், உத்தண்ட வேலாயுதசுவாமி கோயில் வாத்திய மண்டபத் தூண் கல்வெட்டு (11.4.1843)

1. தெண்டாயுதபா
2. னி துணை உ
3. கலியுக சகா
4. த்தம் 49
5. 42க்கு மேல் சுப
6. கிறுதி ஸ்ரீ மாசி மீ
7. 29 தேதிக்கு சுக்
8. ற வாறமும் திச
9. மியும் புனற்பூச
10. நட்செத்திரமு
11. ம் கூடிய சுபதி
12. னத்தில் தென்
13. கரை னாடு பொன்
14. னூதி மாமலை உ
15. த்தாண்ட வேலா
16. யுதசுவாமி கோ
17. வில் முன் வாத்தி
18. ய மண்டபம் கொ
19. ற்ற ரு ஊதியூ
20. ராதிபன் செம்
21. பூத்த கோத்திர
22. த்தில் கவுண்ட
23. ய கவுண்டருடைய
24. ய குமாரன் முத
25. லிக் கவுண்ட
26. ன் அவருடை
27. ய குமாரன்
28. சிவன்மலை
29. க் கவுண்ட
30. ன் வாத்திய
31. மண்டபம் உ
32. பையம்

## தூண் கல்வெட்டு - 1

1. செம்பூத்த
2. கோத்திரம்
3. கவுண்டய
4. கவுண்டன்
5. மகன் முத
6. லிக் கவுண்
7. டன் உ

## தூண் கல்வெட்டு - 2

1. கவுண்டய
2. கவுண்டன்

## உத்தண்ட வேலாயுதசுவாமி கோயில் திருமதில் கல்வெட்டு (1775 ஏப்ரல் - மே)

1. சுவாமிதுணை கலியுக சகாற்தம் 487
2. 5க்கு மேல் மன்மத ஸ்ரீ சித்திரை மீ தென்கரை நா
3. டு கொற்றனூறு ஊதியூருக்கதிபன் செம்பூத்த கோத்திரத்தி
4. ல் நல்லகுமாருக் கவுண்டன் மகன் கவுண்டய கவு
5. ண்டன் யுத்தண்ட வேலாயுதசாமி திருமதில் உபயம்

## ஊதியூர் கைலாசநாதர் கோயில் திருமதில் கல்வெட்டு (18.1.1897)

1. சிவமயம் உ கலியுகம் 4998
2. க்கு துன்முகி ஸ்ரீ தை மீ 7 உ தேன்கரை
3. நாட்டுக் கொத்தனூர் ஆதிபன் செம்
4. பூற்று குல கோத்திரம் முதலிபாளை
5. யம் மணியம் முதலிக்கவுண்டர் குமாரர்
6. சுப்பய கவுண்டர் ஊதியூர் கைலாசனா
7. தசுவாமிக்கு திருமதில் உபயம் உ

## வானவராய நல்லூர் கரியகாளியம்மன் கோயில் தீபத் தம்பக் கல்வெட்டு

1. கலியுக
2. சகாற்த
3. ம் 49
11. பூத்த
12. குலம
13. ணி

| | |
|---|---|
| 4. 54 ந் | 14. க்கி ஊ |
| 5. மேல் பி | 15. தியூர் |
| 6. ரமாதீ | 16. வத்த மு |
| 7. ச்சா | 17. தலி மக |
| 8. ஸ்ரீ | 18. ள் தெய் |
| 9. தய் மீ | 19. வானை |
| 10. செம் | 20. உபயம் |

## மறவபாளையம், அப்பரமேயர் கோயில் தீபத்தம்பக் கல்வெட்டு (1868 - நவம்பர் _ டிசம்பர்)

| | |
|---|---|
| 1. கலியு | 16. குல |
| 2. க சகா | 17. கோத்தி |
| 3. ற்த்தம் | 18. ரம் முத |
| 4. 497 | 19. லி பாளை |
| 5. 0 க்கு மே | 20. யம் நல் |
| 6. ல் செல்லா | 21. ல குமா |
| 7. னின்ற | 22. றுக் கவு |
| 8. விபவ ஸ்ரீ | 23. ண்டற் |
| 9. காற்தி | 24. மகன் |
| 10. கை மீ | 25. வட்டம |
| 11. கொற் | 26. லைபாளை |
| 12. றனூ | 27. யம் குமா |
| 13. ற் ஆதிப | 28. ரக் கவுண் |
| 14. ன் செம் | 29. டர் உபை |
| 15. போத்த | 30. யம் |

## *12. செம்பூத்த குல மானிக்கி*

செல்வச் செழிப்பில் திளைத்த செம்பூத்த குலத்தார் முற்காலத்தில் கலைகளை ஆதரித்து வளர்த்தும், ஊக்கம் ஊட்டியும் விளங்கியுள்ளர். இச்சீரிய செயல் செம்பூத்த குலத்தாரின் குலதெய்வக் கோயில்களில் ஒன்றான வானவராயநல்லூர் கரிய காளியம்மன் கோயில் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது.

ஆய கலைகள் அறுபத்து நான்கில் நாட்டியக் கலையும் ஒன்று. நாட்டியக் கலையை நம் நாட்டில் தெய்வீகமாகப் போற்றி வந்தனர். பாடலில்

இசை கலந்து உயிரோட்டத் துடிப்புடன் நடித்துக் காட்டப்படுவதே நாட்டியமாகும். ஆண் பெண் இருபாலாரும் ஆடிப்பாடி நடித்துள்ளனர்.

நாட்டியக் கலை வேத்தியல், பொதுவியல் என இரு வகைப்படும். வேத்தியல் வேந்தர்க்குரியது. பொதுவியல் பொதுமக்களுக்கு உரியது. ஆலயங்களில் இவ் அருங்கலை போற்றி வளர்க்கப்பட்டது. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் மாமன்னன் இராசராசன் காலத்தில் 400 நாட்டியப் பெண்கள் இருந்தனர். இவர்கள் தனிச்சேரிப் பெண்டுகள், அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர், கூத்திகள், பதியிலார், தளிப்பெண்டுகள், தேவரடியார் எனப் பலவாறு அழைக்கப்பட்டனர். உயர்ந்த பொருளில் வழங்கிய இச்சொல் இன்று இழிந்த பொருளைக் குறிப்பது காலத்தின் கோளாறேயாகும். மொழியியலில் ஏற்பட்டுள்ள மாற்றம்.

கொங்கு நாட்டில் பொதுவாக இவர்கள் மானிக்கி என அழைக்கப்பட்டனர். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே இச்சொற்களைக் காணுகிறோம்.

கொங்கு வேளாளர்களில் பல குலத்தார் தங்கள் குலத்துக்கென்று தனித்தனியாக மாணிக்கிகளை அமைத்துக் கொண்டனர். இதனைப் பல ஆவணங்கள் மூலமாக அறிகின்றோம்.

மானிக்கி நியமனம் மிகவும் சிறப்பான விழாவாக நடத்தப்பட்டது. மாணிக்கிக்கு ஆடை ஆபரணம் அளித்து நாட்டிய நிகழ்ச்சி (சதிர்) நடத்தி ஊர்வலமாக மாணிக்கியை அழைத்துவருவர் (மெரமனை). மாணிக்கிக்குப் பரிசில்கள் பல தரப்படும். நன்செய் நிலங்களையும் தானமாக அளிப்பர்.

ஊர்கள் தோறும் அக்குலத்தார் மாணிக்கிக்கும், அவள் குடும்பத்தாருக்கும் கொடைபல அளிப்போம் என்று கல்வெட்டு செப்பேடு அல்லது ஓலைப் பட்டயத்தில் எழுதித் தருவர். அதற்குப் பலர் சாட்சிக் கையொப்பம் இடுவர். இவ்வாறான ஆவணங்கள் பல கொங்குநாட்டில் அண்மையில் கிடைத்துள்ளன.

கொங்கு வேளாளரில் தூ ரகுலத்தார், தேவேந்திரகுலத்தார், அத்துவன் குலத்தார், செல்வன் குலத்தார், கண்ண குலத்தார் ஆகியோர் தங்கள் குலங்களுக்கென்று மாணிக்கி நியமித்துக் கொண்டதை ஆவணங்கள் காட்டுகின்றன. தூரகுலத்தாருக்கு நல்லபெண், தேவேந்திர குலத்தாருக்கு முத்துவேலி, அந்துவன் குலத்தாருக்கு நாகமலை, செல்ல குலத்தாருக்கு அத்திப்பொண்ணு ஆகியோர் மாணிக்கிகளாக இருந்துள்ளனர்.

*'மாணிக்கி பண்ணையத்துக்கு 1 மொடாக் கம்பும்,*
*பயலாளுக்கு 8 வள்ளமும், பண்ணையத்துக்கு 1 சுமை*
*கதிரும், கலியாணத்துக்கு 1 பணமும், ஒரு வள்ள*
*அரிசியும் அளிப்பர்'*

என்று பருத்திப் பள்ளிச் செப்பேடு கூறுகிறது. கொங்கு வேளாளர் திருமண வீடுகளில் மணவிழாவின் இறுதியில் களரிப் பணம் வழங்கும்போது மாணிக்கிற்குப் பணம் அளிக்கும் சடங்கு இன்றும் நடைபெறுகிறது. பரிசாரகப் பெண்கள் யாராவது அப்பணத்தைப் பெறுகின்றனர்.

முதலிபாளையம் செம்பூத்த குலத்தார் ஊதியூர் வத்த முதலியார் மகள் தெய்வானை என்பவளை மாணிக்கியாக நியமித்துள்ளனர். திருவிழா நிகழ்ச்சிகளிலும், திருக்கோயில் வழிபாட்டின் போதும், சுவாமிகளைத் திருவீதியில் எழுந்தருளச் செய்து உலா வரும்போதும் தெய்வானையைப் பாடச் சொல்லியும், ஆடச் சொல்லியும் கூறித் தெய்வீகக் கலையை வளர்த்துள்ளனர். மாணிக்கி தெய்வாணைக்குச் சமூகத்தில் மிகச் சிறந்த மதிப்பளித்துள்ளனர்.

வானவராய நல்லூர் கரியகாளியம்மன் கோயிலில் தீபத் தம்ப மண்டபம் கொங்கு நாட்டு முறைப்படி கோயிலுக்கு வெளியே உள்ளது. அதனுடைய தென் கிழக்குத் தூணில் தெற்குப் பார்த்து உள்ள கல்வெட்டு மூலல் அத்தீபத் தம்ப மண்டபத்தைத் தெய்வானை மாணிக்கி கட்டி வைத்ததை அறிகின்றோம். 143 ஆண்டுகட்கு முன்பு கி.பி. 1854 ஆம் ஆண்டு சனவரி – பிப்ரவரி மாதத்தில் அப்பணி நடைபெற்று முற்றுப் பெற்றுள்ளது என்று அக்கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. செம்பூத்தகுல மாணிக்கி நியமன விழாவில் பல ஊர்ச் செம்பூத்த குலத்தார் கலந்து கொண்டனர். அவருள்விதரிநகர் செம்பூத்த குலத்தாரும் அடங்குவர்.

அத்திப்பாளையத்திலும் மாணிக்கிப் பெண்கள் முன்பு இருந்துள்ளனர்.

## *13. குல குருக்கள்*

கொங்கு நாட்டில் சைவம் சிறப்புற்று விளங்கியது. கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் ஏழு. அவை கரூர், வெஞ்சமாங் கடல், அவிநாசி, பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, திருமுருகன் பூண்டி என்பன. அவ்வேழு தலங்களையும் ஒன்றாகச் சேர்த்து வணங்கும் வழக்கம் கொங்கு நாட்டில் இருந்தது. அதனை :

*ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறசை*
*நீதி அவிநாசி நீர்நணா - மேதினியின்*
*தஞ்சமாம் செங்குன்னூர் தண்முருகன் பூண்டிதமை*
*நெஞ்சமே நித்தம் நினை*

என்ற வெண்பா சிறப்புடன் விளக்குகிறது. காங்கேய நாட்டுப் பட்டக்காரர்கள் ஒரே நாளில் இவ்வேழு தலங்களையும் வணங்கும் வழக்கம் கொண்டிருந்தனர் என்பதைத் தனிப்பாடல்கள் விளக்குகின்றன.

இவ்வாறு சைவம் சிறந்த கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வேளாண்குலப் பெருமக்கள் பலரும் தங்களுக்கென்று தனித்தனியாகக் குல குருக்களை நியமித்துக் கொண்டு பலர் தீட்சை பெற்றுச் சைவசமய சிறப்புடன் நலமாக எல்லாப் பேறும் பெற்று வாழ்ந்தனர். குலகுருக்கள் சைவம் பேணி, ஆலயங்களைக் காத்து, அடியார்க்கு ஆசி வழங்கிச் சிறப்புடன் திகழ்ந்தனர்.

கொங்கு நாட்டில் முதலில் குடியேறிய கொங்கு வேளாண் பெருமக்கள் தங்கள் குலகுருவுடன் வந்தனர் என்பதைப் பல செப்பேடுகள் கூறுகின்றன. 24 நாடுகள் பிரித்ததும் நாட்டுக்கு ஒரு குலகுருவாக 24 பேரை நியமித்தனர் என்று ஒரு பட்டயம் கூறுகிறது.

சோழர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தும் போது சோழநாட்டிலிருந்து சிறந்துள்ள ஆதி சைவர்களைக் கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்ததாகக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

*குலசே கரண்குலோத் துங்கசீர்ச் சோழர்கள் கொங்கினிடை*
*தலபூசை நன்குறத் தன்நாட்டு ளாரில் சமர்த்தர்கண்டு*
*நிலையான காணியும் மேன்மையும் ஈய நிதானமுறு*
*வலவாதி சைவர்கள் வாழ்வதன் றோகொங்கு மண்டலமே*

என்ற சதகப்பாடல் மூலம் அதனை அறியலாம். ஒரு சில செப்பேடுகள் சோழநாட்டுத் திருக்கடையூரிலிருந்து அவர்கள் வந்ததாகக் கூறுகின்றன. சில குருக்கள் காஞ்சிபுரம் தம் பூர்வீகக் காணியூர் என்று கூறுகின்றனர்.

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையும் இதனை ஒரு பாடல் மூலம் விளக்குகிறது.

*காரனிக மானவள வன்கலி யுகாதியில்*
*கட்செவி மலைப்ப ரமனைக்*
*கந்தனை வணங்கிமக பூசையுண் டாக்கினன்*
*கைலாச நாதசிவனைத்*
*தாரனி புகழ்ந்திடத் தாபித்த னன்பெரிய*

தண்கூப மதுகண்டனன்
சைவமறை போய்பூச னைக்கினிய ராகவே
தனதுமண் டலமேவியே
சீரணிசீ காழியர் லம்பாயர் காசிபர்
திறத்தோடர்ச் சனைசெய்யவே
திதமுற அமைத்தனன் மநுநீதி முறைகண்ட
செம்பியன் பெற்ற பெருமை

என்ற பாடல் மூலம் அதனை அறியலாம்.

கொங்கு வேளாளர்கட்குக் குலகுருக்கள் இருந்தனர் என்பதைப் பல செப்பேடு பட்டயங்கள் உறுதிப் படுத்துகின்றன.

"கந்தாபுரிப் பட்டணம் அதிலுள்ள பதினெண்குடிகள் இந்தத் திருமுருகன் பூண்டி ஆதீனத்துக்கு உடையவராகிய காசிப கோத்திரத்துக் குருக்களானபடியினாலே தன்னுடைய சிஷியனாகிய வீரவிக்கிரம சோழியாண்டாக்கவுண்டர்"

என்பது ஒரு எடுத்துக்காட்டாகும்.

கொங்கு வேளாளர்கள் தங்கள் குலகுருக்களை எவ்வாறு மதித்தனர் என்பதைக் கொங்கு நாட்டுச் செப்பேடு ஒன்று பின்வருமாறு விளக்குகிறது.

"நாங்கள் யெந்த நாட்டிலே யெந்த ஊரிலேயிருந்தாலும் எங்கள் கோத்திரத்தார் தலைக்கட்டு ஒன்றுக்கு நாகரம் பணம் அஞ்சு வருஷம் பிரதி குடுத்துச் சஞ்சாரம் வந்தபோது சஞ்சாரக் காணிக்கையும் அப்பனைப் படிக்கி உபதேசம் பாதபூசை முதலானதும் பண்ணிக் கொண்டு எங்கள் வமுசத்தார் புத்திரபவுத்திர பாரம்பரியமாயி பாதபூசை பண்ணிக் கொண்டு சன்னிதானத்துலே தீட்சை மகாமந்திர உபதேசம் பண்ணிக் கொண்டு சுவாமியார் தெண்டினை கண்டினை ஆணை ஆக்கிணை அபராதத்துக்குட்பட்டு நடந்து கொள்ளுவோமாகவும்.

எங்கள் கோத்திரத்தார் எந்த நாட்டிலே எந்த ஊரிலே காணி வாங்கி அதிகாரம் பண்ணினாலும் குடித்தனம் செய்தாலும் சுவாமியார் பாதத்துக்குப் பணிந்து நடந்து கொள்ளுவோமாகவும். இப்படி நடந்துவரும் காலத்தில் இதுக்கு விகாதம் சொல்லாமல் பரிபாலனமாயி எங்கள் வமுசத்தார் பயபக்தியாய் நடந்து வந்தவன் சுகமாயி தனசம்பத்தும் தானிய சம்பத்தும் அஷ்டைஸ்வரியமும்

*மேன்மேலும் உண்டாகி கல்லும் காவேரிப் புல்லும் பூமியும் சந்திராதித்தாள் உள்ளவரைக்கும் சுகமாயிருப்பார்கள்."*

உடல் பொருள் ஆவி மூன்றையும் குலகுருவுக்கே தத்தம் செய்து பட்டயம் எழுதித் தந்துள்ளனர். வாரிசு இல்லாத சொத்து குலகுருவுக்கே என்றும் சிலர் கூறினர். குருவே சிவம் என்று திருமூலர் முதலிய சான்றோர்கள் கூறிய சிறந்த வழியில் கொங்கு வேளாண் பெருமக்கள் நடந்துள்ளனர்.

குருக்கள்புரம், குருக்கள் பாளையம், தம்பிரான் வலசு போன்ற ஊர்கள் குருக்களுக்குத் தனி ஊர்ப் பகுதிகளைக் கொடையாக விட்டு அவர்களுக்கென்றே தனி ஊர்கள் ஏற்பட்டதைக் குறிக்கும்.

கொடுமுடி கொங்கேழு சிவாலங்களில் தலைமையிடம் பெறுவது. தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற ஒரே கொங்குத் தலம் கொடுமுடியே. பாண்டிக் கொடுமுடி என்ற பெயர் கொண்டது. தொன்மையான பாண்டியர் செப்பேடுகள் இத்தலத்தைப் புகழ்ந்து கூறுகிறது. திருவாசகம் பாடிய மணிவாசகப் பெருமானும், 'பாண்டி வெள்ளமே' என்று கொடுமுடிச் சிவபெருமானை அழைக்கின்றார்.

திருமலை நாயக்கர் தளபதியும் அமைச்சருமாகிய இராமப்பய்யன் காலத்தில் அறுபடை வீடுகளில் ஒன்றாகிய பழனிக்கு நியமிக்கப் பெற்ற மருதூர், நாட்டாரப்பன் கோயில், கரூர், கடம்பர் கோயில் சிவாச்சாரியார்களுக்குக் கொடுமுடி சரசுவதி அய்யரே தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டார். ஒருகாலத்தில் திருச்செங்கோடு அர்ச்சகர்களைக் காப்பாற்றியது கொடுமுடி சிவாச்சாரியார்களே யாவர்.

விதரி அத்திப்பாளையத்திற்கும், கொடுமுடிக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. கொடுமுடியின் தானக்கிரயம் விதரி. விதரிக்குத் திருச்சிற்றம்பல நல்லூர் என்ற சைவ சமயம் தொடர்பான பெயரைக் கொடுமுடிக் கல்வெட்டுக் கூறுகிறது. அத்திப்பாளையம் பொன்னாச்சியம்மன் ஊஞ்சல்பாடலில்,

*'சீர்பெருகும் கறைசைநகர்ப் பதியில் மிக்க*
*செயல்விதரி நன்னகர்'*
*'தண்டமிழ்சேர் கறசைமகு டீசர் பங்கில்*
*தயாபரியாள் வடிவுள்ள மங்கை'*
*'சுந்தரம்சேர் மருடீசர் தானும் வாழி'*

எனப்பல இடங்களில் கொடுமுடித் கூறப்படுகிறது.

கொடுமுடி சிவாச்சாரியார்கள் வழிவந்த ஆதிசைவப் பெருமக்களே அத்திப்பாளையம் செம்பூத்த குலத்தாருக்குக் குலுகுருவாக விளங்குகின்றனர்.

பொன்னுக் குட்டிக் குருக்கள், மாணிக்கக் குருக்கள், வழிவந்த பாலசுப்ரமணியக் குருக்கள் இப்போது அத்திப்பாளையம் செம்பூத்த குலத்தாருக்குக் குலகுருவாக விளங்குகிறார்கள். இவர்கள் காசிப கோத்திரம் சார்ந்தவர்கள்.

சமயம், சமூகம், கோயில்வழிபாடு, திருவிழா ஆகிய நற்காரியங்களில் கொடுமுடிக் குல குருக்களின் அறிவுரைபெற்று அத்திப்பாளையம் செம்பூத்த குலத்தார் நடந்து வருகின்றனர். தென்கரைநாட்டு முதலிபாளையம் செம்பூத்த குலத்தார் குறிச்சி–இலக்குவ நாயக்கன்பட்டி சடையபரமேசுவர பண்டிதரையும், பொங்கலூர் நாட்டுச் செம்பூத்த குலத்தார் அலகுமலை நாகீசுவர பண்டிதர் மரபினரையும் குலகுருவாகக் கொண்டு சமய நெறி ஒழுகி வருகின்றனர்.

## *14. புகழ்பாடிய புலவர்கள்*

கொங்கு நாட்டில் புலவர்கட்குப் பெருமை மிக்க மரியாதை இருந்தது. கொங்கு வேளாளர் வாழ்க்கையோடு புலவர்கள் வாழ்க்கை இரண்டறக் கலந்து பின்னிப் பிணைந்திருந்தது. பல நாடுகளில் தனிப்பட்ட பெருமக்கள் புலவர்களை ஆதரித்த வரலாறு உண்டு. ஆனால் ஒரு சமுதாயம் முழுவதும் புலவர்களைப் பொன்னே போல் போற்றி, உபசரித்து பெருமைப் படுத்திய வரலாறு கொங்கு நாட்டைத் தவிர வேறு எங்கும் காண இயலாததொன்றாகும்.

கொங்கு நாட்டின் ஒவ்வொரு ஊரிலும் பரம்பரைப் புலவர்கள் இருந்தார்கள். புலவர்கள் கொங்கு வேளாளர்கள் வீட்டுக்கு வந்து அவர்கள் குலப்பெருமை கூறும் நாட்டுப் பாடலையும், காணிப்பாடலையும் பாடுவர். வாசல் வளம் பாடுவர். வேளாளர் அளிக்கும் பரிசிலைப் பெற்றுப் புலவர் மகிழ்வர். கொங்கு வேளாளர்கள் தங்கள் களங்களிலேயே கொங்கு முறத்தால் தானியங்களை அளந்து புலவர்கட்கு அளிப்பர்.

திருமணச் சடங்குகள் கொங்கு வேளாளர் இல்லங்களில் நடக்கும்போது புலவர்களையும், புலமைமிக்க கலைஞர்களையும் முன்னிலைப் படுத்தியே நடைபெற்றன.

*'பட்டன் புலவன் பண்பாடி தக்கையன்*
*திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன் னேவர'*

சீர்கள் கொங்கு வேளாளர் இல்லங்களில் நடைபெற்றுள்ளன.

திருமணத்தில் புலவர்கள் மங்கல வாழ்த்து உரைத்து கம்பர் வாழியைப் பாடுவர். கொங்கு வேளாளர் திருமண வீடுகளில் ஏரெழுபது, திருக்கை வழக்கம் போன்று வேளாளர் பெருமை கூறக் கம்பர் பாடிய இலக்கியங்கள் படிக்கப்பட்டன.

கொங்கு வேளாளர் திருமண வீடுகள் முன்பு இலக்கிய மேடையாகத் திகழ்ந்துள்ளன.

திருமணத்தின் இறுதியில் திருமண வீட்டில் புலவர்கள் பால் சாப்பிடுவர். "பால்சாப்பிடும் பழனிமலைப் புலவன்" என்றே உரிமைப் புலவர்களை அழைத்தனர்.

விருந்துகண்டபின் வெண்கல வட்டிலில் நிறையைப் பாலை ஊற்றிப் பழம் கலந்து புலவர்களைச் சாப்பிடுமாறு கூறுவர். புலவர்கள் பால்பழம் சாப்பிடும் வெண்கல வட்டில் திருமண வீட்டார் உண்ணும் ஊண்கலமாகும்.

*'தங்களுட கீர்த்தியைக் கொண்டாட அஞ்சுபடி*
*தன்புலமை யாகவைத்து*
*தாணுன் கலத்தில் பழம்சர்க் கரையுடன்*
*தகுந்தேன் மிகுந்துதவியே*
*சந்தகம் புகழ்கங்கை வங்கிசம் விளங்கவே'*

என்பது வேளாளர் **96** கீர்த்திப் பாடலில் ஒரு பகுதியாகும்.

புலவர்கள் பால்சாப்பிடும் சடங்கு இல்லாமல் கொங்கு வேளாளர் இல்லங்களில் சடங்குகள் முற்றுப்பெறாது. புலவர் பால்பழம் சாப்பிடாத வீடுகளைக் கேவலமாகவே மதிப்பர்.

திருமண வீட்டில் தலைக்கும், தோளுக்கும், இடுப்புக்குமாக மூன்று வேட்டிகளைப் புலவர்கள் பெறுவர். பொன்னும் பொருளும் அளிப்பர்.

நாட்டுக்கு நாட்டுப்புலவர்கள் இருந்தனர். கீரனூர் முதலிய பல ஊர்களில் ஊருக்கென்று தனிப்புலவர்கள் நியமிக்கப்பட்டனர். புலவர்கட்கு மானிய பூமிகள் அளித்தனர். கொங்குப் புலவர் பட்டயம் இதனை விரிவாக விளங்குகிறது.

பேரரசர்கள், வள்ளல்கள் எவ்வளவு மிகுதியான பொருட்களையும், பொன்னையும், யானையையும், அணிதேர்ப் புரவியையும் வாரி வழங்கினாலும், நவநிதிக் குவியல்களை நவமணிகளுடன் அள்ளிக் கொடுத்தாலும் கொங்கு வேளாளர்கள் கொங்கு முறத்தால் களத்தில் கொடுக்கும் கம்புக்கு நிகராகாது என்று புலவர்கள் பாடினர்.

*'மேடையால் மாளிகையில் விளங்குமுடி மன்னரெலாம்*
*ஆடைகயால் சேர்சனத்தால் ஆரதிர்ந்து விட்டாலும்*
*நேடரியப் புகழ்படைத்த சிறப்புடைய காராளர்*
*கூடையினால் மொண்டெடுத்துக் கொடுத்தகம்புக்கு*
*ஒவ்வாதே'*

என்பது பழம்பாடல்.

பல இடங்களில் புலவர்களைக் குடியேற்றிப் 'புலவன் பாளையம்' என்ற பெயரில் ஊர்களை ஏற்படுத்தினர். கம்பர் சோழமன்னனிடம் கருத்துமாறுபட்டுச் சோழ நாட்டை விட்டு வெளியேறிய போது கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர்களே அவருக்கு அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றினர் என்பது வரலாறு. கம்பருக்குப் பல வேளாண்குலத் தலைவர்கள் அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தார்கள். கம்பரின் பல்லக்கைச் சுமந்தனர். கம்பரின் பாதச் சம்மாளியை (செருப்பு) தலைமேல் தாங்கினர். எச்சில் காளாஞ்சியை ஏந்தினர்.

நன்றி மறவாத கம்பர் கொங்கு வேளாளர்கட்கு மங்கல வாழ்த்தும், கம்பர் வாழியும் பாடி அளித்தார். வேளாளரே பெரியவர்கள் என்று நிறுத்துக் காண்பித்தார். கம்பரின் கையேட்டுக் காரர்கள் வழியினர் கொங்கு நாட்டில் நிலையாகத் தங்கத் தமிழ்பாடினர். ஒவ்வொரு குலத்தார் தங்களுக்கென்று தனித்தனியாகவும் புலவர்களையும் நியமித்துக் கொண்டனர்.

கொங்கு வேளாளர் தங்களுக்குள்ளும், பிற சமூகத்தாரிடமும் செய்து கொண்ட ஒப்பந்தக்கங்களில் புலவர்கள் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளனர். சமூகத்தில் புலவர்கட்கு இருந்த மரியாதை இதன்மூலம் வெளிப்படுகிறது.

புலவர்களும் கொங்கு வேளாண் பெருமக்களுக்கும் பெரு மதிப்பளித்து அவர்களிடம் வலங்கையேந்திப் பரிசுபெற்றனர். கொங்கு வேளாளரிடம் நீட்டிய கையை வேறு யாரிடமும் நீட்ட மாட்டேன் என்று கூறிப் பிறரிடம் இடக்கையே நீட்டிவாங்குவர். புலவர்கள் சோதனைக்காக வேளாளர்களிடம் பல தகாத செயல்கள் செய்தாலும் கொங்கு வேளாண் பெருமக்கள் பொறுமையாக இருந்து புலவர்கட்கு மதிப்பளித்தனர். விசயமங்களலம், கோயில் பாளையம், தென்கரை நாடு போன்ற இடங்களில் தமிழ்ச்சங்கங்கள் இருந்தன.

*'ஊறிடுமீ கிணறு, போல*
*உதவிய செங்கை மேகம்*
*பாறிடும் கலிய கன்ற*
*பாணிவே ளாளர் தம்மைச்*
*சோறிடும் தெய்வம் என்று*
*சொல்லுவோம் சொல்லு வோமே'*

என்று புலவர்கள் பாடினர்.

அத்திப்பாளையம் பொன்னாச்சியம்மன் பேரில் ஊஞ்சல் பாட்டு என்ற இலக்கியம் ஒன்றுள்ளது. உயர்ந்த மரபுக் கவிதையாக அழகிய நடையில் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தமாக அப்பாடங்கள் உள்ளன. கற்பனை நலமும் உயர்வு நவிற்சியும் கொண்டு நல்ல தேர்ந்த தமிழ்ப்புலமை பெற்ற ஒருவரே அதனைப் பாடியிருக்கக் கூடும்.

அதனை எழுதிப் பாதுகாத்து வைத்திருந்து இந்நூலுக்குப் பதிப்புக்காகக் கொடுத்தவர் ஆத்திப்பாளையம் பரம்பரைப் புலவர் மரபில் வந்த முத்துப்புலவர் என்பவராவார். சேர வேளாளர் மரபில் தோன்றிய அவர்கள் பரம்பரை பரம்பரையாகவே அத்திப்பாளையத்தில் வாழ்கின்றனர். அவர்கள் பரம்பரையில் வந்த முன்னோர் ஒருவரே பொன்னாச்சியம்மன் ஊஞ்சல் பாட்டைப் பாடியிருத்தல் கூடும்.

பங்குனி உத்தரப் பெருவிழாவின் போது பொன்னாச்சியம்மன் ஊஞ்சல் பாட்டைப் புலவர் மரபினர் பாடுவர். முப்பாட்டுக்கார ஆத்தாவும், காப்புக் கட்டிப் பண்டாரமும் இருபுறமும் இருந்து ஊஞ்சலை ஆட்டுவர். புலவருக்கு அன்று வெகுமதிகள் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப் படுவார்.

அத்திப்பாளையம் கோயில் நிகழ்ச்சியைப் போலவே அண்மைக் காலம்வரை செம்பூத்த குலத்தாரின் சமூக நிகழ்ச்சிகளிலும் அத்திப்பாளையம் புலவர்கள் கலந்துக்கொண்டு முன்சொன்னவாறு சிறப்புக்கள் பெற்றுள்ளனர். இப்பொழுது புலவர்கள் வருகையும், தமிழ்பாடுவதும் அருகிவிட்டது. இருப்பினும், பரம்பரைப் புலவர்கள் குடும்பம் அத்திப்பாளையத்தில் வாழ்வது மேல்கரை அரைய நாட்டுக்கும், அத்திப்பாளையத்துக்கும், செம்பூத்த குலத்திற்கும் சிறப்பிற்குரியதாகும்.

## *15. பொன்னாச்சி அம்மன் ஊஞ்சல் பாட்டு*

அம்மன் கோயிலில் விழாக்காலத்தில் அம்மனை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து ஒருவகைப் பாடல் பாடும் வழக்கம் பல கோயில்களில் உள்ளது. அதனை ஊஞ்சல்பாட்டு என்பர். ஊஞ்சல் பாட்டு என்பது தமிழ்ச் சிற்றிலக்கிய வகையில் ஒன்று. ஆடவர், பெண்டிர், புலவர், அர்ச்சகர் யாராவது இப்பாடல்களைப் பாடுவார்கள்.

முன்பு இப்பாடல்களைப் பாடவும், கவரி வீசவும், ஊஞ்சலை ஆடச் செய்யவும் கோயில் ஆடல்மகளிர் பரம்பரையாக இருந்தனர். அவர்களைத் தளிச்சேரிப் பெண்டுகள், பதியிலார், தேவரடியார், மாணிக்கி என அழைப்பர். இப் பழக்கம் இன்று அடியோடு மறைந்துவிட்டது.

இப்பாடல்கள் பெரும்பாலும் பதிகம் போன்று இருக்கும். காப்புச் செய்யுள் நீங்கி பத்துப் பாடல்கள் கொண்டு பெரும்பாலும் காணப்படும்.

ஊஞ்சல் அமைப்பு, அம்மன் சிறப்பு, வடம் தொட்டு ஆட்டுவோர், ஊஞ்சல் ஆடும்போது அம்மையின் நிலை, அம்மையின் அருள் தன்மை, இறுதியில் வாழ்த்து ஆகியவை அடங்கியிருக்கும். தேவாதி தேவர்கள் வந்து

பணிசெய்வதாகக் கூறப்படும். அம்மையை வணங்கி அருள் பெறுவோர் பலர் கூறப்படுவர். அம்மன் கோயில் காணியாளர்கள் வாழ்த்துப் பெறுவர். இறுதி 'ஆடீர் ஊஞ்சல்' எனப்பாடல்கள் முடியும்.

'பொன்னாச்சி அம்மன் ஊஞ்சல் பாட்டு' அத்திப்பாளையம் பொன்னாச்சி அம்மன் கோயில் பங்குனி உத்தரத் திருவிழாவில் சிறப்புடன் பாடப்படும் பாடலாகும். காப்புச் செய்யுள்கள் உட்படப் பதின்மூன்று பாடல்கள் அடங்கியது. பாடல்கள் எண்சீர் விருத்தப் பாடல்களாக மரபுக் கவிதைகளாக நயமுடன் திகழுகிறது.

பொன்னாச்சி அம்மன் கோயில் விழாவில் முப்பாட்டுக்கார ஆத்தா அவர்களும், காப்புக்கட்டிப் பண்டாரமும் ஊஞ்சலின் இருபுறமும் நிற்க அத்திப்பாளையம் பரம்பரைப் புலவர் வகையராவினர் ஊஞ்சல் பாட்டைப் பண்ணுடன் பாடுவர். இப்போதைய விழாக்களில் முத்துப்புலவர் வகையினர் அப்பாடல்களைப் பாடுகின்றனர்.

ஊஞ்சலைப் 'பொன்னூஞ்சல்' என அழைக்கும் வழக்கம் உள்ளது. இப்பாடல்கள் 'தமிழ்மாலை', 'ஊஞ்சல்', 'பூஞ்சொல்மொழி ஊஞ்சல்' என அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் செப்பமாய் உள்ளது. பிரபலமாகப் பாடப்படுகிறது. அன்பினால் பாடப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

வச்சிரக் கால்நாட்டி, வைடூரிய விட்டம் போட்டு, மரகதமணிப் பலகையில் முத்து வடங்கள் பூட்டி ஊஞ்சல் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அழகிய பாடல்களை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. அத்திப்பாளையம் புலவரின் முன்னோருள் ஒருவர் இதனைப் பாடியிருக்கக்கூடும். விநாயகருக்கும், சரசுவதிக்கும் வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது.

நாரதர் சங்கீதம் பாட, தெய்வ கன்னியர்கள் நடனமாட, வானவர்கள் வணங்க, தமிழ் அறிஞர்கள் புகழ்பாடப் பொன்னாச்சி அம்மன் ஊஞ்சல் ஆடுகிறார்.

விஷ்ணு, பிரம்மா, இந்திரன், தேவாதி தேவர்கள் ஆகியோர் வடம் தொட்டு ஊஞ்சல் ஆட்டுகின்றனர். சந்திர சூரியர், அட்டதிக்குப் பாலகர்கள், முனிவர்கள், விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் முருகன், கோயிலில் உள்ள பேய்ச்சி, துலுக்கர், மலுக்கர், சந்யாசி ஆகியோர் எழுந்தருளியுள்ளனர் என்று கூறப்படுகிறது. வாத்தியங்கள் முழங்குகின்றன.

இறுதியில் காணியாளர்களான செம்பூத குலத்தாருக்கும், வேளாளர்கட்கும், இதர குடிமக்களுக்கும் வாழ்த்துக் கூறப்படுகிறது. ஊஞ்சல் பாடிய கவிஞருக்கும் வாழ்த்துக் காணப்படுகிறது.

## விநாயகர் காப்பு

சீர்பெருகும் கறைசைநகர் பதியில் மிக்க
செயல்விதரி நன்னகரின் தேவி வாழி
பேர்பெருகும் பொன்னாச்சி அம்மன் பேரில்
பிரபலமாய்த் தமிழ்மாலை சிறக்க வேதான்
ஏர்பெருகும் இருபொழுது பணிந்து போற்றி
இந்நிலத்தில் அடிமைஅன்பால் ஊஞ்சல் பாட
கார்பெருகும் மும்மதங்கள் பொழியும் செல்வக்
கணபதிதான் இருசரணம் காப்புத் தானே!

## சரசுவதி காப்பு

அட்டதிசை புகழ்விதரி நகரில் மேவும்
அழகுசுந் தரிகவுரி அருள்சிங் காரி
திடமுடன் பொன்னாச்சி அம்மன் பேரில்
செப்பமதாய்த தமிழ்மாலை சிறக்க வேதான்
கட்டளையாய் அடியேனும் பணிந்து போற்றி
காசினியில் பூஞ்சொல்மொழி ஊஞ்சல் பாட
இட்டமுடன் கலைவாணித் தாயே நீயும்
இனியஅருள் புரிந்துமிகத் தலங்கள் வாழ்க!

## ஊஞ்சல் பாட்டு

(1) நன்னயஞ்சேர் வச்சிரத்தால் கால்கள் நாட்டி
நளினவை டூரியத்தால் விட்ட மாக்கி
வண்ணமர கதமணியால் பலகை சேர்த்தி
வன்மையுடன் முத்ததினால் வடங்கள் பூட்டி
இந்நிலத்தில் புகழ்பெருகும் விதரி யூரில்
எழில்பெருகும் அனைவோரும் இணங்கி வாழ்க
அன்னபூ ரணிநிமலி ஆடீ ரூஞ்சல்
அழகுயர்பொன் னாச்சிஅம்மன் ஆடீ ரூஞ்சல்!

(2) சுந்தரஞ்சேர் வாள்நுதலில் திலகம் மின்ன
சுகந்தபரி மளம்புனுகு வாடை வீச
விந்தையுடன் செண்பகப்பூ மாலை சூடி
மெல்லியமல் லிகைமுல்லை சரங்கள் சாற்றி
பைந்தமிழ்சேர் வானவர்கள் வந்து போற்ற
பரிவுட னே விதரிநகர் தன்னில் வாழும்

அந்தரி புரந்தரியே ஆடீர் ஊஞ்சல்
அழகுயர்பொன் னாச்சிஅம்மன் ஆடீர் ஊஞ்சல்!

(3) வடிவுமிகு நுதல்தனிலே சுட்டி யாட
வன்மையுடன் குழையினில்பொன் னோலை யாட
படினமிகு கந்தரத்தில் காறை யாட
பளபளெனக் கழுத்ததனில் பதக்க மாட
நெடியசெங் கரமதினில் வளைக ளாட
நிரமுலவு ரத்தினமோ திரங்க ளாட
அடியர்பங்கில் வாழ்மாது ஆடீர் ஊஞ்சல்
அழகுயர்பொன் னாச்சிஅம்மன் ஆடீர் ஊஞ்சல்!

(4) பாருலகில் மகுடமுடி இடரும் சூலம்
பளபளெனக் கரமதனில் துலங்கி யாட
ஏருலவும் இடையினில்பொன் னோலை யாட
இணைதாளில் சதங்கைதண்டை கொலுசு மாட
வாருலவுந் தனமாதர் கீதம் பாட
வரிசையுடன் கன்னியர்ஆ லாத்தி யேந்த
ஆரமணி பூசணியே ஆடீர் ஊஞ்சல்
அழகுயர்பொன் னாச்சிஅம்மன் ஆடீர் ஊஞ்சல்!

(5) தும்புரரும் நாரதர்சங்க கீதம் பாட
துலங்குதெய்வ கன்னியர்கள் நடன மாட
தம்பமிகு வானவர்கள் செயல்கள் நீட
தாணியில் தமிழறிஞர் புகழ்கொண் டாட
செம்பொன்மணி மேடைசெறி விதரி யூரில்
செழிக்கவளர் காரணியே செல்வ மாதே
அம்பிகை மனோண்மணியே ஆடீர் ஊஞ்சல்!
அழகுயர் பொன் னாச்சி அம்மன் ஆடீர் ஊஞ்சல்

(6) தண்டமிழ்சேர் கறசைமகு டீசர் பங்கில்
தயாபரியாள் வடிவுள்ள மங்கை தானும்
கண்டுமிக வேதயவாய் மகிழ்ச்சி கூர
கண்ணரருள் கமலையனும் வடந்தொட் டாட்ட
இந்தினும் தேவர்களும் வடந்தொட் டாட்ட
அண்டர்தொழும் பதசாரணி ஆடீர் ஊஞ்சல்
அழகுயர்பொன் னாச்சியம்மன் ஆடீர் ஊஞ்சல்!

(7) பிரணவமிகு சந்திரசூ ரியரும் பூவில்
பேரான அட்டதிசை பாலர் தானும்
நிறைபுகழ்சேர் சித்முனி வோர்கள் போற்ற

நீனிலத்தில் காரணிகர் மிகவே யோங்க
மறையவர்க ளிருபுறமும் வேதம் கூற
வானவர்கள் செயசெயயெனக் கவிதை சாற்ற
அருள்புரியும் தயாபரியாள் ஆடீ டூஞ்சல்
அழகுயர்பொன் னாச்சியம்மன் ஆடீடூஞ்சல்!

(8) கயமுகனும் வல்லபையும் சிறந்து சூழ
காளிஅட்ட துர்க்கைஅன்னை அருகில் போற்ற
மயிலில்வரும் குமரர்குரு முருகர் தானும்
வள்ளிதெய்வ யானையுடன் வரிசை கூற
இயல்பேச்சி பொன்சரிந்த துலுக்கர் தானும்
எழில்மலுக்கர் சன்யாசி நிலையில் வாழ்க
அயிலில்விழி மாதரசே ஆடீ டூஞ்சல்
அழகுயர்பொன் னாச்சியம்மன் ஆடீ டூஞ்சல்!

(9) பகவத்தீ வட்டிஆ காச வானம்
பகர்விருசு பொட்டிலிகள் கிடுகி டென்ன
சுகமுற்ற மத்தளங்கள் தாள மேளம்
துருசான பதினெட்டு வாத்தியம் ஓத
தகதத்தி யெனப்பரத நாட்டிய மாட
சதுரான மறையோர்கள் வேதம் கூற
செகமெச்சும் விதரியூர் தன்னில் வாழும்
தேவிபொன் னாச்சிஅம்மன் ஆடீ டூஞ்சல்!

(10) சுந்தரஞ்சேர் மகுடீசர் தானும் வாழி
சுகம்பெறவே வடிவுள்ள மங்கை தானும்
விந்தையுடன் லட்சுமிநா ரணரும் வாழி
மேதினியில் காராளர் மிகவே யோங்க
அந்தமுயர் சீதேவி அம்மன் வாழி
அருள்காளி அட்டதிசை பாலர் வாழி
சுந்தரஞ்சேர் விதரியூர் தன்னில் வாழும்
தேவிபொன் னாச்சிஅம்மன் ஆடீ டூஞ்சல்!

(11) வேதமறை யோர்சைவ மங்கை வாழி
வேளாளர் செம்பூதர் தானும் வாழி
நீதியுயர் கவுண்டர்கா ரணிக்கர் வாழி
நிலையான குடிகள்பரி சனங்கள் வாழி
காதலுடன் ஊஞ்சல்சொன்ன கவிஞர் வாழி
கவிராசர் புவிராசர் கதிக்க வாழி
சீதமுயர் விதரியூர் தன்னில் வாழும்
தேவிபொன் னாச்சிஅம்மன் ஆடீ டூஞ்சல்!

# அருள்மிகு பொன்னாட்சி அம்மன் குடிப்பாட்டு மக்கள் வாழும் ஊர்கள்

## கரூர் மாவட்டம்

அத்திப்பாளையம்
அ – புதூர்
விதறிநத்தம்புதூர்
குளத்துப்பாளையம்
வலையபாளையம்
நொய்யல் குறுக்குச்சாலை
குப்பம் சாலிபாளையம்
ஆண்டிசங்கிலிபாளையம்
காங்கயம்பாளையம்
வேலாயுதம்பாளையம்
முன்னூர்பெருமாள்பாளையம்
க.பரமத்தி – N. வெங்கிடாபுரம்,
ஆதிசெட்டிபாளையம்
குஞ்சாம்பட்டி
காச்சினாம்பட்டி
காசி பாளையம்
அணைப்பாளையம்
கரைப்பசுபதிபாளையம்
எலவனூர்
எல்லமேடு
அகிலாண்டபுரம்
பொன்னாவரம்
சீரங்ககவுண்டனூர்
வாய்க்காலூர்
நம்பகவுண்டனூர்
சேர்வகாரன்பாளையம்
பூமாண்டம்பாளையம்
தொப்பம்பட்டி
தோப்பூர்
குள்ளம்பாளையம்
கஸ்தூரிபாளையம்
காஞ்சேரிக்காவலசு
கரசக்காடு
தலையூர்
பெருமாள்வலசு
ஊத்தூர்
அரவக்குரிச்சி
சின்னாக்கவுண்டனூர்
மூலப்பட்டி
புங்கம்பட்டி
பாறையூர்
உத்தராச்சப்பட்டி
புளியம்பட்டி
செல்லிவலசு
ஆலமரத்துப்பட்டி
ஆண்டிபட்டி
ஈசநத்தம்
க. தூசிபாளையம்
உப்பிடமங்கலம்
வெள்ளாளபட்டி
ராமகவுண்டனூர்
பசுபதி பாளையம்
காந்தி நகர்
கரூர் நகரம்
குறுக்கபாளையம்
4. வேலாயுதம்பாளையம்

## ஈரோடு மாவட்டம்

குப்பம்பாளையம்
ராசாம்பாளையம்
வெட்டுக்காட்டூர்
வெள்ளியம்பாளையம்
முத்தூர்
வேட்டுவபாளையம்

தாண்டாம்பாளையம்
சென்னிமலை
ஈரோடு
பள்ளேகவுண்டன்பாளையம்
பெருந்துறை
சாலைப்புதூர்
காரணாம்பாளையம்
பவானி
நெருஞ்சிப்பேட்டை
அம்மாபேட்டை
சங்கரகவுண்டன்பாளையம்
பெரிச்சிபாளையம்
தாராபுரம்
குள்ளேகவுண்டன்புதூர்
செங்காட்டூர்
சிறுக்கிணறு
ஆலாம்பாளையம்
சோளக்காளிபாளையம்
பெரியவட்டம்
தளுவம்பாளையம்
சின்னப்பயம்புதூர்
தட்டாம்பாளையம்
கள்ளிப்பட்டி
கோபி பகுதி
சத்தியமங்கலம்பகுதி

## கோவை மாவட்டம்

கோவை நகரம்
திருப்பூர்
அன்னூர்
புதுப்பாளையம்
செஞ்சேரிமலை
சுல்தான்பேட்டை
ஒடக்கல்பாளையம்
பூராண்டாம்பாளையம்
நல்லூர்பாளையம்
வதம்பச்சேரி
வாரப்பட்டி
மந்திரிபாளையம்
கரடிவாவி
பொள்ளாச்சி (பகுதி)
சேத்துமடை
குள்ளேகவுண்டனூர்
அரசூர்
மதுக்கரை
தொண்டாமுத்தூர்
செல்லப்பம்பாளையம்
ஒடயகுளம்
வேட்டகாரன்புதூர்
வி. காளியாபுரம்
ஆனைமலை
கோட்டூர் மலையாண்டி பட்டணம்
பொன்னாண்டகவுண்டனூர்
கொம்மாண்டம்பாறை
சங்கம்பாளையம்

## சேலம் / நாமக்கல் மாவட்டம்

தண்டா
கொளத்தூர்
மேட்டூர்
நாமக்கல்
சேங்கட்டிபாளையம்
பாண்டமங்கலம்
கம்பளாயி
மோகனூர்
செவிட்டரங்கன்பட்டி
ஆலாம்பாளையம்
குன்னாங்கல்பாளையம்
கிடாரம்
காட்டுப்புத்தூர்
சுள்ளிப்பாளையம்
முத்தக்காபட்டி

சேந்தமங்கலம் (பகுதி)
செல்லப்பன்பட்டி
ஒடுவந்தூர்புதூர்
ராசிபுரம் (பகுதி)
கரசப்பாளையம்
சிங்கலாந்தபுரம்
சேலம் (பகுதி)

## திண்டுக்கல் மாவட்டம்

பழநி
மஞ்சநாய்க்கன்பட்டி
முத்துநாய்க்கன்பட்டி
ஒட்டன்சத்திரம்
கட்டச்சின்னாம்பட்டி
துலுக்கவலசு
செந்தலப்பட்டி
தூசிபாளையம்
கூம்பூர்
பச்சலாக்கவுண்டனூர்
வேடசெந்தூர்
விடுதலைப்பட்டடி
கள்ளிமந்தயம்

மயிலாடுதுறை பகுதி
கும்பகோணம் பகுதி
தஞ்சைநாசை பகுதி
திருவாரூர் பகுதி
தாம்பரம் சென்லை பகுதி
கேரளா பகுதி
மைசூர் பெங்களூர் பகுதி
ஆந்திரா பகுதி
பாண்டிப்பகுதி

குறிப்பு :– எனக்கு கிடைத்த தகவல் படி பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. விட்டிருந்தால் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

அ.பொ.க. அத்திப்பாளையம் (P.O)
கரூர் மாவட்டம் 639 111.

# அம்மன் போற்றிப் பதிகம்


(1) ஓம் பொன்வளர் எங்கள் தாயே போற்றி
ஓம் பொன்னாச்சி எங்கள் அம்ம போற்றி
ஓம் கண்வளர்த் தருளும் காரிகை போற்றி
ஓம் கவிதை வழங்கும் நாயகி போற்றி
ஓம் காஞ்சியை ஆளும் மாதா போற்றி
ஓம் காமாட்சி உந்தன் பாதம் போற்றி
ஓம் காசியில் வீசும் கனலே போற்றி
ஓம் கருணைமிகு விசாலாட்சியே போற்றி
ஓம் மங்களநாயகி மனதில் போற்றி
(10) ஓம் மதுரைமீனாட்சி அம்மா போற்றி
ஓம் காஞ்சிமாநதிக் கரையாள் போற்றி
ஓம் கானகந்தனைக் காப்பாய் போற்றி
ஓம் சற்குணவல்லி அம்மா போற்றி
ஓம் சௌந்தரநாயகி பாதம் போற்றி
ஓம் தாமரை அம்மாதாள்தனைப் போற்றி
ஓம் தங்கமாங்கனி அமுதே போற்றி
ஓம் அல்லியங்கோதை அணியே போற்றி
ஓம் அகிலம் ஆண்ட ஈஸ்வரி போற்றி
ஓம் கயிலாயத்தின் தலைவி போற்றி
(20) ஓம் கமலாலயத்தின் அம்பிகை போற்றி
ஓம் இளங்கிளை நாயகி இனிதே போற்றி
ஓம் ஏலார்மனதருள் குழலி போற்றி
ஓம் திரிபுரசுந்தரி தேவி போற்றி
ஓம் சிவனின் ஆனந்தவல்லியே போற்றி
ஓம் புஷ்கரணீ உன் பூமலர் போற்றி
ஓம் புண்டரீகவல்லி அம்மை போற்றி
ஓம் நித்திலவல்லி நின்பதம் போற்றி
ஓம் நில தாயாட்சி நினைவே போற்றி
ஓம் நீலோற்பலாம்பிகை தாயே போற்றி

(30) ஓம் நேரொருவரில்லாய் பாதம் போற்றி
ஓம் மேற்றளிநாயகி மேதினி போற்றி
ஓம் மேவார்பொன்னே முகலி போற்றி
ஓம் உண்ணாமுலை அம்மா உன்னை போற்றி
ஓம் உமையே உந்தன் உடுக்கை போற்றி
ஓம் அறம் வளர்த்த அருங்கனி போற்றி
ஓம் அன்னபூரணி அம்மே போற்றி
ஓம் அபிராமிபாதம் கடவூர் போற்றி
ஓம் அதிகைநாயகி அணிந்தருள் போற்றி
ஓம் பாலாம்பிகையின் பண்பே போற்றி
(40) ஓம் பாலினும் நன்மொழி அரசி போற்றி
ஓம் தர்மசம் வர்த்தினி தருவே போற்றி
ஓம் தங்கமிகுமலர் அம்மன் போற்றி
ஓம் ஆனூராளே உன் அடி போற்றி
ஓம் அத்தனூராளே அனுதினம் போற்றி
ஓம் வண்டார் குழலி வடிவே போற்றி
ஓம் வான்முகிலம் மையும் மழையே போற்றி
ஓம் தேனார் மொழியே திருமுடி போற்றி
ஓம் செந்தமிழ் பெரியதேவி போற்றி
ஓம் சுந்தரநாயகி துணையே போற்றி
(50) ஓம் சோமசுந்தரி வருவாய் போற்றி
ஓம் ஒப்பிலாமணியே உமையே போற்றி
ஓம் உணர்வில் ஞானாஅம்பிகையே போற்றி
ஓம் மங்கையர்க்கரசி நாச்சியே போற்றி
ஓம் மகரயாழ் இசைத்தம்மா போற்றி
ஓம் பூண்முலையம்மையின் புகழ்தனை போற்றி
ஓம் பூம்பொழில்பிரான ஈஸ்வரி போற்றி
ஓம் மூகாம்பிகையே முன்னே போற்றி
ஓம் மூடார்மந்திரப் பீடேஸ்வரி போற்றி
ஓம் அழகுநாச்சியே அணிந்தே போற்றி

(60) ஓம் அகோரவீமாத்தியே போற்றி
ஓம் அங்கையர்கண்ணி அம்மா போற்றி
ஓம் அழகுமலையான் காதலி போற்றி
ஓம் பர்வத பர்த்தினி பாதம் போற்றி
ஓம் பராசக்தியே பரம்பொருள் போற்றி
ஓம் காந்தி மதியே நெல்லையில் போற்றி
ஓம் கார்குழல் வாயம்மை விழியே போற்றி
ஓம் பன்மொழி அம்மை பாதம் போற்றி
ஓம் பட்சநாயகி திருவடி போற்றி
ஓம் வனமுலைநாயகி வரவே போற்றி
(70) ஓம் வைகலாம்பிகை தாயே போற்றி
ஓம் கருணாம்பிகையின் கருணை போற்றி
ஓம் கற்பகவல்லி பொற்பாதம் போற்றி
ஓம் காவியங்கண்ணி அம்மை போற்றி
ஓம் கிருபாநாயகி தீந்தமிழ் போற்றி
ஓம் கோல்வளை அம்மை குணமே போற்றி
ஓம் கோதை நாயகி பாதணி போற்றி
ஓம் பூங்குழலம்மையின் புகழே போற்றி
ஓம் பொற்கொடி நாயகி மலரே போற்றி
ஓம் மரகதவல்லியின் மாண்பே போற்றி
(80) ஓம் மதுரவனநாயகி மாதா போற்றி
ஓம் பங்கஜ வல்லி யுன் பாதம் போற்றி
ஓம் பாலசுந்தரி அமுதே போற்றி
ஓம் பஞ்சினும் மெல்லடி அம்மை போற்றி
ஓம் பாவமகற்று யோகாம்பிகை போற்றி
ஓம் மருவார் குழலியின் மனமே போற்றி
ஓம் மட்டுவார் குழலி திருவருள் போற்றி
ஓம் அபயாம்பிகையே நின்அடி போற்றி
ஓம் அருஞ்சொல்நாயகி அடியேன் போற்றி
ஓம் வெள்வளை நாயகி வீரம் போற்றி

(90) ஓம் வேயுறுதோழிரளி வினைதீர் போற்றி
ஓம் அம்பு ஆயிரவல்லியே போற்றி
ஓம் அன்புக் கொடியாளன்னையே போற்றி
ஓம் சீர்காழிஆளும் சிவகாமி போற்றி
ஓம் திருக்காமமலர நாச்சியே போற்றி
ஓம் கருகாக்கும் நாயகி கதிரே போற்றி
ஓம் கருந்தாழிகுழலி இமையே போற்றி
ஓம் வடுவகிர்கண்ணி இதழே போற்றி
ஓம் வண்டுவார் குழலி அமுதே போற்றி
ஓம் குன்றமுலை மலர் குணத்தாய் போற்றி
(100) ஓம் குயிலினும் நன்மொழி குரலோய் போற்றி
ஓம் அரும்பன்னவன அரசி போற்றி
ஓம் அரியதிருக்காளி அம்மா போற்றி
ஓம் கரும்பனையாளைத்தினம் தினம் போற்றி
ஓம் கல்யாணசுந்தரி உனைநிதம் போற்றி
ஓம் திருநிலைநாயகி தினமுனைப் போற்றி
ஓம் செல்லாண்டியம்மா தீர்வினை போற்றி
ஓம் மருதகாளியே மனதால் போற்றி
(108) ஓம் கரியகாளியை கனவிலும் போற்றி
ஓம் பெரியபொன்னாச்சியை பெருமையாய்ப் போற்றி
ஓம் சின்னப்பொன்னாச்சியை சிறப்புடன் போற்றி
போற்றி ! போற்றிப் பொன்வளர்மணியே போற்றி ! போற்றி.

கவிஞர் அ.பொ.கந்தசாமி



**SCROLL EDP** Cbe - 2 ✆ 91-422-453560